


# தமிழன் தமிழனாக

அம்பிளாந்துறையூர் அரியம்

Divisional Secretary
Manmunai South West
Paddiruppu



# தமிழன் தமிழனாக

## நூல் விபரம் :


| | |
|---|---|
| நூலின் பெயர் | : "தமிழன் தமிழனாக" |
| வகை | : கவிதை |
| ஆக்கியோன் | : அம்பிளாந்துறையூர் அரியம் |
| முதல் பதிப்பு | : சித்திரை 2014 |
| உரிமை | : நூலாசிரியர் |
| முகவரி | : "இரதாலயம்" அம்பிளாந்துறை |
| முகப்பு ஓவியம் | : ந.சிவதர்சன் (சிவா) அம்பிளாந்துறை |
| பக்கம் | : 268 |
| விலை | : ரூபா. 300.00 |
| பதிப்பகம் | : வணசிங்கா பிறிண்டர்ஸ், இல.126, திருமலை வீதி, மட்டக்களப்பு. |
| சர்வதேச நியம நூல் இல. (ISBN) | : 978-955-44475-0-9 |

“நெஞ்சில் உதித்தவைகளை
நேரிய தமிழால் செதுக்கி
நூதனங்கள் கோர்த்து
நூலாக்கம் செய்துள்ளேன்
சுவைப்போர்க்கு தேனாகும்
சிலருக்கு வேப்பங்காயாகும்
எதுவானாலும் பரவாயில்லை
என் தமிழ் இதுவாகும்.
படித்துப் பயன்பெறுவீர்
பற்றுள்ள உறவுகளே.”

- அம்பிளாந்துறையூர் அரியம் -

2017
1998
19

# சமர்ப்பணம்



உறுதி தந்த அப்பாவுக்கும் உணர்வு தந்த அம்மாவுக்கும்
பற்றுமிக்க தந்தைக்கும், பசியை தீர்த்த தாய்க்கும்
பாதம் பணிந்த சமர்ப்பணம்

**உயர்திரு. கந்தப்போடி உடையார் பாக்கியசெல்லம்** (அப்பா)

ஓய்வு பெற்ற கிராமத்தலைமை அதிகாரி (விதானையர்)

முன்னாள் மட்டுநகர் மாநகர மக்கள் பிரதிநிதி, ஆயுள்வேத வைத்தியர்.

**மண்ணில் :- 20.10.1911** **விண்ணில் - 28.07.1985**

**கந்தப்போடி விதானையார் சரஸ்வதியம்மா** (அம்மா)

**மண்ணில் :- 15.08.1920** **விண்ணில் - 15.12.1988** 1998

# உட்பொதிவு


- ஆசிச்செய்தி i
- வாழ்த்துச்செய்தி iv
- முகவுரை v
- அணிந்துரை ix
- யார்இந்த அம்பிளாந்துறையூர் அரியம்' xii
- என்னுரை xv

*அ தொடக்கம் வை வரை*

- அறுவடை 01
- அவர்கள் தான் 02
- அடுத்த ஆண்டு 03
- ஆணை 04
- ஆருயிர் 05
- இறைவன் 06
- இந்தநாடு 07
- இங்கே வந்து பார் 08
- இந்த மண் 09
- ஈனச்செயல் 10
- ஈடுபாடு 11
- உறுதி 11
- உருப்படியாய் 12
- உழவன் 13
- ஊறு 14
- ஊழி 14
- என்பதை 15
- எட்டிப்பிடி 16
- ஏவல் 17
- ஏகமனதாய் 18
- ஐங்கரன் 19

- ஒத்தாசை 20
- ஒட்டாண்டி 21
- ஒளஷதம் 22
- கரை 23
- காவியம் 24
- கிழக்கு 25
- கீதங்கள் 26
- குண்டர்கள் 27
- கூபற்று 28
- கெலி 29
- கேளிக்கை 30
- கைகுலுக்கு 31
- கொள்கை 32
- கொள்கை சாகாது 33
- கோபம் 34
- கௌசல்யம் 35
- சங்கே முழங்கு 36
- சாத்வீகம் 37
- சித்தம் 38
- சீக்கிரம் 39
- சுறுசுறுப்பு 40
- சூலம் 41
- செய் 42
- சேவகம் 43
- சொர்ப்பணம் 44
- சோரம் 45
- சௌகரியம் 46
- ஞானம் 47
- தலைவன் 48
- தாளாண்மை 49
- தித்திப்பு 50

- தீவிரம் 51
- துவம்சம் 52
- தூதுணம் 53
- தெருமரல் 54
- தேயாத தமிழ் 55
- தைனியம் 56
- தொடர்பு 57
- தோன்றில் 58
- நடவடிக்கை 59
- நாளும் 60
- நிவாரணி 61
- நீலகண்டன் 62
- நுனிப்பு 63
- நூர்தல் 64
- நெடுவழி 65
- நேயன் 66
- நொவ்வல் 67
- நோற்றல் 68
- பயன் 69
- பாரதம் 70
- பிரச்சினை 71
- பிழை 72
- புன்னகை 73
- பூர்வீகம் 74
- பெரியவள் 75
- பேதமை 76
- பைங்கிளி 77
- பொன்மொழி 78
- போர் 79
- பௌத்தன் 80
- மட்டக்களப்பு 81

∝ மறுபடி 82
∝ மான்மீயம் 83
∝ மிடல் 84
∝ மீறாமல் 85
∝ முன்மாதிரி 86
∝ முதாதையர் 87
∝ மெட்டி 88
∝ மேற்கொண்டு 89
∝ மைந்து 90
∝ மொச்சை 91
∝ மோகனம் 92
∝ மௌசு 93
∝ யமதர்மன் 94
∝ யான் 95
∝ யோதனம் 96
∝ ரசிகன் 97
∝ ராஜ்ஜியம் 98
∝ லங்கணம் 99
∝ லாந்து 100
∝ வணக்கம் 101
∝ வாய்ப்பு 102
∝ விருப்பு 103
∝ வீண் 104
∝ வெறுக்கை 105
∝ வேட்கை 106
∝ வைதாளிகர் 107
∝ அ–ஔ 108
∝ எண்கவிதை 109
∝ உண்மைச்சமாதானம் 110

*பொதுவானவை......*

∝ புலனே 112

∝ யாதும் ஊரே யாவரும் கேளீர் 113
∝ அறுதியாய் விழுவார் 114
∝ தமிழாட்டம் 115
∝ கொக்கட்டிச்சோலைப் படுகொலை 116
∝ சமாதானம் வந்துவிடும் 118
∝ பொன்னாடை 119
∝ சத்தியமாய் பசி தீரும் 121
∝ தேசத்தின் கபடம் 122
∝ செல் சேர்விஸ் திருமணம் 123
∝ யார் தலைவன் 127
∝ தமிழ் விருந்தோம்பல் 128
∝ உலகம் 129
∝ வடகிழக்குத் தாயகம் 130
∝ இலங்கை நாடு 131
∝ மட்டக்களப்பு 132
∝ படுவான்கரை 134
∝ அம்பிளாந்துறைபதி 135
∝ பெண்ணால் முடியும் 137
∝ காதலிப்பவர் சிந்தனைக்கு 138
∝ சீதனம் கேட்கும் தமிழனுக்கு.... 139
∝ கணனிக்காதல் 140
∝ எப்போது நீ திருந்துவாய் 142
∝ உள்ளார்ந்த காதல் 143
∝ எப்போதும் உண்மை 144
∝ யார் கதிரை 144
∝ ஆண்டவனே பாரப்பா! 145
∝ இது எங்களின் சீவியம் 145
∝ திசைமாறிப் போகின்றாள் 146
∝ சமத்துவமாக வாழ்ந்திடுவோம் 146
∝ வழிகாட்டல் பாதை 147
∝ செல்வந்த நாடே 147

- அங்கராணி 149
- காடுநோக்கி 149
- சண்டைப்புறா 149
- இன்றைய தேவாரம் 150
- படுகொலை நாட்டிலே 150
- இன்றைய பாப்பாவுக்கு 151
- சில்லறைக்காசுக்கு எலும்புக் கூடுகள் 152
- அவலச் செய்தி 153
- சுடுகாடும் எமக்கில்லை 154
- நாமிருக்கப் பயம் ஏன்? 155
- சமத்துவம் 158
- இறுதிச் சமாதானம் 160
- ஒளியைத்தேடி 161
- சுனாமி 163
- ஊர்வாகை மரம் 166
- எனக்கும் பெருமை 167
- இன்றைய சமாதானம் 168
- அப்படியானால் எப்படி நீங்கள் 170
- பட்டமும் புகழும் பாராட்டும் 171
- இறைவன் என்ன செய்வது 173
- அவர்களும் இவர்களும் 174
- காதல் யோக்கியம் 175
- தமிழரின் சாதி 177
- தமிழனில் ஒற்றுமை வருமா? 178
- நன்றி 179
- கிரகணம் 180
- சாந்தியும் சமாதானமும் 181
- உறுதியுடன் வாழ்த்து 183
- தமிழ் பொங்க 184
- தமிழ் தமிழனாக 185
- தீபாவளி எங்கே இனிக்கும் 187

- சித்திரையும் – வைகாசியும் 188
- யுத்த பெருமான் 189
- முகவரி 190
- சம்பூர் மக்களின் நிலை 192

*பாடல் வரிகள் ......*

- இலங்கை மாதாவும் எம்மூர் தம்பியும் 195
- கிராமிய பாடல் 198
- மௌனம் கடவுளின் விடையா 200
- உண்மை தெரிந்துகொள் 201
- ஊர்ப்பாடல் 202
- ஆண்ட தமிழ் ஊர் 203
- அன்னையர் தினப்பாடல் 204
- புலம்பெயர் மகனின் குரல் 205
- மாசு இல்லா மட்டக்களப்பு 206
- உன்னிச்சைக் குடிநீர் 207
- ஒருநாள் ஜெபிக்கும் 208
- மௌனம் கடவுளின் விடையா 209
- வழிப்பிள்ளையாரே 210
- நெற்கதிர் சிரிக்குது 211
- கடவுள்தான் தரவேண்டும் பன்னீர் 212
- பண்டாரவெளியில் கண்கண்ட தெய்வம் 213
- தாந்தாமலை முருகனுக்கு ஒருவேண்டுதல் 215
- வேலவனை எங்கே தேடுவது 217
- வாழ்கவே தமிழ்மொழி 218
- வணக்கம் 219
- சிவன் கோயில் 220
- கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய காவடிச்சிந்து 221

*அரியம் சிந்தனை*

- அரியம் சிந்தனைகள் 227

# ஆசிச்செய்தி

**முத்தமிழரசு சிவயோகச் செல்வர் த.சாம்பசிவம் சிவாச்சாரியார், B.Com பிரதமகுரு காயத்ரி சப்தரிஷி வளாகம், மட்டக்களப்பு**

கானல் வரிபாடி கன்னியர்கள் கூடி
ஆனந்த லயம் போடும் வாவிதனில்
தேனினிய நாதத்தை இசைவாய் நக்கி
மீனினங்கள் பாடி மகிழ் மட்டுநகரில்
செம்மணலான் கருமணலாளை சாரும்
“அம்பிளாந்துறையூர் அரியம்” உணர்ச்சிச்
செம்மையுளம் சென்னிமிசை வாழுமொவ்வோர்
நம்தமிழன் தமிழனாக வாழச்செய்ய
செவ்விரத்த வரிகளாய் விளங்கு செய்யுள்
நம்பிக்கை துரோகிகளை நசித்தல்
கும்பிட்டுப் பிழைப்பார்க்கும் அரியனின்
வம்புச்செறி சொல்லமுதும் உண்ண உண்டெனப்பேன்
ஈழத் தமிழகத்தின் உணர்ச்சிக் கவிஞன்
அழகுத் தமிழ் அறிஞன் அண்ணன் காசிஆனந்தன்
உழவு தமிழ் பயின்றுணர்ச்சிக்
கழறுதால் தமிழன் தமிழனாக
உளமாரச் சொல்லியுள கவிதை கற்க
வளமாகா தமிழன் வையகத்திருப்பானோ
ஆன்மீகம் தேடாத அறிஞர்கட்கெல்லாம்

வான்மீகி போல் வகை வகையாய் விளம்பியுள்ளான்
தான்தோன்றி அப்பனுக்கும் தாந்தாமலையானுக்கும்
மான்போன்ற மனத்தனாய் மண்டியிட்டு பாடியுள்ளான்
ஒழுக்க விழுமியங்கள் ஓதாத கல்வி முறை
வழுக்கி விழுந்து பெற்றவரை வெட்டும் காலம்
பழுத்த பழமாய் பக்குவம் செய் சிந்தனைகள்

கொழுக்கட்டைக்குள் தங்கக் கணையாளியே
அரசியல் கவிகளிலே அரியாக உறுமுகிறான்
உரங்கொண்ட நெஞ்சால் உரமாக சொல்லியுள்ளன்
அம்பிகாபதி காதல் அரிய நேத்திரத்தில்
வம்பி போல் சுற்றி ரீங்காரம் செய்கின்றது
ஒழுக்க ஊர்ச்சிதத்தை ஒப்பரும் அடைவுகள்
விழுது போற் தாங்க விதைத்துள்ள வரியெலாம்
உணர்வு கலங்கி உள்ளுணர் வரவுமாக
உணர்ச்சிப் பெருக்கோடு உவந்துளான் படிமின்
உழைத்துண்ணும் சமூகத்தை காணத்துடிக்குமிவன்
குழைந்து சொல் வரிகள் பாராட்டுக்குரியன
கால்நடை அபிவிருத்தி உத்தியோகனாயினும்
கால்பதித்தான் ஊடகவியல்துறைகளிலே
சுதந்திரன் கேசரி தினபதி தினகரனில்
சதக்கிரத தீப்பொறியாய் கவிதை சொரிந்தான்
பாடசாலை பருவ காலம் முதலாக மனம்
நாடலுற்ற தமிழுணர்வு நம்தேச மன்றிலே
கொட்டுமுரசொலி குரல் கொடுக்கும் உறுப்பினராய்
மட்டக்களப்பு தேர்ந்தெடுத்து மகிழ்கிறது
சீராண்மை செய்திகளை அடலேறாய் சொல்லுமிவன்
பேராளனாக பெருமையுற்றான் கவிதை பெய்தான்
ஊராளுமரியன் கவிசொல்லமரியன்
பேராலும் அரியன்தான் ஊடகத்துக்கும் அரியன்தான்
கவிதைப் பூங்கொத்தை தமிழன் தமிழனாக
புவியிலுலவ விடுக்கின்றான் என அறிந்து
அகமகிழ்ந்தேன் மகவின் தமிழ் உணர்வு கண்டேன்
இகமேல் எமக்கு நேத்திரனை பெற்றளித்த அன்னை
சரஸ்வதி அம்மா என்றால் அரியனுக்கு கவிதையை
பிரமித்தாய் வந்தணைந்து பதமளிப்பாள்தானே
மைந்தவனின் மார்புதட்டி மண்வாழ் தமிழர்க்காய்
கந்தப்போடி விதானையாரின் கண்ணியம் காக்கின்றான்
மட்டக்களப்பு மாநகர சபையிலே தந்தை
வேட்பு நிறைந்த உறுப்பினராய் பொலிந்தரிய

திட்டம் வகுத்து சொல்லின் செல்வர்க்கு திண்தோளீந்தவர்
அட்டி அட்டிகம் அட்டிமைத்தூள்தரும் வைத்தியராம்
நேயமிகு பாக்கியசெல்வம் நேத்திரன் துடுக்கை
வியந்தடக்கி வையகம் போற்றும் வாழ்வளித்துள்ளார்
பெற்றவனின் பண்பை பேணி வளர்த்த பிள்ளை
சொற்றமிழால் தமிழன் தமிழனாக சொல்லியுள
கவிதைத்தேன் துளிகள் எக்காலும் வாழ்நிதினிக்கும் காண்
புவியிலே அரியனே நின்படைப்பு இன்னும் வேண்டுமே
எழுதி எழுதி தமிழனை எழுர்ச்சியுறவை மகனே

என்னுளிருந்தெனை இயக்கும் சரஸ்வதியே
மன்னுபுகழ் அம்பிளாந்துறை - மைந்தனரியன்
செந்தமிழ் கவிசொல சீர்பதமீந்ததுபோல்
சந்ததமும் காத்தருள்வாய் வாள் தாய்

தமிழ் உணர்வு கொண்ட தந்தையின் செல்வா
அமிழ்தினிய கவிதந்த - சமஷ்டி
மகனே அரியனே மண்ணின் மித்திரா
குகனமேறையன தாள் காப்பு

உணர்வு கோல் கொண்டெழுதம் அரியா
குணவைக் கூத்தூருன் மைந்தா - கணமும்
தமிழன் தமிழனாக பாடியுள்ள
அமிழ்தினிய பா வாழ்க

அகரம் வாழ்க அம்பிளாந்துறை வாழ்க
உகரமாய் நிற்குமுன் உணர்வு வாழ்க
இகமேல் தமிழ்வாழ்க இறையருளால்
மகவரிநேத்திரன் வாழ்க வாழ்க

**குரு அடிப்பொடி**
**சிவயோகச் செல்வன்**
**முத்தமிழரசு சிவகதாவாரி சிவயோகச் செல்வன்**
**த.சாம்பசிவ சிவாச்சாரியார்** (B.Com)
**காயத்திரி கலாசார பீடம்**
**புதுமுகத்துவாரவீதி, கல்லடி**
**மட்டக்களப்பு.**

# வாழ்த்துச்செய்தி

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியச்செல்வம் அரியநேந்திரன் “அம்பிளாந்துறையூர் அரியம்” எனும் புனை நாமத்தில் அவரின் மனதில் உதித்த சிந்தனையின் வெளிப்பாடாக ஒர கவிதை நூலைப்படைத்து வெளியிடுதலையிட்டு மிகுந்த பாராட்டு தலையும் மனமகிழ்ச்சியையும் தெரிவிக்கின்றேன்.

எந்தவொரு இனமும் தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் தனது தாய்மொழியி லும் தனது இனத்துக்குரிய தனித்துவமான பாரம்பரியக் கலாச்சார விழுமியங்களை பாதுகாக்கவும் அதனை வளர்த தெடுக்கவும் அதி கூடிய அக்கறையுடன் தொடர்ந்தும் செயல்பட வேண்டும்.

அந்த அக்கறையானது தன்னோடு மட்டுமல்லாமல் தான் சார்ந்த சமூகத்திற்கும் கொண்டு செல்லப்படும் போது தான் அந்த சமூகமும் அதனைப் பின்பற்றும். அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டு செல்லும் பல மார்க்கங்களில் ஒன்றுதான் இந்த நூலாகும். “தமிழன் தமிழனாக” எனும் தலைப்பிடப்பட்டு சமூக அரசியல் ஆன்மீகம் ஒழுக்க நெறி முறைகளை தூண்டும் விதத்தில் இந்நூல் அமைந்துள்ளது.

இயல்பாகவே தமிழ் உணர்வு மிக்க தம்பி அரியம் காலத்தின் தேவை கருதியும், சமூகத்தின் நல்வழியினைக் நோக்காகக் கொண்டும் வடித்திருக்கும் இப்புத்தகமானத பொருத்தமான செயல்பாடாகவே நான் கருதுகிறேன்.

அனைவரும் படித்துப் பயன்பெறவும் அந்தப் பயனை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளவும் வேண்டுமென எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**இரா. சம்பந்தன்**
**தமிழ்தேசியக் கூட்டமைப்பு தலைவர்**
**இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர்.**

# முகவுரை

## தமிழன் தமிழனாக . . . சில அவதானிப்புக்கள்

இத்தொகுப்பு நூலுருவிலே ஒரு தொகுப்பாக இருந்தாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடாதனவான கவிதை, வசனம், என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளமையால் இரு நூல்களின் தொகுப்பு என்று கூடக் கருதலாம்.

எவ்வாறாயினும் இவ்விரு வடிவங்களும் இன்றைய அரசியற் சார்பான விடயங்களையே பெருமளவு கொண்டிருப்பது மனங்கொள்ளத் தக்கது.

இலங்கைத் தமிழ் கவிதைகளில் அரசியற் சார்பு என்பது ஏறத்தாழ சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளிலிருந்தே முகிழ்க்கின்றது. அன்றைய அசரின் சிங்கள மொழித் திணிப்புக்கொள்கை காரணமாக அதற்கெதிராக தமிழரசுக் கட்சி முன்னெடுத்த அகிம்சைப் போராட்டச் சூழலிலே மொழியுணர்ச்சி கவிதைகள் முதன்முதலாக உருப்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலே இராஜாபதி, ஆரையூர் அமரன், ஜீவா ஜீவரெத்தினம், நீலவாணன், காசி ஆனந்தன், எருவில் மூர்த்தி முதலான பலகவிஞர்கள் உருவாகினர். கவிஞர் காசிஆனந்தன் இவர்களுள் முக்கியமானவர். உயிர் தமிழுக்கு என முழுங்கிய வர் அது காரணமாகப் பல தடவைகள் சிறை சென்றவர்.

அறுபதுகளிலே இடதுசாரி போக்குடைய முற்போக்கு கவிஞர்குழாம் உருவாகியது. இவர்களது அரசியற் சார் வர்க்க நோக்குடையது என்பது வெளிப்படை. சுபத்திரன், நுஃமான், சண்முகம், சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, தோழர் இஸ்மாயில் முதலானோர் இவ்வழிச் சென்றனர். கவிஞர்களாகின்றனர்.

எழுபதுகளிலே ஆயுதப் போராட்டக் குழுக்கள் விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட ஆரம்பித்த சூழலிலே மேற்கூறிய போக்குத் தளர்ச்சியடைந்தது. தமிழ்த்தேசிய

உணர்ச்சி மேலோங்க இன விடுதலையுணர்ச்சிக் கவிதைகள் உருப்பெற்றன. முன்னர் வெவ்வேறு வழிச்சென்ற காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை ஆகியோர் இப்போது ஒன்றுபட்டு இன விடுதலைக் கவிதைகளை இசைக்க ஆரம்பித்தனர். இத்தகைய சூழலில் கவிதை உலகிற்குள் பிரவேசித்தவரே இத்தொகுதிக்குரிய படைப்பாளி. எனினும் இவ் ஆரம்பகாலத்தில் இவரெழுதிய பல கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெறவில்லை. சில கவிதைகள் இடம்பெற்றிருக்கக் கூடும். (எழுதிய ஆண்டு குறிப்பிடப்படாதமையால் அதுபற்றி அறியமுடியவில்லை) எவ்வாறாயினும் இத்தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகள் சமகாலத்துக் குரியன. அதாவது போர் நின்றுவிட்ட பாலத்துக்குரியனவாக உள்ளன.

இன்றைய சமகாலத் தமிழ்ச் சமூகத்தின் நிலை எத்தகையது. அரசியல் போக்கு எத்தகையது. இன்றைய தமிழ் மக்களது சமாதான வேட்கை சமாதான எதிர்பார்ப்பு, அதில் நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை ஏமாற்றம் முறபட்ட கால ஒடுக்குமுறை நிகழ்வுகள் முதலியன பற்றியும் இத்தகைய சூழலில் அரசினது செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைப்பனவா கவும் விமர்சிப்பனவாகவும் உள்ளனவே இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான அரசியற் கவிதைகள் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர் என்ற விதத்தில் முறபட்ட காலத்து தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான கவிஞர்கள் அல்லது எழுத்தாளர்கள் எழுப்பாத கேள்விகளை எழுப்புவனவாக இவரது கவிதைகள் காணப்படுகின்றன என்பதே இத்தொகுப்பில் உள்ள கவிதைகளின் முக்கியத்துவமாகின்றது. இம் என்றால் தனக்கு எது நடக்குமென்று அறிந்தும் கூட மிகத் துணிவான முறையில் இவர் எழுப்புகின்ற கேள்விகளும் விமர்சனங்களுமே இவரது கவிதைகளின் பலமாகவுள்ளன. அத்தகைய கவிதைகள் பேசும் விடயங்கள் சிலவற்றில் எனக்கு உடன்பாடில்லாவிட்டாலும் இக்கவிஞரது துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது என்பதில் தவறில்லை.

மேற்கூறிய சிறப்பு இக்கவிதைகளின் உள்ளடக்கம் சார்ந்த விடயமாகின்றது. இக்கவிதைகளின் வெளிப்பாட்டு முறை எத்தகையது என்பது அடுத்த முக்கியமான கேள்வி. இலக்கிய வடிவங்கள் ஒவ்வொன்றிற்கென்றும் தனித்துவமான இயல்புகள், வெளிப்பாட்டு முறைகள் உள்ளன. இன்றைய அரசியல் சமூகச் சார்புடைய கவிதைகளின் முக்கியமான பண்புகளில் ஒன்று அவை பொதுமக்களுக்கு விளங்கக் கூடியனவாக இருப்பது மற்றொன்று அவை எளிமையாக இருப்பது.

இத்தொகுப்பில் உள்ள கவிதைகளில் கணிசமானவை அகரவரிசை ரீதியிலான தமிழ் எழுத்துக்களைத் தலைப்பாகக் கொண்டும் அவற்றை ஆரம்பமாகக் கொண்டும் உருவாக்கம் பெற்றுள்ளன. இதனால் பாதகமான இரு விளைவுகள் ஏற்படக்கூடும். ஒன்று கவிஞரது வித்துவச்சிறப்பினை அவை வெளிப்படுத்துவது, மற்றொன்று எழுத்துத் தீர்மானிக்கும் மோனைகளுக்காக கூறவரும் கருத்துக்களின் வீச்சுக் குன்றிப்போவது இவ்விரு பலவீனங்களும் அகரவரிசையில் ஆரம்பமாகும் கவிதைகளில் வெளிப்படுகின்றமை கவனத்திற் குரியது சிந்திக்கப்படவேண்டியது.

மேற்கூறிய பாணியிலமைந்த கவிதைகளைவிட இத்தொகுப்பில் உள்ள ஏனைய கவிதைகளே இத்தொகுப்பினது வரவின் முக்கியத்துவத்தைக் கூடுதலாக வெளிக்காட்டுவனவாக உள்ளன. சமகால அரசியற் பின்புலத்தில் கூடுதலாக சமூகத்தின் மன உணர்வுகளையும் குமுறல்களையும் கேள்விகளையும் துணிவோடு வெளிப்படுத்துகின்றன.

அவைபற்றி மட்டுமல்லாது ஏனைய விடயங்களை பக்தியுணர்வு பிரதேசப்பற்று, இயற்கை ரசனை முதலான வற்றை வெளிப்படுத்தும் கவிதைகளையும் இத்தொகுப்புக் கொண்டுள்ளது. இவற்றுள் சில இசைப்பாடலாக வெளிப்பட்டுள் ளன. வேறுசில நாட்டார் பாடல்கள் உருவாகியுள்ளன. ஏனைய வடிவங்கள் அனைத்தையும் விட நாட்டார் பாடல் வடிவங்க

ளைத் திறம்படக் கையாளும் ஆற்றல் இக்கவிஞரிடம் நிரம்ப உண்டு. அவை வெளிப்படுத்துகின்றமை கவனத்திற்குரியது.

எதுவாயினும் கவிதையின் உயிரானது சொல் சொற்தேர்வு என்பவற்றில் தங்கியுள்ளது. சொல்லின் எளிமையில் தங்கியுள்ளது. உள்ளார்ந்த ஓசையில் தங்கியுள்ளது என்றே கவிதை ஆய்வாளர் பலரும் கருதுவர். அதுதான் உண்மையுமாகும். அவ்வாறெனில் இக்கவிஞர் அத்தகைய இலக்கு நோக்கி நீண்டபயணம் மேற்கொள்ள வேண்டியவராக உள்ளார். என்பதனைக் கூறியே ஆக வேண்டும். அதேவேளையில் அதற்கான ஆற்றலும், ஆளுமையும் இக்கவிஞரிடம் காணப்படுகின்றது என்பதனையும் கூறியே ஆக வேண்டும். அதற்காகவும் பாராட்ட வேண்டும்.

ஆரம்பத்திலே கூறியது போன்று இத்தொகுப்பினை இரு தொகுப்புக்கள் என்று கருதுமாறு செய்துள்ள மற்றறொரு பகுதி "அரியம் சிந்தனை" இவரணி சார்ந்த இவர் வழிச்சென்ற பிற படைப்பாளிகள் எவரிடமும் இவ்வாறான எழுத்து முயற்சி வெளிப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கவிஞர் காசி ஆனந்தனின் மாத்திரைக் கதைகள் முதலானவற்றினூடெ இத்தகையதான அரசியல் சமூகச் சிந்தனைகள் வெளிப்பட்டிருப்பதாக ஞாபகம். இவ்விதத்தில் இன்றைய அனைத்துச் சமூகத்தினரும் சிந்திக்கக் கூடிய பல விடயங்களை இவை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவை குறுங்கதை வடிவில் வெளிவரக்கூடுமாயின் இன்னும் பல வாசகர்களை சென்றடைதல் கூடும்.

எவ்வாறாயினும் மூன்று பார்வைகள் கொண்ட வித்தியாசமான இரு தொகுப்புக்களை இவர் தந்திருப்பது பாராட்டிற்குரியது. என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துக்களுடன்
**பேராசியர் செ.யோகராசா**

# அணிந்துரை

"தமிழன் தமிழனாக" என்ற தலைப்பிட்டு அம்பிளாந்துறை அரியம் அவர்கள் (பாக்கியசெல்லம் அரியநேத்திரன் - பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு) கவிதைகள் பாடல்கள் சிந்தனைத்துளிகள் என்பவற்றை இப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். அரசியல், ஆன்மீகம், தத்துவம், சமூகவியல், போன்ற இன்னோரன்ன பல்வேறு துறைகளைத் தொட்டும், துளாவியும் செல்லத்தக்க விதத்தில் ஆக்கங்கள் அமைந்துள்ளன.

இலட்சியம், இங்கிதம், உணர்வு, உயிர்ப்பு, ஏற்றம், சீற்றம், இறக்கம், உண்மை, உறுதி, கிராமியம், தேசியம், பாரம்பரியம், பண்பாடு, மண்வாசனை, மகத்துவம், நம்பிக்கை, நடப்புக்கள், ஒன்றுமை, ஒன்றியம், வேகம், விவேகம், வீரம், ஈரம், கோரம், கொடுமை, கண்ணீர், செந்நீர், போன்ற எண்ணக்கருக்களை மையமாகக் - மையலாகக் கொண்டு படையங்கள் அமையப்பெற்றுள்ளன.

எப்படியும் எழுதலாம், எப்படியும் பதியலாம் என்கின்ற இலக்கற்ற எழுத்துப்பாதையில் செல்லாமல் இலட்சியம் எதிர்காலவியல் பார்வை, என்பவனற்றில் தரித்து நின்று தமிழ் நடைபயில்வதாக பயணிப்பதாக ஆக்கங்கள் அமையப் பெற்றுள்ளன.

படையல்களில் ஆணித்தரமான செய்திகள் ஆக்குரோசமான குமுறல்கள், அபிலாசைகள், அங்கலாய்ப்புக் கள், வெளிப்பட்டுள்ளன. ஆக்கங்கள் மூலமாக அரியம் அவர்களின் உணர்வுத்தேக்கங்கள் பிரவாகம் எடுத்துள்ளன.

மனதைத்தொடுகின்ற மனிதத்தைத் தொடுகின்ற பல வரிகைளை ஆக்கங்களில் காணக்கூடியதாகவுள்ளன. அவற்றில் சிலவற்றை சுவைத்துப்பார்ப்போம்.

அடுத்தவரை கெடுத்தெமக்குப் பழக்கமில்லை. அரைகுறைத் தீர்வைப் பெற்றும் பழக்கமில்லை. (அறுவடை) என்ற வரிகள் நற்றமிழனின் நல்பியல்பினையும் இனியும் ஏமாற்றத் தயாரில்லை என்ற பட்டறிவுப் பகிர்வினையும் பறை சாற்றுகின்றது.

சாணக்கியத்தைத் தொலைத்ததனால் சாகித்தியம் இன்னும் வரவில்லை. (சாத்வீகம்) என்ற வரியானது உபாயம் தவறியதால் ஏற்பட்ட அபாய நிலையினைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

நூலகம் சென்று படி நூதனம் கண்டுபிடி என்ற வரிகள் வாசிப்பின் தேவையினையும் அதில் இருந்து பெறக் கூடிய மனப்பாங்குகள், திறன்களையும் இயம்புவதாக அமைந்துள்ளது.

பொறாமை இல்லாமல் வாழ்ந்தால் பொற்காலம் தானே வரும். (பொன்மொழி) என்னும் வரியானது அகத் தூய்மையால் ஏற்படக்கூடிய நல்ல விளைவினை வெளிப்படுத்துகின்றது.

அரைகுறை ஆடைகட்டி அங்கமெல்லாம் காட்டி நின்றால் அதற்கும் பெயர் அழுகு ராணி (அங்கராணி) இவ்வரியானது பண்பாட்டுச் சிதைவினைப் பார்த்துப் புண்படவேண்டிய மனிதன் மாறாக அச்சிதைவையும் பாராட்டி மகுடம் சூடலாமா, என்கின்ற அரியம் அவர்களின் ஆக்குரோசத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறாக அமைந்துள்ள பல கவிதை வரிகள் புரட்சித்தன்மை புனிதத்தன்மை மிக்கவையாகவும் புரட்டுத் தன்மை வரட்டுத்தன்மை என்பனவற்றையும் சாடுபவையா கவும் - சபிப்பவையாகவும் உள்ளன. மேலும் வடிக்கப்பட்ட பாடல்கள், கிராமியச்சுவை, பக்திச்சுவை, பண்பாட்டுச்சுவை, எதிர்பார்க்கை, நம்பிக்கை, நகர்வு, என்கின்ற இயல்புகளுடன் கைகோர்த்தும் பயணிப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

படைப்பாளியின் பொன்டிமொழிகள் புதுமொழிகளாக வும், புரட்சிமொழிகளாகவும், நன்மொழிகளாகவும்,

நயமொழிகளாகவும் இருப்பதைக் காணமுடிகின்றது. நமது பழமொழிகளுடன் கைகோர்த்து பயணிக்கத்துடிக்கும் இளமொழிகளா கவும் இவை காணப்படுகின்றன.

இறுதியாக வற்றாத உணர்வும் வளமான சிந்தனையும் அகத்தில் ஊற்றெடுக்குமாயின் அவை ஆக்கங்கள் பிரகாசிக்கும் என்பதற்கு அரியம் அவர்களின் வடிப்புகள் சான்று பகர்கின்றன. காலம் கவிஞனைக் கொல்லும் - அவன் கவிதைகள் காலத்தை வெல்லும் என்பது எழுத்தாளர் ஜெயக்காந்தன் அவர்களின் கருத்தாகும். ஆம். கவிஞன் இறக்கலாம். ஆனால் கவிதைகள் இறக்கமுடியாது. எனவே அரியம் அவர்களின் நிலைப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எழுதுங்கள் இன்னும் எழுதுங்கள் ஏற்றம் பெற எழுதுங்கள் ஏக்கங்கள் தணிவதற்கு எழுதுங்கள். சொற்கட்டு மானங்களையும் கடந்து சுதந்திரமாய்ச் சிறகு விரித்து எழுதுங்கள். மண்ணின் பதிவுகளை மறக்காமல் இருப்பதற்கு எழுதுங்கள்.

உண்மை, உணர்வு, உரிமை, உறுதி, உறுத்தல், உயர்வு பொன்ற எண்ணங்கள் கலந்த அரியம் அவர்களின் கவிதைகள் காலத்தின் கண்ணாடியாக இருந்து வருங்கால சந்ததிகளுக்கும் சங்கதிகளைக் கொண்டு செல்லக்கூடியவை என்பதை உணருவோம்.

வாழ்த்துகிறோம் வரவேற்கின்றோம் அரியம் அவர்களின் ஆக்கப்பணிகளை. சிரமங்கள் மத்தியிலும் எழுத்துசார் கருமங்கள் தொடரட்டும்.

**மகிழை.வி.சிறி நேசன்**
**(பிரதிக்கல்விப் பணிப்பாளர்)**
**மகிழவட்டவான்**
**மட்டக்களப்பு.**

# யார் இந்த 'அம்பிளாந்துறையூர் அரியம்'

முன்னாள் கிராமத் தலைமை (விதானையார்), ஆயுள்வேத வைத்தியர், முன்னாள் மட்டுநகர் மாநகரசபை உறுப்பினராக கடமைபுரிந்த கந்தப்போடி உடையார் பாக்கியசெல்வத்திற்கும் கந்தப்போடி விதானையார் சரஸ்வதியம்மாவிற்கும் இரண்டாவது மகனாக அவதரித்தவர் அரியநேத்திரன் **'அரியம்'** என்று அன்பாக அழைக்கப்படுபவர்.

மட்/ அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம், மட்/ பட்டிருப்பு மகாவித்தியாலயம் (தேசியபாடசாலை) ஆகியவற்றின் பழைய மாணவர்.

மல்வத்தை விவசாய சாதனா கல்லூரி, வெலிச்சறை விலங்கியல் டிப்ளோமா கல்லாரி ஆகியவற்றில் டிப்ளோமா பயிற்சி நெறி பெற்றவர்.

## நிரந்தர தொழில்

கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியராகவும், பண்ணை முகாமையாளராகவும், செயற்கைமுறை சினைப்படுத்தல் நுட்பவியலளராகவும், கால்நடை அபிவிருத்தி சிரேஸ்ட உத்தியோகத்தவராகவும் இருபத்துஜந்து வருடம் அரச பதவிகளை வகித்தவர்.

## பகுதி நேரம்

பிராந்திய, தேசிய, சர்வதேச ஊடகத்துறைகளில் தமிழ்ச் செய்தியாளராகவும், அரசியல் விமர்சகராகவும், அரசியல், கட்டுரையாளராகவும், பல புனைப்பெயர்களில் எழுதியவர். மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த விடிவானம், தினக்கதிர், தமிழ் அலை ஆகிய பிராந்தியப் பத்திரிகைகளின் செய்தி ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும், ஆசிரியராகவும் நிர்வாகப் பணிப்பாளராகவும் பணிபுரிந்தவர்.

## பொதுப்பணி

அம்பிளாந்துறை கதிரவன் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபக செயலாளராகவும், அம்பிளாந்துறை இந்து இளைஞர் மன்றம், மறுமலர்ச்சி சனசமூக நிலையம், நற்பணி ஒன்றியம், கதிரவன் கலாமன்றம், ஆகியவற்றின் ஸ்தாக தலைவராகவும், அம்பிளாந்துறை ஸ்ரீ சித்திவிநாயகர், சிவ முத்துமாரியம்பாள் ஆலயங்களின் பொருளாளராகவும், அம்பிளாந்துறை, கலைப் பூக்கள் கலைக்கழகத்தின் நிபுணத்துவ ஆலோசகராகவும், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வண்ணக்கராகவும், செயலாளராகவும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் பொருளாளராகவும், வடகிழக்கு கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் பொதுச் சேவைகளை புரிந்தவர். தற்போது அம்பிளாந்துறை அறுமக்குட்டிப்போடியார் நிதியத்தின் ஸ்தாபக தலைவர் என்பதில் பெருமிதம் அடைகிறேன்.

## கலைப்பணி

கவிதை, கதை, நாடகம், கிராமியப்பாடல் ஆக்குதல், பாடலாசிரியர், அறிவிப்பாளர், கவிதை அரங்குகளில் பங்கேற்றவர்.

## அரசியல் பணி

இயல்பாகவே தமிழ் இன உணர்வாளரான இவர் 1977ம் ஆண்டு தொடக்கம் தமிழ் தேசிய அரசியல் களத்திற்கு ஆதரவாளராய் இருந்தார்.

1981 மாவட்ட அபிவிருத்தி தேர்தல் பிரச்சாரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்ட வேளையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

2001ம் ஆண்டு தமிழ் தேசியக்கூட்டமைப்பை உருவாக்குவதில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்துடன் இணைந்து பாடுபட்டவர்.

2004 ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக முதல் தடவையாக 36694 வாக்குகளைப் பெற்று தெரிவானவர்.

2010 ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 16504 வாக்குகள் பெற்று இரண்டாவது தடவையாகத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் தொழில்சங்கச் செயலாளராகவும் தற்போது அங்கம் வகித்து செயல்படுகின்றார். தமிழ் தேசிய அரசியல் செயற் பாட்டுக்காக பல வெளிநாட்டு பயணங்களையும் மேற்கொண்டுள்ளனர்.

**ஆக்கங்கள்**

இவரால் இயற்றப்பட்ட பல பாடல்கள் ஒலிப்பேழைகளாக அரசியல், ஆன்மீகம் சார்ந்ததாக வெளிவந்து பலரால் பாராட்டுப் பெற்றன. இன்றும் புலம் பெயர் நாடுகளிலும், எம் நாட்டிலும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

இவர் இயற்றிய பல கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான பல்துறை ஆழுமை கொண்ட சிறந்த பேச்சாற்றலும், துணிச்சல்மிக்க கருத்தாற்றல்களும், நற்சிந்தனையாற்றலும், பற்றுறுதிக் கொள்கைவாதியான 'அம்பிளாந்துறையூர் அரியம்' அண்ணா அவர்களின் இந்தப் படைப்பானது வெளியிடப்படுவதையிட்டு அம்பிளாந்துறையில் பிறந்தவன் என்ற வகையில் நானும் பெருமிதம் அடைகின்றேன்.

அன்னாரின் அரசியல் பணியும் அறிவுப்பணியும், சமூகப் பணியும் தொடர இறைவன் நல்லருள் புரியட்டும்.

**முருகு.தயாநிதி (சிரேஷ்ட விரிவுரையாளர்),**
(S.L.P.S 2-11 (BASp) MA. PGED .MEO.M.PHIL)
**தேசிய கல்வி நிறுவனம்**
**பத்தரமுல்ல, கொழும்பு.**

# என்னுரை

கவிஞனாகவோ, கலைஞனாகவோ, அறிஞனாகவோ என்னை எப்போதும் நினைத்துக்கொள்ள வில்லை. ஒரு தமிழனாகவே உங்களில் ஒருவனாகவே உள்ளேன்.

என் மனப் பதிவுகளை எம் சந்ததியினருக்கு கொண்டு சென்று அவர்களின் சிந்தனையைத் தூண்டி சிறந்த ஒழுக்கமுள்ள பெருமைமிக்க உறுதிப்டைத்த நற்பண்புகளைக் கொண்ட உத்தமர்களாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணக் கருவை மையமாக வைத்தே இந் நூலில் கவிதைகள், பாடல்கள், அரியம் சிந்தனைகள், என்ற மூன்று விடயங்களாக வகைப்படுத்தி இதனைப் படைத்துள்ளேன்.

இந்நூலில் நான் படைத்த விடயங்கள் ஒவ்வொன்றும் வெறுமனே இரசனைகளாக மட்டுமன்றி ஒவ்வொருவருடைய மனதையும் தொடுகின்ற வாழ்க்கையின் தத்துவங்களை வெளிப்படுத்துகின்ற மறுக்கமுடியாத உண்மைகளை புலப்படுத்துவதாக அமைய வேண்டும். என்பதுதான் எனது எதிர்பார்பு.

பாடசாலையில் கல்விபயிலும் காலம் தொட்டு இயல்பாகவே கவிதை எழுதும் பழக்கம் எனக்கு நிறையவே இருந்தது. காதல் கவிதைகளையும், சமூகச்சீர்திருத்தக் கவிதைகளையும், அரசியல் கவிதைகளையும், மரபுக் கவிதைகளாகவும், புதுக்கவிதைகளாகவும் எழுதிய பல சந்தர்ப்பங்கள் உண்டு.

மீன்பாடும் தேன்நாட்டுக் கவிஞர் காசி ஆனந்தனின் உணர்ச்சிக் கவிதைகளையும் பாடல்வரிகளையும் தேடிப்படிக் கும் எனக்கு அது மேலும் உரம் ஊட்டியது.

தமிழ் நாட்டு கவிஞர்களினதும் நம் ஈழத்துக் கவிஞர்களினதும் ஆக்கங்களும் எப்போதுமே சுவைப்பனவாக உள்ளேன்.

எனது பலவகையான ஆக்கங்கள் அச்சக ஊடகங்களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் வெளியிடப் பட்டதுடன் பல கவிதை அரங்குகளிலும் எனது கவிதைகள் ஒலிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

என்னால் இயற்றிய பல பாடல்கள் இசைவடிவம் பெற்று ஒலிப்பேழைகளாகவும் வெளியிடப்பட்டன. அவைகளில் சிலவைகள் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

பலவகையான ஆக்கங்கள் அவ்வப்போது ஊடகங் களிலும், துண்டுப்பிரசுரங்களிலும் பல நிகழ்வுகளில் உச்சரிக்கப்பட்ட போதும் பாடல்களாக இசைவடிவம் பெற்று ஒலித்துக்கொண்டிருந்தாலும் இதுவரை நூல்வடிவமாக வெளியிடப்படவில்லை என்ற வெட்கமும், வேதனையும் எனக்கு இருந்தது.

எனது ஆக்கங்கள் கடந்தகாலங்களில் படித்துச் சுவைத்த, உணர்ந்த, அறிந்த பல அறிஞர்கள் புத்திஜீவிகள் கலைஞர்கள் நண்பர்கள் ஆன்மீகத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், என்னைச் சந்திக்கும் இடங்களில் எல்லாம் எனது சொந்த ஆக்கங்களை தொகுத்து நூல் வெளியிடுமாறு தொடர்ந்தும் தொந்தரவு செய்தவண்ணம் இருந்தனர்.

அந்தப் பரந்த சிந்தனை உடைய பெருமனிதர்களின் தூண்டுகோல் எனக்கு சுடர்விளக்கானது. அவர்களின் அன்புக் கட்டளை இந்தப் புத்தகத்தை உருவாக்கித் தந்துள்ளது. இந்த இடத்தில் அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியறிதலை தெரிவிக்கின்றேன்.

மனிதர்கள் எல்லோருமே மனிதர்களாக வாழமுடியாத இந்த உலகமயமாக்கலின் காலச்சூழலில் மனிதன் என்ற போர்வையில் மனிதத்தை தொலைத்தவர்களாய் பலர் சுயநலப்போக்குடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இதே போன்றுதான் தமிழர்கள் என்ற போர்வையில் தமிழர்களாக எல்லோரும் இருக்கின்றோமா என்பதை மனச்சாட்சியில் கைவைத்து மீள்பரிசீலனை செய்ய வேண்டியவர்களாய் உள்ளோம்.

அந்த சிந்தனையின் அடிப்படையாக வைத்தே இந்த நூலுக்கு "தமிழன் தமிழனாக" என்ற தலைப்பிட்டேன். இதை வாசிக்கும் ஒவ்வொரு உள்ளங்களையும் ஏதோ ஒரு வகையில் தொடும் பல உண்மைகளை உணரவைக்கும் என்பதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை.

இதில் எழுதப்பட்டவைகள் தொடர்பான விமர்சனங் களை திறந்த மனதுடன் எதிர்பார்க்கின்றேன். அவ்வாறான கருத்தாடல்களை நேரடியாக என்னிடம் தெரிவிக்கும் உரிமை எப்போதும் உங்களுக்கு உண்டு.

இந் நூலுக்கு ஆசி உரை வழங்கிய சிவஸ்ரீ சாம்பசிவம் குருக்கள் ஐயா அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான திருமலை மாவட்ட பாராளுமன் உறுப்பினர் இரா.சம்பந்தன் ஐயா அவர்களுக்கும், முகவுரை வழங்கிய பேராசிரியர்.செ.யோகராசா அவர்களுக்கும், அணிந்துரையை வழங்கிய மட்டக்களப்பு மேற்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.வி.சிறிநேசன் அவர்களுக்கும், அறிமுக உரையினை வழங்கிய தம்பி முருகு தயாநிதி அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகுற வரைந்து தந்த தம்பி ந.சிவதாசன் (சிவா) அவர்களுக்கும் கணணி வடிவமைப்பு மேற்கொண்ட வணசிங்கா அச்சகத்தின் அ.ஜெயலக்ஷ்மி அவர்கட்கும், புத்தகத்தை தெளிவுற அச்சிட்டு தந்த வணசிங்கா அச்சகத்தாருக்கும் அதன் சக ஊழியர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு முன்வைக்க வந்த பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய மன்ற உறுப்பினர்களுக்கும் எனது மாசில்லா தூய நன்றியறிதலை தெரிவிக்கின்றேன்.

உடைகளால் மட்டும் இன அடையாளங்களைப் பாதுகாக்க முடியாது உணர்வுகளால் தான் அது சாத்தியமாகும்.

நன்றி.

**"அம்பிளாந்துறையூர் அரியம்"**
**இரதாலயம்**
**அம்பிளாந்துறை.**

# இது.... அ தொடக்கம் வை வரை

அம்பிளாந்துரையூர் அரியம்



அ

# அறுவடை

அன்பு கொண்ட நாம்
அடிமையாய் வாழ்கின்றோம்
அனாதரவாய் திரிகின்றோம்
அங்கும் இங்கும் எங்கும் தான்
அலைந்து ஏமாந்து போனோம்
அவலம் இன்று எமை விடவில்லை
அடக்கு முறையாளர்களின் இருண்ட
அனியாயத்திற்கு இரையான எம்மவர்களின்
அரவணைப்பு விலகியதால்
அகதிமுகாம் வாழ்வுக்கு
அனுதினமும் ஆளானோம்
அடுத்தவரை கெடுத்தெமக்கு பழக்கமில்லை
அரைகுறை தீர்வைப் பெற்று பலனும் இல்லை
அமைதி வரவேண்டு மென்றுதான்
அரசுடனும் பேசிப்பார்த்தோம்
அறத்தினாலும் கேட்டுப் பார்த்தோம்
அனைத்துக்கும் மனம் மாறவில்லையே
அடுத்த பணிக்கு அனைவரும் ஒன்றிணைந்து
அக்ஷத்திடம் விண்ணப்பம் செய்தோம்
அடுத்த தலைமுறையாவது சுதந்திரமாய் வாழ
அலட்சியம் செய்யாமல் தீர்வைத் தாருங்கள்
அறுவடைக்காய் காத்திருக்கிறோம் நாம்

அ



# அவர்கள் தான்

அல்லல் இல்லா வாழ்வுக்கும்
அடாவடியற்ற செயலுக்கும்
அக்கிரமம் என்றும் மறைவதற்கும்
அக்கம் பக்கம் நிம்மதிக்கும்
அட்டூழியம் இங்கு ஒழிவதற்கும்
அடங்காப்பிடாரிகள் மறைவதற்கும்
அடிமை விலங்கு தெறிப்பதற்கும்
அபயம் மீண்டும் கிடைப்பதற்கும்
அகிலம் எம்மை மதிப்பதற்கும்
அறுதியான பாதுகாப்பிற்கும்
அபிலாஷைகளை வெல்வதற்கும்
அவர்கள்தான் வரவேண்டும்



# அடுத்த ஆண்டு

அடுத்த ஆண்டும் ஜெனிவா திருவிழா வரும்
அமெரிக்காவின் காவடியாட்டம்தொடரும்
அரோகராப் போட்டு நேர்கடன் நிறைவேறும்
அனைத்துலகத்தார் ஆலாத்தி எடுப்பார்கள்
அடிவாங்கிய நாமோ கற்பூரம் எரிப்போம்
அடைக்கலம் சென்ற புலம் பெயர் உறவுகள்
அலுக்காமல் பொங்கிப் படைப்பார்கள்
அதனுடன் ஒரு சிலர் விரதமிருப்பார்கள்
அங்கும் இங்கும் ஊர்வலம் நடக்கும்
அண்டை நாடோ வாயலகு போடும்
அயல் உறவுகள் தேங்காய் உடைப்பார்கள்
அதையும் தாண்டி தீயும் குளிப்பார்கள்
அராஜக ஆட்சி முற்றுப் பெறாது
அரசியல் தலைவர்கள் அலைந்து திரிவார்கள்
அதுவரை குறைகூறியே காலம் போகும்
அடுத்த ஆண்டும் ஜெனிவா திருவிழா வரும்

10. 04. 2012ல் எழுதியது.



ஆ

# ஆணை

ஆச்சரியமாய் இருக்கிறது
ஆசாமிகளின் செயற்பாடு
ஆண்ட எம்மினத்திற்கோ
ஆழ்வதற்கு முடியவில்லை
ஆகுதியான உறவுகளுக்கும்
ஆண்டு செய்ய உரிமை இல்லை
ஆறாத் துயருடன் தான்
ஆசை நிறைவேறாது
ஆலயங்களெல்லாமே
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஆயினும் மனம் தளரவில்லை
ஆராய்ந்து முன் தொடர்ந்து
ஆணை பலிக்க உழைப்போம்

ஆ



# ஆருயிர்

ஆண்டவனும் பார்க்கவில்லை
ஆண்ட தமிழ் மண் இதையே
ஆதங்கம் சொல்வதற்கு கூட
ஆதரவு எமக்கு எவரும் இல்லை
ஆக்கிரமிப்பு இன்றும் தான் தொடர்கிறது
ஆதார பூர்வமாக நிருபித்தாலும்
ஆட்சியாளர்களுக்கு மனம் மாறவில்லை
ஆறு கடல் வாய்க்காலென்று
ஆன்மாக்கள் பலரை பலி கொடுத்தும்
ஆணவம் அவர்களுக்கு மாறவில்லை
ஆழிப் பேரலை அள்ளிச்சென்றதைப் போல்
ஆதிகுடிகள் அழிய முடியுமா
ஆத்திரம் வந்து எமை எதிர்த்தாலும்
ஆளுமை எமைவிட்டுப் பிரியுமா
ஆருயிர் கொள்கைதான் சாகுமா



இ

# இறைவன்


இனவாதம் எனும் ஓர்
இருண்ட வைரஷ் கிருமி
இந்த நாட்டில் உள்ளதனால்
இனப்பிரச்சனைக்கு தீர்வு இல்லை
இடர் பல கண்டு ஏங்கி
இக்கட்டானவற்றை எதிர்கொண்டு
இடம்விட்டு இடம்மாறி
இன்னும் தான் அகதி வாழ்க்கையானோம்
இல்லம் இன்றி இல்லறுமும் இல்லாமல்
இன்று விடியும் நாளை விடியுமென எதிர்பார்த்து
இன்பத்தை தேடுகின்றோம் இதுவரையும் இல்லை
இணக்கப்பாடான ஒரு தீர்வுக்கு
இறைவன்தான் வளிசமைக்க வேண்டும்



# இந்தநாடு

இலை மறை காயாக
இன ஒற்றுமை பேசப்படும்
இரும்பு பாதணிகள் வரும்
இன்றும் எம்மண்ணை மிதிக்கும்
இடர்கள் தொடர்கதையாகும்
இனவாத இருள் சூழும்
இனப்படுகொலை அரங்கேறும்
இருப்பைத் தேடி கண்கள் வட்டமிடும்
இல்லாத சுதந்திரத்தை தேடி
இராஜ தந்திரப் பயணம் தொடரும்
இது இந்த நாடு




# இங்கே வந்து பாரு


இனவாதம் ஊற்றெடுக்கும்
இறுமாப்பு புற்றெடுக்கும்
இனத்துக்குள் முள்முளைக்கும்
இடமெல்லாம் புல்முளைக்கும்
இடர்களுக்கோ தீர்வாகாது
இறப்புக்கும் பரிகாரமில்லை
இருள் சூழ்ந்துமனைக்கும்
இதயம் இல்லா நாடு
இங்கே வந்து பாரு

# இந்த மண்



இருக்குமவள் ஏமாற்றி
இன்னொருவரை மணம் முடித்தால்
இனி வாழ்வு முடிந்ததென்று
இக்கட்டாய் எண்ணிடாதே
இல்வாழ்வை இனிதாக்க
இளநங்கை வருவாளென
இதமாக நம்பியிரு
இணைப்பும் பிணைப்பும்
இறைவன் தலையெழுத்து
இடமாற்றம் காதலிலே
இருபாலர்க்கும் பொருந்தும்
இதயத்தைத் தொலைத்துவிட்டு
இதுதான் வாழ்க்கையென எண்ணாதே
இறக்கும் வரை மக்களை மதி
இனத்தையும் தேற்று
இனிப்பு காதலுக்கு மட்டுமல்ல
இந்த மண்மீதும் செலுத்து

# ஈ




## ஈனச்செயல்

ஈசன் கோயில் திருவிளக்கில்
ஈசல் பூச்சிகள் சூழ்ந்தாலும்
ஈட்டியாலே குத்த முடியுமா?
ஈகை நிறைந்த மனிதரின்
ஈயம் கொண்ட கொள்கையை
ஈடு வைக்க முடியுமா?
ஈசானம் தான் தாயகம் இதை
ஈவு கொண்டு பங்கிட
ஈனச் செயலால் முடியுமா?

## ஈடுபாடு



ஈழத்தின் கொடுமைகளோ
ஈட்டிபோல் தைக்கிறதே
ஈவிரக்கமில்லாமல் இங்கு
ஈனர் செயல் தொடர்கிறதே
ஈஸ்வரனின் உள்ளத்திலும்
ஈரம் தான் தெரியலையே
ஈயம் காதில் வார்தாப்போல்
ஈந்திக்கதைகள் தொடர்கிறதே
ஈடேற்றம் எமக்குக் கிடைப்பதற்கு
ஈடுபாடு அனைத்துலகம் செய்யவேண்டும்



உ

# உறுதி

உரிமையை இழந்ததனால்
உருக்குலைந்த சமூகமானோம்
உறவுகளைப் பிரிந்ததனால்
உள்ளம் கொதித்து ஏங்குகின்றோம்
உருப்படியான வாழ்வுக்காக
உணர்வை இழக்காமல் உள்ளோம்
உண்மைகளுக்கு அழிவு இல்லையென்பதால்
உலகத்தின் மனச்சாட்சிகளை உலுப்புகிறோம்
உக்கிரக் கொடுமை கண்டும்
உறுதியுடன் தான் வாழ்கிறோம்




உ

# உருப்படியாய்

உன்னைக் காதலித்தேன்
உண்மையாகவே நான்
உன்னுடனே இன்னொருத்தி
உஷ் என்று கதைக்கிறாளே
உனக்கே வெட்கமில்லையா
உள்ளத்தால் நேசித்த என்னை
உளமாற விரும்பாமல்
உதறித் தள்ளுகிறாய்
உதடுகளால் காதலித்து
உதாசீனம் செய்கிறாய்
உதவாத ஆண்மகனே
உண்ணாவிரதம் இருந்து
உயிர் திறந்து போனாலும்
உதவாக்கரை நீயென்பதால்
உனை மணக்கமாட்டேன்
உருப்படியாய் எனை மறந்துவிடு

உ



# உழவன்

உலகம் சொல்லட்டும்
உண்மை வெல்லட்டும்
உரிமை கிடைக்கட்டும்
உபத்திரவம் தீரட்டும்
உணர்வு பெருகட்டும்
உள்ளம் மகிழட்டும்
உழவன் பொங்கட்டும்
உறுதி நிலைக்கட்டும்.




# ஊ

## ஊறு

ஊதுகுளலாய் இன்னும்தான் சிலர்
ஊருக்குள் உள்ளதனால் தான்
ஊதாரி வாழ்வு இன்னும் தொடர்கிறது
ஊழல் நிறைந்த தேசமதில்
ஊனமாய் பேச்சுவார்த்தை ஆனதினால்
ஊசலாட முடியாத நேர்மை
ஊமையாய் வெட்கித் தலைகுனிகிறது
ஊடகங்களுக்கும் அடக்குமுறை என்பதால்
ஊழி விழித்தெழுந்து நீதி செய்யவேண்டும்
ஊறு தீர ஏதும் வாய்ப்பு செய்ய வேண்டும்

## ஊழி



ஊனமுற்ற வாழ்வும்
ஊமையான கனவும்
ஊதியம் இல்லா நாட்டில்
ஊகம் ஒன்றுக்காய்
ஊச லாடுகிறோம்
ஊரின் கண்ணீரும்
ஊறும் போக்கிடவே
ஊக்கமுடன் உழைக்கிறோம்
ஊழி ஒருநாள் மாறும்

எ



# என்பதை

எரிகிற விளக்கினிலே
எண்ணெய் ஊற்றிவைத்தால்
எப்போதும் எரியும்
எமகண்ட நேரமதில்
எதைத்தான் செய்தாலும்
எதிர்காலம் சிறக்காது
எதிர்நீச்சல் போட்டு
எதிரிகளை வெல்வதற்காய்
எழுந்து செல் முன்னே
எருமையென்று உனை
என்குதல் செய்தாலும்
எளிமையாய் ஏற்றுக்கொள்
எலிகளை பூனை விழுங்கினாலும்
எருதுகளை விழுங்காது
என்பதை உணர்ந்து கொள்

எ



# எட்டிப்பிடி

என்செய்வோம் எங்களுக்கே
எள்ளவும் அமைதியில்லை
எப்போது விடியுமென
எல்லோரும் ஏங்குகின்றோம்
எரிச்சலூட்டும் செயல்களினால்
எந்நாளும் ஏக்கம்தான்
எச்சரிக்கை காட்சிகளால்
எதையுமே செய்ய ஒண்ணா
எளிமை கொண்ட தீர்வுக்காய்
எறும்பைப்போல் உழைக்கின்றோம்
எவ்விருள் அகன்றிடவே
எழுந்தருள்வாய் பெம்மானே
எதிர்காலம் சிறப்புறவே
எண்ணல் சொல் உலகமே
எம கண்டம் தீர்ந்திடவே
எட்டிப்பிடி எம் தமிழே

ஏ



# ஏவல்

ஏமாளிகளும் கோமாளிகளும் உள்ள வரைக்கும்
ஏமாற்றம் தொடர்வதைத் தவிர்க்க முடியாது
ஏராளம் பேர் இம்மண்ணில் மரணித்தபோதும்
ஏன் என்று உலகம் கேட்கவில்லை
ஏக்கம் எங்களுக்கு மட்டும் என்பதால்
ஏங்கி ஏங்கி அழுவதைத் தவிர வேறில்லை
ஏழைகள் தான் நாங்கள் என்றாலும்
ஏதோவழி தேடுகிறோம் ஒருநாள்
ஏற்றம் கிடைக்குமென்ற நம்பிக்கை உண்டு
ஏலம் போடும் இந்த சமாதானம் தீர்வல்ல
ஏர் பிடித்த எம்மவருக்கு வாழ்வுரிமை வேண்டி
ஏவல் செய்வதைத் தொடர்வோம்



ஏ

# ஏகமனதாய்

ஏர் ஓடும் பூமி இது
ஏற்றமுடன் வாழ்ந்திடு
ஏணிபோல் முன்னேறு
ஏகப்பட்ட ஆசையை விலக்கிடு
ஏழைகளுக்கு உதவி செய்
ஏற்றுமதியும் செய்
ஏமாளியாய் ஆகிடாதே
ஏக்கம் தீர பாடுபடு
ஏகமனதாய் முடிவெடு




ஐ

# ஐங்கரன்

ஐயகோ சமாதானம் என்ன
ஐயப்பன் கோயில் மணியோசையா
ஐயர் எனக்கு விடை தரவில்லை
ஐயமும் இதுவரையும் தீரவில்லை
ஐயாவிடம் போய் கேட்டுப் பார்த்தோம்
ஐக்கியம் என்று பதில் சொன்னார்
ஐம்பொறியும் எனக்குக் கலங்கியதால்
ஐ.நா சபையிடம் முறையிட்டேன்
ஐந்து புலன்களும் விழித்தன
ஐங்கரன்தான் பதில் தரவேண்டும்

ஒ



# ஒத்தாசை

ஒற்றுமை எமக்கு இல்லாததால்தான்
ஒரு வழியும் காணாமல் போனோம்
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்றால்
ஒரு நாட்டிற்குள் தீர்வு வர ஏன் தயக்கம்
ஒட்டுண்ணிகள் ஆள்வதால்தான்
ஒளி எமக்கு இல்லாமல் போனது
ஒப்பாரி சத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து
ஒப்பமுடன் முன்னேறுவோம்
ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்புடன்
ஒருங்கிணைந்து வெற்றியைக் காண்போம்
ஒய்யார வாழ்வுக்கு வழி சமைப்போம்
ஒத்தாசைக்கு உலகத்தைக் கேட்போம்

ஓ



# ஓட்டாண்டி

ஓடிப்போகவா நான் உன்னைக் காதலித்தேன்
ஓக்கமுடன் வாழத்தான் ஆசைப்பட்டேன்
ஓலைக்குடிசையிலே நான் வாழ்ந்தாலும்
ஓலம் உனக்கு ஏற்படாம் உழைப்பேன்
ஓரம்கட்டி உன் பெற்றோர் வெறுத்தாலும்
ஓர்மம் கொண்ட நான் தாலி கட்டியே தீருவேன்
ஓ பெண்ணே கவலைப்படாதே கண்ணே
ஓரவஞ்சனை உன் குடும்பத்தார் செய்தாலும்
ஓரவாரம் இன்றி வாழ்ந்து காட்டுவோம் வா
ஓட்டாண்டியாக ஒருநாளும் விடமாட்டேன்


ஒள



# ஒளஷதம்

ஒளவியம் கொண்ட மனிதரின் சூழ்ச்சியால்
ஒளரதன் இழந்து தாய்மார் தவிக்கிறார்
ஒளவையும் உயிரோடு இருந்ததால்
ஒளவியரை அழைத்து வேண்டியிருப்பார்
ஒளஷதம் ஒன்றைத் தேடுகிறேன் நோய் அகல

க



## கரை

கவலையும் தீரவில்லை
கண்ணீரும் குறையவில்லை
கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல்
கதைதான் இங்கு தொடர்கிறது
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
கனவான் நாட்டிற்கு புரியவில்லை
கடவுளும் கண்திறக்கவில்லை
கரும் முகில் இன்றும் கலையவில்லை
கடைசி வரையும் அமைதி இல்லை
கண்டவையெல்லாம் துன்பமும் சோகமும்தான்
கலங்கிய வாழ்வுக்கு ஒளிவருமா
கல்நெஞ்சுப் பாதகர் செயல் அகலுமா
கறைபடிந்த எம்மவரின் உணர்வுகள்
கருணை மனம் கொண்ட
கந்தப் பெருமானுக்கு விளங்கிடுமா
கரைசேர எமக்கு அருள் கிடைத்திடுமா

# கா



## காவியம்


காலம் மாறும் கோலம் மாறும் கொள்கை மாறாது
காட்சி மாறும் ஆட்சி மாறும் சோகம் தீராது
காண்டம் மாறும் பண்டம் மாறும் பசியும் தீராது
காதல் மாறும் கூதல் மாறும் மனிதம் மாறாது
காடு மாறும் வீடு மாறும் வீரம் மாறாது
காய்ச்சல் மாறும் கூச்சல் மாறும் நோய்கள் தீராது
காரியம் மாறும் ஊதியம் மாறும் ஊர்கள் மாறாது
காயம் மாறும் சாயம் மாறும் உணவு மாறாது
கார்மேகம் மாறும் கார்வேகம் மாறும் பயணம்
மாறாது
காவடி மாறும் தாவடி மாறும் ஆட்டம் மாறாது
காற்று மாறும் ஊற்று மாறும் திசைகள் மாறாது
காளை மாறும் கோளை மாறும் வேளை மாறாது
கானம் மாறும் பானம் மாறும் மானம் மாறாது
காவியம் மாறும் ஓவியம் மாறும் சீவியம் மாறாது

கி



# கிழக்கு

கிட்டிப்புல்லும் பம்பரமும்
கிறுக்கியடித்து விளையாடிய
கிராமத்தின் அழகு இது
கிரகணம் வந்து மறைத்த போதும்
கிரீடம் சூடிய மண்ணே இது
கிலுகிலுப்பை பம்பரத்தை
கிழமை நாளெல்லாம்
கிறுக்கி சுத்திய தெருவே இது
கில்லாடி பலர் வாழ்ந்து
கிலி வந்த போதும்
கிளர்ச்சி செய்து வெற்றியீட்டிய
கிருபை உறை தேசமிது
கிழக்கு தமிழ் மண்ணே



# கீ

# கீதர்புகள்

கீரியும் பாம்புமாக
கீழ்மையாய் வாழ்ந்ததனால்
கீழ்த்தரம் ஆனோம் நாமே
கீலகம் இல்லா நாளும்
கீறல்கள் காண உறவும்
கீழ்ப்படிவான குணமும்
கீர்த்தியும் என்றும் வேண்டும்
கீதங்கள் இதற்காய் வேண்டும்







# குண்டர்கள்

குகைகளைக் கண்டாலும்
குகரங்கள் என்றாலும்
குட்டிச்சாத்தான் பேய்களுடன்
குடிகொள்ளும் அவலம்
குடியானவனை ஒதுக்கிவிட்டு
குடியேற்றம் இன்னொரு புறம்
குடிமை உள்ள எமக்கோ
குடியரசு கொள்கையுண்டு
குடுவை எடுத்து பிச்சை கேட்கும்
குரு அல்ல அவர்கள்
குத்தகைக்கு வந்திங்கு
குரோதம் பண்ணப் பார்க்கும்
குண்டர்கள் தான் இவர்கள்


# கூ



## கூ பற்று

கூத்தாடி நாட்டினிலே
கூர்மை விளங்காது
கூலிக்கு மார் அடிக்கும்
கூவைக்கு இது புரியாது
கூழ் குடித்து வாழ்ந்தாலும்
கூப்பாடு போட்டாலும்
கூண்டுக்குள் அடைத்தாலும்
கூடாரத்தில் வாழ்ந்தாலும்
கூ பற்று அழியாது


# கெ



## கெலி

கெட்டிக்காரன் பெயர் எடுக்க
கெத்துப் போக்கை காட்ட வேண்டும்
கெட்டவன் பெயர் எடுக்க
கெடுதி ஒன்றை செய்தால் போதும்
கெட்ட கோபம் வரும் போது
கெடுபிடியை தளர்த்தி
கெஞ்சல் செய்யப்பழகு
கெலி பெறுவாய் நிட்சயமாய்

# கே



## கேளிக்கை

கேள்விக் குறியான வாழ்வும்
கேவலமான நிலையும்
கேதனம் கட்டிப் பறந்த எமக்கு
கேட்பதற்கு எவருமில்லாத நிலை
கேடுதான் எமக்கோ மிச்சம்
கேலியாய் பேசினாலும்
கேடுகாலம் அவர்களுக்கு வரும்
கேளிக்கை அப்போது நாம் செய்வோம்



# கை

# கைகுலுக்கு

கைகட்டி வாய் பொத்தி
கைப் பொம்மையாக
கை விலங்குடனே
கை விட்ட சமுகமாய்
கை விரித்த நாட்டில்
கை ராசி இன்றி வாடுகின்றோம்
கை நிறைய சம்பாதித்தும்
கைத் தொழில்கள் செய்தாலும்
கை கழுவும் உலகத்தில்
கை குலுக்க காலம் இல்லை


கொ



# கொள்கை

கொட்டாவி குறட்டை விட்டு திரிய வேண்டாம்
கொட்டும் மழைக்குள்ளே செல்ல வேண்டாம்
கொடியவரின் உறவை பேண வேண்டாம்
கொக்கரித்து கோழி போலே கத்த வேண்டாம்
கொத்துரொட்டி அனுதினமும் உண்ணவேண்டாம்
கொழுப்புள்ள பண்டங்களை புசிக்கவேண்டாம்
கொலை களவை ஒரு நாளும் மதிக்க வேண்டாம்
கொள்ளை அடித்து பணம் சம்பாதிக்க வேண்டாம்
கொள்ளி வைத்து அடுத்தவரை கெடுக்கவேண்டாம்
கொடுங்கோலை எப்போதும் சம்மதிக்கவேண்டாம்
கொடும்பாவி எரிப்போரை எதிர்க்கவேண்டாம்
கொண்டாட்டம் உள்ளதை மறக்கவேண்டாம்
கொஞ்சு தமிழ் உணர்வுதனை ஒதுக்கவேண்டாம்
கொடுமையை எம்மண்ணில் விதைக்கவேண்டாம்
கொந்தளித்த கடலினிலே குளிக்கவேண்டாம்
கொதிநிலத்தில் ஒரு போதும் உறங்கவேண்டாம்
கொத்தடிமை வேலைகளைச் செய்யவேண்டாம்
கொடுப்பனவு வாங்கி வாக்களிக்க வேண்டாம்
கொள்கை இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்.

# கொ



## கொள்கை சாகாது

கொடுங்கோல் மேலோங்கி
கொற்றவனால் கேடுவரினும்
கொற்றம் தூங்காது!
கொச்சை வசைபாடி
கொக்கரித்துத் திரிந்தாலும்
கொட்டம் அடங்காது!
கொள்ளை லாபத்தால்
கொம்பன் யானை வாங்கினாலும்
கொற்றை மாறாது!
கொழிப்பு நிலமதில்
கொய்யாவை நட்டாலும்
கொப்பு விலகாது!
கொள்ளி மூட்டி
கொலைக்களம் தான் செய்தாலும்
கொள்கை சாகாது!

# கோ



## கோபம்

கோவணம் கட்டினாலும் கொள்கையை விடாதே
கோடீஸ்வரனானாலும் உறுதியை விடாதே
கோட்டையில் வாழ்ந்தாலும் பற்றுதலை விடாதே
கோளாறு தடுத்தாலும் உன் பாதையை விடாதே
கோலாகலம் கண்டாலும் இலட்சியத்தை விடாதே
கோடரவம் நேர்ந்தாலும் விலகி விடாதே
கோபத்தை விட்டாலும் உணர்வை விடாதே

## கௌ



## கௌசல்யம்

கௌபீனம் அணிந்தாலும்
கௌரவமாய் வாழு
கௌசீகம் உடுத்தாலும்
கௌசல்யமாய் வாழு



ச

# சங்கே முழங்கு

சக்தியும் சிவனையும் தாழ்பணிந்தேன்
சஞ்சலம் இன்னுமே தீரவில்லை
சண்டைகள் முடிந்தது என்ற போதும்
சமாதானம் இன்னும் கிடைக்கவில்லை
சரித்திரம் மாறுதே எம் நிலத்தில்
சண்டாளனின் சூழ்ச்சியோ ஏராளம்
சதிவலை விரிக்கிறான் எம்மவர்க்கு
சங்கரா இது என்ன கொடுமை ஐயா
சனீஸ்வரக் கடவுளே கண் திறப்பாய்
சன்னிதிப் பெருமானே அருள் தருவாய்
சலனங்கள் போக்கியே உதவிடுவாய்
சமூகத்தைத் தேற்றி ஒளி தருவாய்
சலுகைகள் பெறுவதை நிறுத்திடுவாய்
சமத்துவம் வாழ்வுக்கு அற்பணிப்பாய்
சந்தோசம் நிலைக்கவே வரம் தருவாய்
சம்மதம் உடனே தீர்வு வர
சங்கே முழங்கி விடை தருவாய்

## சா



# சாத்வீகம்

சாவை தழுவிய எம் இனம்
சாக்கடை வாழ்வுக்கு ஏன் சென்றது
சாக்குப் போக்கு பல சொல்லி
சாணக்கியத்தை தொலைத்ததனால்
சாத்தியம் இன்னும் வரவில்லை
சாதனை செய்த எம்மவர்கள்
சாதித்துக் காட்டிய தடயங்கள்
சாதாரண தியாகங்கள் இல்லை
சான்றோனாக வளர்ந்தவர்கள்
சாமானிய செய்கை செய்யவில்லை
சாகுபடி கிடைக்கும் வரை
சாந்தி வாழ்வு அடையும் வரை
சாத்வீகத்தால் பயணிப்போம்



சி

# சித்தம்

சிவப்பு மண் தெரிகிறது
சிற்றூர்கள் அழிகிறது
சின்னங்கள் தொலைந்தன
சிக்கல்கள் தீரவில்லை
சிறைகளிலும் சஞ்சலம்
சிறுமை கொண்ட எமக்கு
சிரிப்பும் முகத்தில் இல்லை
சினம்தான் தொடர்கிறது
சிங்கக் கொடி நாட்டில்
சிலுவை சுமக்கின்றோம்
சிநேகமாய் வாழவே
சிந்தை விரும்புகின்றது
சித்திரவதை தீர்ந்திடவே
சிவனுக்கும் மனம் இல்லை
சித்தியடையும் வரை
சித்தமாய் உழைப்போம்

# சீ

## சீக்கிரம்



சீனி வருத்தமாம்
சீமாட்டி மகனுக்கு
சீர் கெட்ட உணவு தனை
சீராக தவித்து விட்டால்
சீற்றமுடன் தணிந்து விடும்
சீமானர் வைத்தியரை
சீமையிலே போய் கண்டாலும்
சீதேவி நோய் இதுவே
சீக்கிரத்தில் குணமாகாது


சு



# சுறுசுறுப்பு

சுக்கிரன் கிரகம் எப்போதும் பகை
சுகந்தம் வீச இன்னும் தான் தடை
சும்மா இருந்தால் சோறும் கிடையாத போது
சுதந்திரம் மட்டும் சும்மா கிடைக்குமா
சுரணை இழந்து வாழ்வது தமிழனா
சுவாதீனம் எமக்கோ என்றும் இல்லையா
சுழிக்காற்றில் அடிபட்டு செத்த போதும்
சுகவீனமுற்றுப் படுத்த போதும்
சுந்தரத் தமிழை நாம் மறக்கமாட்டோம்
சுயஉணர்வு இன்றி வாழ மாட்டோம்
சுவீகரித்த எம் நிலத்தை அடையும் வரை
சுறுசுறுப்பாய் செயற்படுவோம் எழுந்து வா

# சூ



## சூலம்


சூரியன் உதித்தாலும்
சூனியம் மறையவில்லை
சூறாவளி அடித்தாலும்
சூளுரை தணியவில்லை
சூழ்ச்சியால் ஆட்சி செய்து
சூதுவாது காட்டி
சூட்டுக்கோல் வைப்பவனை
சூரன் போல் வடிவெடுத்து
சூலத்தால் அடக்கிவிடு

செ



# செய்

செவிடன் காதில் ஊதிய சங்கு
செயல் இழந்து போனது போல்
செம்மையான எமது நிலம்
செழிக்க மறப்பதும் ஏனோ
செல்வம் மிகுந்த வளமெல்லாம்
செல்லாக் காசாய் போனதனால்
செவ்வாய் தோஷம் அகன்றிடவே
செவ்வணமாய் பூசை செய்து
செழுமை வாழ்வை பெற்றிடவே
செய்வோம் நாமே நற் செயல்கள்



சே

## சேவகம்

சேனைகள் இல்லையென்று
சேதிகள் வந்த போதும்
சேமம்தான் இன்றும் இல்லை
சேட்டைகள் தணியவில்லை
சேர்க்கைகள் இருக்கும் மட்டும்
சேதத்தைக் கண்டு அஞ்சோம்
சேதணம் கொண்ட நாங்கள்
சேற்றுக்குள் விழவும் மாட்டோம்
சேவகம் செய்து வெல்வோம்

சொ



# சொர்ப்பணம்

சொர்க்கமா நரகமா என்பதல்ல
சொக்கமாய் இருப்பதுதான் இன்று தேவை
சொத்தியாய் வாழ்க்கை அமைந்திடினும்
சொந்த மண் விடிவுக்காய் தோள் கொடுத்து
சொத்துக்கள் மீண்டும் கிடைக்கும் வரை
சொகுசு வாழ்வை புறம் தள்ளி
சொர்ப்பணம் காண்பாய் மண்மீதே

சோ



# சோரம்

சோதிடமும் தீர்வைக் கூறவில்லை
சோகம் தான் தொடர்கதை ஆகிறது
சோதனையும் வேதனையும் வாழ்க்கையாகி
சோர்வுகள் எமை எதிர்கொண்டாலும்
சோளன் வழிவந்த பரம்பரை நாம்
சோரம் போக மாட்டோம் திண்ணம்




# சௌகரியம்

சௌக்கிய வாழ்வு தேடி
சௌந்தரிய தமிழுக்காக
சௌபாக்கியம் கிடைக்கும் வரை
சௌகரியம் ஏற்படுத்துவோம்

ஞா

# ஞானம்

ஞாயிறு வெளிச்சம் தன்னில்
ஞாலம் தான் வெளுத்தது
ஞானக் கண்கொண்டு பார்த்தேன்
ஞானோதயம் தெரிந்தது
ஞாபகம் வந்த போது
ஞானம் பிறந்தது


த



# தலைவன்

தண்டனை பெற்ற போதும்
தவறுகள் நேர்ந்த போதும்
தடைகளால் சூழ்ந்த போதும்
தழும்பலால் எதிர்கொண்ட போதும்
தமிழனாய் நான் வாழ்வேன்
தண்ணீரை அருந்தா போதும்
தவிப்புகள் வந்த போதும்
தகைமைகள் மாறும் போதும்
தயக்கம் தடுத்த போதும்
தமிழனை நான் நினைப்பேன்
தர்மம் தான் அழிந்த போதும்
தவிடு பொடி ஆனபோதும்
தற்பெருமை உயர்ந்த போதும்
தாகம் ஓய்ந்த போதும்
தலைவனை நான் மறவேன்

தா



# தாளாண்மை

தாய்மொழி பேசும் நாட்டிலே
தாயகம் அழுவதைப் பார்த்தாயா
தாகம் எப்போ தீருமென
தாய்குலம் ஏங்குவதை நினைத்தாயா
தாவரம் நட்ட வயல்களிலே
தாழ்வு வருவது சரிதானா
தாள்வாரம் உள்ள வீட்டினிலே
தாரம் ஏக்கம் ஏனம்மா
தாரகை மின்னும் ஊரினிலே
தாக்கம் ஏற்பட யார் பொறுப்பு
தாக்குதல் பட்ட நிலத்தினிலே
தாளாண்மை வேண்டும் எமக்குள்ளே

# தி



## தித்திப்பு


திக்கற்ற மனிதர் நாம்
திகில் கொண்டு வாழ்கிறோம்
திசை மாறிச் செல்லாமல்
திறந்த நல் மனதுடனே
திறமைக்கு முகம் கொடுத்து
தினகரனின் ஒளியைப் போல்
தில்லு முல்லு செய்யாமல்
திண்ணமுடன் முன் செல்வோம்
தித்திப்பு செய்திக்காய்

# தீ



## தீவிரம்


தீர்மானம் எடுத்து செயலுக்கு இறங்கினால்
தீவந்து தடுத்தாலும் திட்டத்தைக் கைவிடாதே
தீமையை துரத்தி வெற்றிக்கு வழிசமைக்க
தீர்ப்பாணை வந்தாலும் திணறி விழுந்திடாதே
தீர்வுக்கு முயற்சி செய் முன்னேறு என்றும்
தீவிரமாய் அதற்காய் உழைப்போம் வா




# துவம்சம்

துன்பம் வருவது இன்பத்தின் அறிகுறி
துணிந்து காரியம் ஆற்றினால்
துச்சமாகும் தடைகளெல்லாம்
துணை எமக்கு இறைவன் மட்டுமே
துரோகத்தால் தோல்வி நேர்ந்தாலும்
துன்னவரை பொசுக்கிவிட்டு
துவம்சத்தால் வெற்றி காண்போம்


தூ



# தூதுணம்

தூய்மையான மனிதரை தேடிட
தூதுவாக வெண்புறாவை அனுப்பினேன்
தூக்குக் கயிற்றை சொண்டில் கவ்வி
தூக்கி எனக்குக் காட்டியது
தூக்கமாக இருந்த நானோ
தூபம் போன்ற செய்தி ஆனது
தூரப் பார்வையில் அர்த்தம் புரிந்தது
தூயன என்று மனிதரில் இல்லை
தூதுணம் சொன்னதைப் புரிந்து கொண்டேன்


தெ



# தெருமரல்

தெய்வங்கள் தேடி கோயில் சென்றேன்
தெளிவு எனக்கு வரவே இல்லை
தெற்கு திசையால் திரும்பி பார்த்தேன்
தெம்பு கொண்ட உருவம் இருந்தது
தென்றலும் கொஞ்சம் சிலீர் என வீசியது
தென் கலை கடவுளார் சிரித்து நின்றார்
தெய்வீகம் அங்கே ஒளியாய் தெரிந்தது
தெருமரல் இன்றி இல்லம் அடைந்தேன்


தே



# தேயாத தமிழ்


தேடல் உனக்கு நல்ல பாடம் சொல்லும்
தேடிப்பார் உன் சரித்திரத்தின் பதிவுகளை
தேச பக்தன் நீ இன்றி எவருமில்லை
தேசியத்தை எப்போதும் ஒதுக்கிடாமல்
தேர்வு செய்து உண்மைகளை அறிந்து
கொள்வாய்
தேன் தமிழை ஒரு போதும் மறந்திடாதே
தேறார் இருக்கின்ற இந்த நாட்டில்
தேற்றமுடன் எந்நாளும் ஒன்றுபட்டு
தேயாத தமிழனாய் என்றும் வாழு

# தை



## தைனியம்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள்
தைரியமும் வாயாலே சொல்வார்கள்
தை தொடங்கி மார்கழி வரையும்
தைத்தியர் ஆட்சிதான் கண்டோம்
தைனியம் இன்னும் தீரவில்லை




# தொடர்ப்பு

தொலைவில் இல்லாத அயல் நாடு
தொப்புள் கொடி நாடாம் அது
தொந்தரவு வந்த போதெல்லாம் எமக்கு
தொடர்ச்சியாக உரிமை மறுக்கப்பட்ட போதும்
தொண்டனாக கூட எமக்கு உதவவில்லை
தொன்மையான எமதினத்தை மாற்றான்
தொலைதல் செய்த வேளையிலும்
தொல்லை தந்த நாட்களிலும் எம்
தொடர்பை துண்டித்த நாடு

# தோ



## தோன்றில்

தோல்விகள் வெற்றியின் படிமானம்
தோற்பவர் ஒருநாள் வெல்வது நியதி
தோழனாய் துரோகிகள் நுழைந்ததனால்
தோழமை நிட்சயம் மாறிவிடும்
தோதகன் கொண்ட நாட்டினிலே
தோண்டினால் வருவது எலும்புதானே
தோட்டாக்கல் உலாவிடும் தேசத்தில்
தோள் கொடுப்பவர் ஒரு சிலரே
தோஷத்தைக் களைந்து விட்டதால்தான்
தோன்றில் புகழுடன் தோன்றலாம்

ந



# நடவடிக்கை


நன்றி கெட்ட மனிதரானாலும்
நரித்தந்திர சூழ்ச்சியாலும்
நஞ்சுக் குண்டு பட்டதாலும்
நயவஞ்சக செயலாலும்
நகைப்புக்கு ஆழானோம்
நண்பனும் பகைவனாய் மாறியதால்
நன்னிலம் முழுவதும் அழிந்தது
நரபலி இன்னும் தொடர்கிறது
நம்பிக்கை மட்டும் வீண்போகவில்லை
நடப்பவை நன்றாய் நடக்கட்டும்
நடுநிலை தீர்வுகள் கிடைக்கட்டும்
நடவடிக்கை வெற்றியாகட்டும்




# நாளும்

நாட்டுப் பற்றில்லாதவனுக்கு
நாய் கூட வால் ஆட்டாது
நாகப்பாம்பு படம் எடுத்தாலும்
நாகரீகம் அதில் இருக்கும்
நாவை அடக்கி வைத்தால்
நாணயம் எவர்க்கு தெரியும்
நாணம் பெண்களுக்கு மட்டுமெனில்
நாக்கை ஆண்களுக்கு ஏன் படைத்தாய்
நாட்டம் நாட்டிலும் இருக்க வேண்டும்
நாட் காட்டியிலும் இருக்க வேண்டும்
நாளை நமதாக வேண்டுமெனில்
நாளும் உழைப்பதே ஒரே வழி

நி



# நிவாரணி

நிம்மதி வாழ்வைத் தேடி
நித்தமும் இறைவனை வேண்டினேன்
நிகழ்காலம் எதிர்காலமெல்லாம்
நிச்சயமற்றதாய்ப் போச்சு
நிதானமாய் சிந்தித்தேன்
நியாயம் இல்லாத உலகில்
நிரபராதிகளுக்கு விடை இல்லை
நிலம் ஆக்கிரமித்த போதும்
நிலைமையை எடுத்தியம்பினாலும்
நிலைப்பாடு இன்னும் மாறவில்லை
நினைவு தினங்களைக் கூட
நிறைவேற்ற முடியவில்லை
நிர்மூலமான எமதுவளங்கள்
நிரந்தரமாய் அழிந்தது போல் உள்ளது
நிர்மாணம் வீதிகளுக்கு மட்டுமே
நிவாரணி இறைவனால் தான் கிடைக்க வேண்டும்




# நீலகண்டன்

நீதி இல்லா நாட்டில்
நீதிவான்களுக்குத் தண்டனை
நீதி நெறியெல்லாம்
நீறாய்ப் போன தேசத்தில்
நீலக் கண்ணீர் வடிப்பதில் பிரயோசனம் இல்லை
நீலன் இருக்கும் வரை
நீருள்ளிச் சட்டமாகும்
நீறு பூத்த இனமோ
நீடூழி வாழ்வதற்கு நிலையான சமாதானத்திற்கும்
நீலகண்டன் அருள் கிடைக்கட்டும்

நு

# நுனிப்பு

நுகர்ச்சி கொண்ட நாம்
நுட்பமாய் செயலாற்ற
நுண்ணிய பணிகளை
நுழைவுடன் செய்வோம்
நுழைவாயில் அடைப்பினும்
நுரையீரல் அடைக்காமல்
நுண்கலை பயின்று
நுனிப்புடன் வாழ்வோம்


நூ



# நூர்தல்

நூலகம் சென்று படி
நூல்களை உணர்ந்து பிடி
நூதனம் கண்டுபிடி
நூறுபேர் மதிப்பார் இனி
நூறாயிரம் பெயர் சொல்ல
நூர்தலால் முன்னே இடி


நெ



# நெடுவழி

நெறி தவறாத தமிழ் சமூகம்
நெருப்பையும், கடலையும் தாண்டி
நெருக்குவாரத்தில் இருந்து விடுபடவே
நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து
நெருப்பன் வதைகளையும் சந்தித்து
நெஞ்சுத் துணிவுடன் நீண்ட ஒரு பயணம்
நெடுந் துயர் துடைப்பதற்காய்
நெற்காணி நிலம் மீட்புக்காய்
நெய்தலில் உயிர் வாழ்வதற்காய்
நெய் விளக்கு ஏற்றுவதற்காய்
நெடு மூச்சுகள் பல விட்டு
நெடும் பகையை களைந்து சென்று
நெகிழ்ச்சி இல்லா வாழ்வைத் தேடுகிறோம்
நெடு வழி திறக்கும் வரை உழைப்போம்

நே



# நேயன்

நேசமுடன் பழகியதால்
நேரகாலமின்றி கதைத்து வந்தேன்
நேற்று திடீரென கூறினாள்
நேரு உன்னுடன் இல்லையென
நேரிழையால் சொல்லியதை
நேர்முகமாய் எதிர் கொண்டேன்
நேர் வழியில் செல்லும் நான்
நேர்கடனை வைத்து விட்டு
நேத்திரசன் நெஞ்சில் ஓட
நேசிப்பை மறந்து போனேன்
நேயன் நான் வேறு என்ன செய்ய

# நொ



## நொவ்வல்

நொங்கு குடித்துவிட்டு
நொடிப் பொழுதில் திரும்பி வந்தேன்
நொட்டை செய்தார்கள்
நொண்டி அடித்தார்கள்
நொதுமலாய் இருந்தார்கள்
நொய்யவன் என்றார்கள்
நொந்து போய் அமர்ந்தேன்
நொவ்வலாய் மௌனித்தேன்

# நோ



## நோற்றல்

நோக்கம் சரியாயின்
நோவந்த போதும் பின் வாங்காதே
நோட்டம் பார்த்த பின்
நோலாமையை விட்டெறிந்து
நோற்றல் மனிதப் பண்பாகும்

ப

# பயன்

பணத்திற்கு அடிமையாகி குணத்தினை கெடுத்திடாதே
பகைவனை நண்பனாக்கி பணிவிடை செய்யப்பாரு
பற்று மண்ணிலும் வேண்டும் கடமையிலும் வேண்டும்
பயத்தினால் கொள்கை மாறி பச்சோந்தி ஆகிடாதே
பம்மாத்து காட்டும் கூட்டில் எம்மாத்தும் இணைந்திடாதே
பதர் என்று எவரும் இல்லை குதர் என்று யாரும் இல்லை
பதவிக்கு சோரம் போனால் உதவியும் மாறிப் போகும்
பணிவிடை செய்வதற்கு துணிவினைக் கைவிடாதே
படையாட்சி வாழ்ந்த நிலத்தைப் பண்படுத்தப் பார்
பக்தியை இறைவன் மீதும் புத்தியை மண்ணின் மீதும்
பகுத்தறிவுடன் செயலாற்றி வாழப் பழகு
பட்டினி இருந்தும் எமை ஈன்ற தாயை தெய்வமாக்கு
படிகளைத் தாண்டி தடைகளை உடைக்கப்பார்
பயணங்கள் முடிவதில்லை வாகனங்கள் தான் வேறுபடும்
பருவங்கள் மாறினாலும் உருவங்கள் மாறாது
பழைமை கொண்ட எம் இனம் என்பதை மறந்திடாதே
பன்னாட்டுச் சமூகத்திற்கு பயமின்றி எடுத்துக் கூறு
பறைசாற்றி உதவிட காலத்தை நமதாக்கு
பயன் கிடைக்கும் வரை உறுதியாய் இரு

## பா



# பாரதம்

பாழ்பட்டுப் போன நாட்டில்
பாக்கியம் இல்லா இனமானோம்
பாதகரின் சூழ்ச்சியினால்
பாடம் நன்றாய் கற்றுக் கொண்டோம்
பாடுபட்டு உழைத்தாலும்
பாவிகள் எமக்கோ விடிவு இல்லை
பாலைவனக் காட்சி போன்று
பார்க்கும் ஊர்கள் தெரிகிறதே
பாரம்பரியம் கொண்ட எம்மை
பாரதமும் பார்க்கவில்லையே

பி

# பிரச்சினை

பிள்ளையார் சுழி போட்டு
பிழைகளை செய்யலாமா
பிழைப்புக்காய் கொள்கை மாறி
பிற்பாடு பாடலாமா
பிரிவுகள் தொடர்ந்த போதும்
பிரசவம் வந்தே தீரும்
பிரசங்கம் செய்வதனால்
பிரதமையை மாற்றலாமா
பிரணவம் சொல்வதனால்
பிரசித்தி பெற்று வாழ்வோம்
பிரகாசம் மண்ணில் தோன்ற
பிரச்சனைக்கு தீர்வை தேடு

பீ

## பீழை

பீடைகள் வந்த போதும்
பீதி கொள்ள வேண்டாம்
பீரம் கொண்ட நாமோ
பீடம் பெற்றே உழைப்போம்
பீமரன் வாழ்ந்த மண்ணில்
பீச்சாங் கொள்ளி இல்லை
பீடுடைய பெருமக்கள் நாம்
பீழை அகற்றி வெல்வோம்

௪



# புன்னகை

புகைத்தலை ஒதுக்கி வைத்து
புண்ணியம் செய் மனமே
புல்லாங்குழல் இசை தனை
புகற்சி செய் இனமே
புகழ் தலை விரும்பும் நீயோ
புகல் தனை மறந்திடுவாய்
புதை குழிகளையும் அழித்து விடும்
புத்தரின் பூமி இது
புது மலர்ச்சி தோன்றிடவே
புவனத்தில் இடமில்லையே
புலனை எம் இனத்தில் செலுத்தி
புன்னகையாய் வாழப்பார்




# பூர்வீகம்

பூக்கள் எல்லாமே
பூசைக்கு உதவுவதில்லை
பூசாரி எல்லோரும்
பூசனம் செய்வதில்லை
பூரணை நாட்களில்
பூமி இருள்வதில்லை
பூரணன் அருளின்றி
பூலோகம் இயங்குவதில்லை
பூகம்பம் தோன்றினாலும்
பூதங்கள் அழிவதில்லை
பூரணத்துவம் இல்லையென்பதால்
பூர்வீகம் மாறாது

பெ



# பெரியவள்

பெருநிலத்தின் தாய் அவளால்
பெருமை கொள்ளுது எம் நாடு
பெம்மானின் துணை இருந்தால்
பெண்ணால் முடியாதது ஒன்றுமில்லை
பெயர் விழங்க சாதித்த வீர மகள் அவள்
பெருவாழ்வுக்கு வித்திட்ட சாதனையாள்
பெலம் கொண்ட தடைகளையும்
பெறுமதியாய் தகர்த்த மாது
பெண்ணரசு சாதனைகள் எம்மனதால் அழியாது
பெரியவளின் தியாகங்கள் ஒரு நாளும் மறையாது

பே

# பேதாமை

பேசாமல் இருக்கவும் முடியவில்லை
பேரம் பேசும் சக்தியை நாம் இழக்கவில்லை
பேச்சுவார்த்தைக்கு நாம் என்றும் தயார்
பேதறுத்தல் ஏமாற்றம் தொடர்வதனால்
பேய்த்தனமாய் சொல்வதை நாம் ஏற்க மாட்டோம்
பேராசை எள்ளளவும் எமக்கு இல்லை
பேரரசு கொள்கை தனைவிடவும் மாட்டோம்
பேரின்ப வாழ்வுக்கே ஏங்குகின்றோம்
பேணாமை கொண்ட நாட்டிலே
பேதாமை காண்பது மிக அரிதே

# ஐ


## பைங்கிளி

பைதல் தீருவதற்கு
பைபிள் படித்திடலாம் ஆனால்
பைத்தியம் ஆட்சியென்றால்
பைசாதான் என்ன செய்யும்
பைசாசம் உபதேசித்தால்
பைங்கிளியும் வாய்திறக்கா




# பொன் மொழி

பொது அறிவை தேடிக் கற்றால்
பொறுப்பு வாய்ந்த மனிதராகலாம்
பொல்லாங்கு எதிர் கொண்டாலும்
பொலிவுடனே முன்னேறலாம்
பொன் போன்ற மனதிருந்தால்
பொறி கலங்க இடமே இல்லை
பொறாமை இல்லாமல் வாழ்ந்தால்
பொற்காலம் தானே வரும்
பொறுமைக்கும் எல்லையுண்டு
பொன்மொழிகள் என இதனையும் நினை

# போ



## போர்

போக்கிரி அமைச்சரானால் பொல்லாங்கு நாடாய்
மாறும்
போகத்தில் விதைக்காவிட்டால் வயல் எல்லாம்
நட்டமாகும்
போடிமார் இல்லையென்றால் பூமாதேவி சிரிக்காது
போஷாக்கு உணவு கூட பூமியிலே விளையாது
போட்டியுடன் கற்றுக் கொண்டால் முன்னேற்றம் தானே
வரும்
போலிகள் சங்கமித்தால் காலம் தான் முடிவாய் மாறும்
போதனை எல்லாம் கேட்டு சாதனை செய்ய ஒண்ணா
போனதை நினைத்துப் பார்த்து வாரதை
எதிர்கொள்வாய்
போரிடும் நிலத்தினிலே முயற்சியை வெற்றியாக்கு

# பௌ

## பௌத்தன்

பௌதீக வளங்கள் மாறலாம்
பௌர்ணமி ஒருநாளும் மாறாது
பௌத்த மதம் நல்லதைக் கூறினாலும்
பௌத்தன் மனம் மாறாதது வேதனை தான்

ம



# மட்டக்களப்பு

மது கரம் இனிக்கும் மந்த மாருதம் வீசும்
மயம் தரும் மதுகை ஊட்டும்
மலர்ச்சி பொங்கும் மகுடம் சூட்டும்
மரபு கூறும் மக்களை அணைக்கும்
மறம் விளையும் மட்டக்களப்பு மண்

ம



## மறுபடி

மண்டியிடாத நாம்
மண்ணுக்காய் போர் செய்தோம்
மகிழ்ச்சி வாழ்வை எதிர்பார்த்து
மகாத்மா காந்தி வழியிலும் கேட்டோம்
மறம் செய்தும் அறம் கேட்டோம்
மமதை கொண்டவர்கள் தரவில்லை
மகிமையாய் ஒரு காலம் வாழ்ந்தோம்
மக்களை இழந்து நிற்கதியானோம்
மனம் அவர்களுக்கு வரவில்லை
மனச்சாட்சி கொண்ட உலகும் பார்க்கவில்லை
மனோபலம் உள்ளவரைக்கும்
மற்றவரைப் போல நாமும் வாழ
மரியாதையுடன் இங்கு உலாவ
மனப் பூர்வமாக பணி செய்கின்றோம்
மரணம் முடிவு அல்ல சரணமும் அல்ல
மதுகையால் பயணிக்கும் நாம்
மறுபடியும் சுதந்திரம் அடைவோம்

மா

# மான்மியம்

மானசீக வாழ்வைத்தான்
மானநஷ்டம் கேட்கவில்லை
மானம் உள்ள இனம் நாங்கள்
மாற்றான் தடை போட்டாலும்
மாறுபாடுகளைக் களைந்து
மாந்தர் நாம் ஒன்றிணைவோம்
மான்மியம் வாழ்வை அடைவோம்

மி

# மிடல்

மிகுந்த விலை கொடுத்தோம்
மிட்டாய் சீனி மா கேட்டா
மிகல் வாழ்க்கைக்குத் தானே
மிகையாய் நாம் உழைத்தோம்
மிதவாதத்தாலும் கேட்டுப் பார்த்தோம்
மிருகம் மனிதத்தில் சூழ்ந்ததனால்
மிறை இன்னும் தீரவில்லை
மிரள் வந்து தடுத்த போதும்
மிரட்டல்தான் நேர்ந்த போதும்
மிடலுடன் வெற்றி காண்போம்

மீ

# மீறாமல்

மீதியாய் உள்ள காணி
மீட்சியாய் போகும் முன்னே
மீண்டும் நாம் ஒன்றிணைவோம்
மீண்டெடுக்க ஒரு குடை தனில்
மீறாமல் செயல்படுவோம்

மு

# முன்மாதிரி

முடியாட்சி இனவாதத்தால் கலப்படமானது
முகவரி தொலைத்த அகதிகளாய் நாம்
முடிவினைக் காணாமல் தடுமாறுகின்றோம்
முக்காட்டுக்கள் இருந்து பயனேதுமில்லை
முத்திரை பதித்த முழுமையான எம்மினம்
முனைப்புடன் செயலாற்றினால் தான்
முரண்பாடுகளைக் களைந்து முன்னேறலாம்
முட்டுக் கட்டைகளெல்லாம் தற்காலிகமே
முள்ளிவாய்க்காலும் முடிவல்ல உணருவாய்
முறைமையை அடையும் வரைக்கும்
முன்மாதிரியாய் வழிகாட்டுவோம்



மூ

# மூதாதையர்

மூடு மந்திரத்தால் முயற்சிகளை நிறுத்தி
மூளைச் சலவை செய்ய ஆட்கள் வருகிறார்கள்
மூக்கை விட முடியாத ஒரு சிலர் இங்கே
மூட்டைப் பூச்சி போன்று குத்திவிடுகின்றனர்
மூடன் என்றா எம்மை நினைக்கிறார்
மூப்புடன் பலர் வழிகாட்டியாய் இருக்கும் போது
மூடி மறைத்திட இங்கு ஒன்றுமே இல்லை
மூலைக்குள் படுத்துக் கொண்டு
மூன்று வேளையும் உண்பதால் மட்டும்
மூர்த்தி வரம் கொடுத்தாலும்
மூதாதையர் நிலத்தைக் காப்பாற்ற முடியாது

மெ



# மெட்டி

மெய்யாகவே உன்னை காதலித்தேன்
மெதுவாகவே என்னை ஒதுக்குகிறாய்
மெட்டுடன் நான் பாடும் போது மட்டும்
மெதுமையாக புன்னகை செய்கிறாய்
மெய்ஞ்ஞானம் உள்ள பெண்ணே
மெய்ப்பிக்க ஒரு பதிலைக் கூறு
மெழுகு வர்த்தியாய் உருகுகிறேன்
மெருண்டு ஓடி மறைந்திடாதே
மென்று விழுங்கி நடித்திடாதே
மெய்க்காப்பாளர்கள் எமக்கு வேண்டாம்
மெல்லியதாய் உன் சம்மதத்தை சொல்
மெட்டி அணிய நாள் குறிப்போம்

மே

# மேற்கொண்டு

மேதினியில் எமக்கொரு நாடும் இல்லை
மேதாவி நாம் என்று கூறுகின்றோம்
மேலாண்மை கொண்டு நசுக்குவதால்
மேன்மையற்ற இனமானோம்
மேனாம்பு பட்டு தவிப்பதனால்
மேற்கொண்ட திட்டங்கள் சிதைகிறது
மேம்பாடு காணத்தான் உழைக்கின்றோம்
மேலோட்டமாக நான் கூறுகிறேன்
மேற்கொண்டு இதனை நீ விளங்கிடுவாய்

# மை

## மைந்து

மைல் கல்லை அடையும் வரை
மைதானம் கடந்தாலும்
மையல் கொள்வோம் மண் மீதே
மைந்துடன் துணிந்து வெல்வோம்

# மொ




## மொச்சை

மொழிகளில் அழகு மொழி தமிழ்தான்
மொசுப்பு அதில் அறவே இல்லை
மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும்
மொழுப்பு போட்டுப் பார்க்கும்
மொய் அதிலே உண்டு
மொஞ்சகம் போல் பிரகாசிக்கும்
மொச்சை இல்லா எம் மொழியே

மோ

# மோகனம்

மோசடி செய்து வாழ்பவனுக்கும்
மோனை கொண்டு ஆழ்பவனும்
மோட்சம் ஒரு நாளும் அடையான்
மோதகம் படைத்து பூசை செய்தாலும்
மோதிரம் அணிந்து ஆலாத்தி எடுத்தாலும்
மோனன் இருந்து சந்தித்தாலும்
மோகனம் காண்பது அரிதிலும் அரிது




# மௌசு

மௌனம் சம்மதம் என்பது பொய்
மௌசு சம்மதத்தையும் தடுக்கும்

ய



# யமதர்மன்

யதேச்சதிகாரம் உள்ளவனுக்கு
யதார்த்தம் ஒரு நாளும் புரியாது
யத்தனம் மேற் கொண்டால் தான்
யதியும் வெற்றியீட்டுவான்
யதேச்சையாக நடப்பவற்றை
யவனிகை கொண்டு மறைக்க முடியாது
யந்திர வாழ்க்கையானதால்
யமதர்மன் என்ன ஓய்வா எடுப்பான்

யா



# யான்

யாதனையால் உள்ளம் நொந்தோம்
யாசக வாழ்வுக்கு ஆழானோம்
யாத்திரையும் செய்து பார்த்தோம்
யாப்புறுத்தலாலும் கேட்டோம்
யாம்பியம் இன்னுமே தீரவில்லை
யாங்கு இதை சொல்லி அழ
யாவுமே இழந்த பின்பு
யாவன் முறையிட்டும் ஒன்றுமில்லை
யார் எமக்கு இனி உதவுவார்
யான் வேண்டுவேன் இறைவனையே

# யோ

## யோதனம்

யோக்கியம் இருப்பவர்க்கு
யோகம் தானாய் வரும்
யோகாசனம் செய்தாலும்
யோகியாய் ஆகிடலாம்
யோசித்து முடிவெடுத்தால்
யோதனத்தையும் வென்றிடலாம்

ர

# ரசிகன்

ரகங்கள் மனிதரில் உள்ளதால் தான்
ரவைகளால் செத்து மடிந்தோம்
ரவுடித்தனப் போக்குள்ளவரை
ரம்மிய வாழ்வு கிட்டாது
ரணகளத்தால் மாண்ட இனம்
ரஞ்சகத் தீர்வை நோக்கி
ரகசியம் என்றும் காத்து
ரசணையைப் பூர்த்தி செய்வோம்
ரசிகனாய் என்றும் வாழ்வோம்

ரா

# ராஜ்ஜியம்

ராசி பார்த்து சேதி வராது
ராஜா கூறி விதி மாறாது
ராத்திரி வேளை சூரியன் தெரியாது
ராணுவ ஆட்சி எப்போதும் நிலைக்காது
ராகம் இன்றி பாடல் பிறக்காது
ராட்சகன் கொடுமை தொடர்ந்து பலிக்காது
ராகு காலம் தமிழர் கட்கும் உண்டு
ராமாயணம் புதிதாய் படைப்போம்
ராஜ்ஜியம் அதில் சிரித்து மகிழ்வோம்

ல

# லங்கணம்

லட்சோபலட்சம் ஆகுதியான மண்ணில்
லட்சியம் ஒரு நாளும் மாறாது
லஞ்சம் கொடுத்து கொள்கை வாங்க முடியாது
லயிப்புடன் மண்ணில் பற்று வைத்தோம்
லங்கணம் வந்தேறும் இலக்கை அடைவோம்

# லா

## லாந்து

லாகிரி வஸ்து மூலம்
லாபம் ஈட்டும் நாட்டில்
லாயக்கு கிடைப்பதற்கு
லாவணிக் கூத்தாடினாலும்
லாடு கொடுத்து உண்டாலும்
லாந்து வாழ்வுக்கு முடிவில்லை

வ



# வணக்கம்

வடைக்கதை கேட்டுப் புளிச்சுப் போன
காதுகளுக்கு
வதைக்கதை கொஞ்சம் சலிப்பாகத் தான் இருக்கும்
வயல்களில் பயிரை மட்டுமல்ல உயிரையும் தான்
விதைத்தோம்
வலிப்பு எமக்கு மட்டுமே புரியும் அவர்களுக்கு
விழங்காது
வகை தொகையின்றி எம் உறவுகளை இழந்தவர்
நாம்
வந்தான் வருத்தான் எங்கள் நிலத்தை சூழ்ந்து
கொண்டு
வந்தேறு குடியென்று எங்களுக்கு சொல்லுகிறான்
வசிப்பிடத்தையும் வாழ்வையும் தொலைத்தவர் நாம்
வசைபாடும் போக்கு இன்றுமே குறையவில்லை
வளம் தேடி வாடி வாடித் திரிகின்றோம்
வளி தவறி நம்மில் சிலர் பச்சோந்தியானதால்
வடகிழக்கிற்கு தீர்வின்றி ஏங்கலானோம்
வலை வீசி எம்மை யார்தான் தடுத்தாலும்
வஞ்சகத்தால் மீண்டும் சூது கவ்வினாலும்
வசந்தம் ஒரு நாள் கிடைத்தே தீரும்
வஞ்சினம் எடுத்து நாம் வெல்வோம்
வருங்காலம் பதில் சொல்லியே ஆகும்
வணங்குவோம் மண்ணில் வாழ்வோம்

வா

# வாய்ப்பு

வாசிப்பு மனிதரைத்தானே பூரணமாக்கும் மிருகத்தை
அல்ல
வாயுரை சிலரை புண்படுத்தும் பலரை அல்ல
வாக்குவாதம் உண்மைகளையும் பொய்யாக்கும்
வாக்குச் சீட்டோ இங்கு ஆட்சியைத் தீர்மானிக்காது
வாய் கேள்வியும் ஜனநாயகத்தை மாற்றலாம்
வாள் முனையைவிட பேனாமுனை வலிமைதான்
வாழ்வு கேள்விக் குறியான போது பேனாக்களும்
மௌனிக்கும்
வாகடத்தில் எல்லா நோய்களுக்கும் மருந்துகள்
கிடையாது
வாத்தியார் எல்லாப் பாடங்களையும் கற்பிக்க முடியாது
வார்த்தைகளால் எல்லாவற்றையும் சாதிக்க முடியாது
வால்வெள்ளியால் சூரியனை மறைக்க முடியாது
வாலிகன் கடலில் தான் சங்கமித்தாலும்
வான் பயிர் அங்கே செய்யமுடியாது
வாழ்வு சுதந்திமாய் அடையாவிட்டால்
வாய்ப்புக்கள் எவருக்கும் கிடைத்திடாது

வி



# விருப்பு

வில்லங்கம் பல கண்ட சமூகத்திற்கு
விகடமான பாதைகள் தடையாகாது
விடுதலை என்பது வெங்காய வடை போன்றதல்ல
விஞ்ஞான தொழில்நுட்பம் வளர்ந்த உலகில்
விழிப்புடன் அதற் கேற்றாற் போல்
விரைந்து செயல்பட்டே ஆகவேண்டும்
விண்ணப்பத்தை உலகின் முன் வைத்தாலும்
விடிவு கிடைத்து விடும் என்று இல்லை
விரோதிகளின் செயற்பாடுகளை முறியடித்து
வில்லங்கத்தையும் தாண்டிச் சென்று
விதையாகிப் போனவர்களின் கனவு நிறைவேற
விருப்புடன் கடைமையை செய்வோம்

வீ



# வீண்

வீடும் மண்ணும் இழந்த நாட்டில்
வீதிகள் தீர்வாகாது
வீறு கொண்ட எம்மவர்க்கு
வீமம் தடையாகாது
வீரம் கொண்ட எங்கள் இனம்
வீழ்ந்தாலும் எழுவோம்
வீசி எம்மை அழித்த போதும்
வீச்சுடன் வெல்வோம்
வீக்கம் உள்ள நாள்வரைக்கும்
வீண் போகா உறுதி

வெ



# வெறுக்கை

வெளிச்சம் ஒன்றைத் தேடுகிறோம்
வெள்ளம் சூழ்ந்து மூழ்கின்றோம்
வெட்டைவெளி நிலத்தில் அலைந்து
வெறுங்கையுடனே வாழுகிறோம்
வெற்றிக்காக ஏங்கும் நாமோ
வெறுப்பு வரினும் விடுவோமா
வெடி குண்டாலே குடி அழிந்த நாம்
வெங்காயத் தீர்வை பெறுவோமா
வெட்டிப் பேச்சு எமக்கு இல்லை
வெள்ளைக் கொள்கை மாறாதே
வெயிலில் காய்ந்து வரண்ட போதும்
வெறுக்கை பெற்றே தீர்வோமே

# வே



## வேட்கை

வேழமுகத்தவனின் துணை இருந்தால்
வேற்றுமையிலும் ஒற்றுமை காணலாம்
வேட்கையுடன் ஓரணியில் திரண்டால்
வேந்தனும் மனம் மாறி உணர்வான்
வேடம் நமக்கிங்கு தேவையில்லை
வேலைகளை செயலில் செய்தால்
வேளாண்மைகளும் நன்றாய் விளையும்
வேகத்தை உழைப்பினில் காட்டினால்
வேல் கொண்டு பகை விரட்டலாம்
வேதனம் கொடுத்து உரிமையை பெற முடியாது
வேதாளம் முருங்கையில் ஏறுவதைப் போல்
வேட்கையை ஏற்றிட முடியாது


# வை

## வைதாளிகர்

வைரமான கொள்கையுடன்
வைகறையைத் தேடுகிறேன்
வையத்தில் தலை நிமிர
வைராக்கியம் கொண்டுள்ளேன்
வைரியும் மனம் மாறுவான்
வைதாளிகர் எமைப் பேசுவார்

# அ - ஔ

அறுபத்தாறு ஆண்டுகள் கடந்தும்
ஆனது எமக்கு ஒன்றுமில்லை
இன்னும் தான் இருள் எமக்கு
ஈனாகளின் இழி செயலும்
உள்ளதெலாம் பறிகொடுத்து
ஊதாரியாய்ப் போனோம்
எதுவும் அற்ற இனம்
ஏமாந்து பல காலம்
ஐங்கரனை வேண்டி
ஒன்றுபட்டு பூசை செய்தோம்
ஓர் தீர்வும் கிடைக்கவில்லை
ஔவியம் நாடே ஐநாவுக்கு பதில் சொல்




# எண் கவிதை

01ம் புரியாதா இந்நாட்டில்
02 மொழிக்கு சம உரிமையாம்
03 இனமும் ஒற்றுமையாய் இல்லை
04 குணம் கொண்டவரும்
05 புலன்களையும் அடக்கி
06 கடல் கடந்து போய்
07 தேசமும் எங்கள் உறவுகள்
08 திசையும் அலைந்து அலைந்து
09 கிரகம் போல் ஒன்றுமே புரியாமல்
10ம் மனமுடனே பாவிகளாய்ப் பரிதவித்து
100 ஆண்டுகள் வாழ நினைத்து
1000 நேர்கடன் வைத்து
10,000 ரூபா மாத வருமானமின்றி
100,000 கடன் பட்டு அவுஸ்திரேலியா சென்று
1,000,000 சதம் கூட சம்பாதிக்க முடியாமல்
10,000,000 தவம் இருக்கிறார்கள் எங்கு சொல்வது.

# உண்மைச் சமாதானம்

இன்னும் விடிவு இல்லை இன்றும் முடிவு இல்லை
இனத்தின் நிம்மதிக்கு இறைவன் அருளும் இல்லை
சண்டை முடிந்தது என்று சனத்திடம் சொன்னாலும்
சமாதானம் வந்ததென்று தம்பட்டம் அடித்தாலும்
உண்மைச் சமாதானம் ஊரின் வீதிகளா?
உரிமைப் போர் என்ன எருமைப் பால் தயிரா?
செத்து மடிந்ததெல்லாம் செத்தல் மிளகாய் கேட்டா?
செந்நீர் சிந்தியது சேலை வேட்டிக்காகவா?
கொள்கை என்ன கொளுக்கட்டை பலகாரமா?
கொள்வனவு செய்யும் கோதுமை பண்டங்களா?
விடுதலை யென்பதெல்லாம் வெங்காய சம்பலா?
விலை கொடுத்து வாங்க விளையாட்டுப் பந்தா?
மண்ணில் மாண்டவர்கள் மதுபானக் கடைக்காவா?
மரணத்தைத் தழுவியது மாவு சீனி பருப்புக்கா?
கண்ணீர் சிந்தியதும் கனத்த உயிர் அழிந்ததும்
கட்டைச்சம்பலும் பாற்சோறும் உண்பதற்கா?
சிந்திப்பாய் ஒரு தடவை சீக்கிரமாய் நீயும்
சிந்தனையை ஒரு கணம் உன்மண்மீது செலுத்து
சந்ததிகள் சுதந்திரமாய் வாழும்
சமாதானம் வேண்டி சனத்துக்குச் சேவைசெய்

# இது....

# பொதுவானவை

அம்பிளாந்துறையூர் அரியம்

# புலனே

எங்களின் தேசம் இருள் சூழ்ந்த வேளை
இதயம் சும்மா இருக்குமா
உதயம் காணும் ஒரு நாள் வரைக்கும்
உலகத் தமிழினம் தூங்குமா
நாதியற்று வாழும் நாங்கள்
நாளை தீர்வு கிடைத்திடுமா
பட்டினி சாவும் பசியுமாக
எத்தனை நாள் தான் ஏங்குவது
பாரின் கண்களும் பாரத நாடும்
பார்க்க ஏனோ தயங்கிறது
பரிதாபத்தை எத்தனை காலம்
பலரிடம் இன்றும் சொல்வது
பலனே இனியும் இல்லையெனில்
புலனே எமக்கோ கை கொடுப்பாய்

# யாதும் ஊரே யாவரும் கேளீர்

புலம் பெயர் நாட்டினிலும்
பல தலைமை முளைத்ததனால்
பலம் அங்கு சேர்ந்தாலும்
பகை இன்றும் மாறவில்லை
சனம் அங்கு கூடி சங்கு முழங்கினாலும்
பிணம் தின்னிக்கு மனம் மாறவில்லை
பெரிய மனது படைத்த நாடுகளும்
பேசுவதற்கு உண்மை இருந்து துணியவில்லை
காசு கொடுத்து காரியத்தைக் கெடுப்பதற்கு
விஷா எடுத்து விரைகின்றார் பலர்
நமக்குள்ளே சிலர் நரி வேலை செய்வதற்காய்
அங்கும் தான் இருக்கின்றார் இது உண்மை
யாரை நம்புவது என்றே தெரியவில்லை
யாதும் ஊரே யாவரும் கேளீர்

# அறுதியாய் விழுவார்

சரித்திரத்தை மறைப்போரும்
சாத்வீகத்தை புரியாதோரும்
அடக்கு முறை செய்வோரும்
அட்டூழியம் காண்பார்!
உண்மையை மறைப்போரும்
உரிமையை தடுப்போரும்
உடைமையை அழிப்போரும்
உணர்வினால் எரிவார்!
சாலைகள் அடைப்போரும்
சாவுகள் தந்தோரும்
சண்டைகள் செய்தோரும்
சத்தியமாய் மறைவார்!
ராகத்தை கெடுத்தோரும்
தானத்தை மாற்றியோரும்
சுருதியை நிறுத்தியோரும்
அறுதியாய் விழுவர்!

# தமிழாட்டம்

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை
மண்ணில் தொடர்கிறதே மக்கள் எங்களுக்கே
இருள் சூழ்ந்த வேளையிலே ஒளி தேடும்
எம்மவர்கள்
அருள் வேண்டி அழுத போதும் ஆறுதல் இல்லை
மாறுதல்கள் வரும் என்று மனம் சொன்னாலும்
ஆறுதல்கள் தருவதற்கு யாரும் அற்றுப் போனோம்
காலம் கனிய வேண்டுமென கடவுளிடம்
விண்ணப்பித்தோம்
கோலம் மாறும் நாளை கொண்டாடி வரவேற்போம்
தானம் மாறிச் சிலர் தப்பாட்டம் ஆடினாலும்
தமிழாட்டம் எப்போதும் தனித்துவமாய் ஆடும்

# கொக்கட்டிச்சோலைப் படுகொலை

ஆயிரத்து தொழாயிரத்து எண்பத்தி ஏழு
ஜனவரி இருபத்தி எட்டாம் நாள் அதிகாலை
இரச்சலுடன் வானூர்திகள் வட்டமிடுகின்றன
இரும்பு பாதங்கள் இரு திசையால் முத்தமிடுகின்றது
இனப்படுகொலையொன்று அரங்கேறுகிறது
இறால் வளர்ப்புப் பண்ணைகளில்
இரத்த வெள்ளம் வாவியுடன் கலக்கிறது
எம்மவர்கள் துடிக்கத் துடிக்க மாள்கின்றனர்
இயமர்களின் வெறியாட்டம் தொடர்கிறது
படுவான்கரைப் பெருநிலமும் பரிதவிக்கிறது
பட்டென நிமிர்ந்து நின்ற நெற்கதிர்கள்
சட்டென தலைகுனிந்து நடுங்கிறது
சுட்டு வந்த சூத்திரதாரிகள் எல்லாம்
சுடுகாடாய் மாறுகின்றான்
மட்டமாக அப்பாவிகளை போட்டுத் தள்ளுகிறார்
மட்டக்களப்பு மாவட்டமே அதிர்கிறது
மகிழடித்தீவு சந்தி இருள்கிறது
மண்முனை வாவியும் அழுகிறது
மரண ஓலங்கள் வானைப் பிளக்கின்றன
மாற்றானின் வெறியாட்டம் நடக்கின்றது
ஆற்றாமையால் விம்மி அழுகின்றோம்
தேற்ற ஆளில்லாத திடலாய் தெரிகிறது

குற்றுயிரான வரையும் கொலையாளி விடவில்லை
செத்தப் பிணங்களுடன் சேர்த்துக் குவிக்கிறான்
கத்தி வாள் கொண்டு கழுத்தை அறுக்கிறான்
கத்தியும் கைகூப்பிக் கெஞ்சியும் விடவில்லை
உழவு இயந்திரத்தில் உடல்களை ஏற்றி
ஊர் உறங்கும் நேரமதில்
அம்பிளாந்துறை முருகன் கோயிலடியில்
அத்தனை சடலங்களையும் சுட்டுப் பொசுக்குகிறான்
ஆக்கிரமிப்பான் ஆனந்தம் காண்கிறான்
ஓநாய்களின் வாயில் இரத்தவாடை அடிக்கிறது
கொடுமையின் உச்சம் ஊர் அழுகிறது
கொக்கட்டிச்சோலை படுகொலை என பதிவாகிறது

- 1990ல் இயற்றியது -

# சமாதானம் வந்துவிடும்

வெள்ளைப் புறா பறந்தாலும்
வெண் தாமரை மலர்ந்தாலும்
வெள்ளை உடை அணிந்தாலும்
சமாதானம் வந்திடாது!
உள்ளத்தால் இனவாதம்
உள்ளிருந்து அறுக்கும் போது
உதடுகள் சொல்வதால்
சமாதானம் வந்திடாது!
சண்டையிலும் வென்றாலும்
சனத்திற்குப் பால்சோறு கொடுத்தாலும்
சரித்திரத்தை மாற்றினாலும்
சமாதானம் வந்திடாது!
பாதைகளை செப்பனிட்டு
பாலங்களைக் கட்டி
பாற்குட பவனி செய்தாலும்
சமாதானம் வந்திடாது!
அடக்கு முறை தகர்ந்து
அபிலஷைகள் பூர்த்தியாகி
அரசியல் தீர்வு கிடைத்தால்
சமாதானம் வந்துவிடும்!

# பொன்னாடை

மன்னனுக்கும், மடையனுக்கும், இடையனுக்கும்
கண்ணனுக்கும், கலைஞனுக்கும், காட்டிக்
கொடுத்தவனுக்கும்
ஆன்மீகவாதிக்கும், அரசியல் வாதிக்கும்,
அயோக்கியனுக்கும்
தியாகிக்கும், துரோகிக்கும், விரோதிக்கும்
மந்திரிக்கும், தந்திரிக்கும், சுந்தரிக்கும்
பகைவனுக்கும், நண்பனுக்கும், பண்பானவனுக்கும்
சாமிக்கும், ஆமிக்கும், மாமிக்கும்
தலைவனுக்கும், தொண்டனுக்கும், நடிகனுக்கும்
பச்சோந்திக்கும், பரமவிரோதிக்கும்,
பாக்கியவான்களுக்கும்
அறிவாளிக்கும், ஆற்றல்மிக்கவனுக்கும்,
முட்டாள்களுக்கும்
வர்த்தகனுக்கும், வருத்துபவனுக்கும்,
மருத்துவனுக்கும்
வித்தகனுக்கும், விவேகமானவனுக்கும்,
விளையாட்டுவீரனுக்கும்


சேவை செய்தவனுக்கும், ஊரை விழுங்கியவனுக்கும்,
பம்மாத்துக் காரனுக்கும்
சாதனையாளனுக்கும், சரித்திரநாயகனுக்கும்,
சண்டியனுக்கும்
யாருக்கும் யாரும் போர்க்க கூடிய துணி
தகுதி யென்று சந்தையில் வாங்கிய சால்வை
மரியாதையென்ற பெயரில் மானம் கெட்டவர்களையும்
மகிழ்விக்கும் ஆடை
மலிவுக் கௌரவம் கொடுக்க பொலிவான மேனி மூடும்
துண்டு
பொருத்தமில்லாத சமத்துவ பாராட்டு போர்வை
பொன்னாடை.

# சத்தியமாய் பசி தீரும்

என் செய்வோம் ஏழையானோம்
இருக்க இடமில்லா எதிலிகளானோம்
மனமிருந்தும் பணமில்லா
நடைப்பிணங்களானோம்
பார்வைக்கு நாம் மனிதரானோம்
பற்றுள்ள தமிழரானோம்
சுதந்திரமாய் வாழவே ஆசையுண்டு
சுழல்காற்றும் சூறாவளியும் தடுக்கிறது
சுகமான சீவியத்தைத் தேடி நாமோ
சுற்றுகிறோம் ஒன்றுமே தென்படவில்லை
சற்றுமுன் கிடைத்த செய்தி இது
சனிபகவான் சூரியனை நெருங்குவதால்
சண்டாளன் மிகவிரைவில் அழிவானாம்
சமாதானம் அப்போது மலருமாம்
சமத்துவமாய் வாழ வழி கிடைக்குமாம்
சரித்திரத்தில் தலை நிமிரும் நாள் மலரும்
சத்தியமாய் பசிதீர்ந்து பலன் பெறுவோம்

# தேசத்தின் கபடம்

கொலைகளைத் தந்த ஆயுதங்கள்
கொள்ளை அடித்த சாமான்கள்
கலைகளை மாற்றும் கறையான்கள்
தலைகளைக் கொய்த சாத்தான்கள்
கதைகளை முடித்த சீமான்கள்
வதைகளை செய்த வளிசல்கள்
தமிழ் கொலை எழுத்துக்கள்
தடுமாறிய வார்த்தைகள்
சரித்திரம் மறைந்த சங்கதிகள்
சாதனையாளரின் வேதனைகள்
சோதனையாளரின் துன்பங்கள்
சோடனை செய்த பொய்கள்
அடக்குமுறைப் பாதணிகள்
ஆக்கிரமிப்பு இருள்கள்
அத்தனையும் கண்டேன்
"தேசத்தின் கபடம்" காட்சியிலே



# செல் சேர்விஸ் திருமணம்

மாமாங்கக் கோயிலில் தாலி கட்டிறதாம்
மாநகர மண்டபத்தில் மதிய விருந்தாம்
எனக்கும் அழைப்புக் கிடைத்தது
எனது உறவினர் திருமணம்தான் அது
நானும் மனைவியும் அதற்கு சென்றோம்
முகூர்த்த நேரம் ஐயர் வந்தார்
வீடியோக்காரன் வர சுணக்கமாயிற்று
முகூர்த்த முடிய பத்து நிமிசம் இருக்கும் போது
அந்த கமராகாரர்கள் கடகடஎன வந்தார்கள்
ஐயர் அமர்ந்து படபட என மந்திரம் சொன்னார்
அம்மி மிருச்சி அருந்ததி பார்த்து சடபுட என
மஞ்சள் அரிசியை மடமடஎன எறிந்து
தாலி கட்டி ஆசீர்வதித்தனர்
கலியாணம் முடிந்தது கட்சிதமாக


மண்டபம் சென்றோம் மதியவேளை
வாசலில் நான்கு சிறுமிகள் நின்றனர்
பன்னீர் தெளித்தது ஒன்று
மற்றையது பொட்டு தட்டை நீட்டியது
இன்னொன்று கூடையிலிருந்த
சிவப்பு றிபன் சுற்றிய கேக்கை தந்தது
எஞ்சிய சிறுமி சோடாப் போத்தலைத் தந்தாள்
இத்தனையும் மண்டப முன்பு நடந்தது
இதன் பின் மண்டபம் நுழைந்து கதிரையில்
அமர்ந்தோம்
தடதட என ஒரு அண்ணாச்சி வந்தார்
சடுதியாக சொனார் அங்கே போங்க சோறு
இருக்கு
எங்கே என்று அவரைப் பார்த்தேன்
அதோ பாருங்க போலிங்கை என்றார்
சொன்னதை மதித்து அவ்விடம் சென்றோம்
கூறைச்சாறி கட்டி குடும்பப் பெண்களும்
சிலுக்கு சேலை அணிந்த இளசுகளும்
பட்டு வேட்டி கட்டிய பாக்கியவான்களும்
நெடி காற்சட்டை அணிந்த அதிகாரிகளும்
குழந்தையை கையில் ஏந்திய தாய்மார்களும்
முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின்போது
சோதனை சாவடிக்கு முன் வொடி செக்கின்
பொயின்ருக்கு நிற்பது போல்
அகதி முகாம் உணவைப் பெற அடிபட்டு வரியில்
நிற்பதுபோல்
சிறைச்சாலை கைதிகள் மதிய உணவுக்காக
பரிதவிப்பதைப் போல்
கூப்பன் கடையில் உணவு முத்திரை சாமான்
பெறுவது போல்

வெள்ள நிவாரண றேசன் சாமான் எடுப்பது போல்
கல்யாண வீட்டு சாப்பாட்டுக்காக வரிசையில்
நிற்கிறோம்
நாங்களும் பின் தொடர்ந்துசென்று
பீங்கான்னை தூக்கி
மஞ்சள் சோற்றைப் போட்டு கோழிதுண்டை
தேடினேன்
குழம்பு மட்டுந்தான் கோழிகள் முடிந்து போச்சு
உடைந்த கடலட் துண்டும் எஞ்சிய
மாசிச்சம்பலையும்
பசிக்காக அள்ளி இரண்டுவாய் வைத்து விட்டு
தண்ணீர் குடிக்க ஐந்து மீற்றர் கடந்து சென்றேன்
ஐஸ்கிறீம் கப்பை அடிபிடி பெற்றுஎடுத்துக்
கொண்டோம்
ஒருவாறாக உதவாத விருந்தோம்பல் முடிந்தது
மணமக்களுக்கு பிறசன்ட் கொடுக்க மேடைக்கு
சென்றோம்
அங்கேயும் அதேமாதிரி நெருக்கடி வரிசை
வெடிங்கேக் என ரெஜிபோம்மில்
கமறாக்கரனின் எடுப்புக்கள் ஒருபுறம்
சினிமாப்படத்தின் இயக்குனர் போன்று
வீடியோ பொடியன் விதம் விதமான சம்ஷைகள்
நெருக்குப்பட்டு என்பலப்பைக் கொடுத்துவிட்டு
நேராக வீடு போய்ச் சேர்ந்தோம்
எங்கே போனது எம்மவர் கலாச்சாரம்
இதுதான் தமிழரின் பாரம்பரியமா?
அழைப்பிதழ் என்ன வருமானம் பெறவா?
வாழையடி வாழையான வளமுற வாழ்ந்து

வகை தொகையான திருமணங்களை நடத்திய
தமிழ் மரபுப்படி உபசரித்து தேறிய இனம் நாம்
வந்தோரை வரவேற்று விருந்தோம்பல் செய்து
தொந்தரவு இன்றி சுகமாக வழிநடாத்திய நாம்
நாகரீகம் என்ற பெயரில் அநாகரீகமாக
செல் சேர்விஸ் என்ற பெயருடன்
ஊரைக் கூட்டி ஊழை நாய்களுக்கு
எச்சி முள்ளைக் கொடுப்பது போன்று
மூச்சுத் திணற முண்டியடித்து சாப்பிடுவதற்குப்
பெயர்தான்
விருந்தோம்பலா அல்லது வருந்தோம்பலா
உபசரிக்க உதவிக்கு ஆழ் இல்லாட்டி
சம்பளத்திற்காவது நாலு சனத்தை எடுங்கள்
அதுவும் வழங்காட்டி உங்களுடன்
மட்டுப்படுத்துங்கள்
எங்களை அழைத்து ஏளனம் செய்யாதீர்கள்
வேண்டாம் செல்சேர்விஸ் திருமணம்.

# யார் தலைவன்?

நெஞ்சில் சுயநலமும் நேர்மைத் தன்மையின்றி
வஞ்சத்தை சுமந்துவாயாலே பொய்பேசி
கஞ்சல் தனத்தை கடமையில் காட்டி
பிஞ்சு மனங்களை புண்பட வைத்து
நஞ்சரிக்கும் வார்த்தைகளை நயமாக கூறி
நரித்தனமாய் நடப்பவர்கள் தலைவர்களா?
மக்களிடம் நான்தான் மகான் என்று
மார்தட்டி மசக்கி மகிழ்வித்து
போலி வாக்குறுதிகளை அள்ளிவீசி
காலியான கதிரையில் அமர்ந்து கொண்டு
மனிதத்தை தொலைத்த மனிதர்களாய்
மண்ணில் தெரிபவன் எல்லாம் தலைவர்களா?
அடிமைகளாய் அனுதினமும் அவதியுற்று
ஆண்ட மண் இருள் சூழ்ந்து காட்சியுற்ற
கொடுமைகளால் நொந்து தவிக்கும் போது
கொள்கைகளை அடவு வைத்து சலுகை பெற்று
கொடுங்கோலை நேசித்து வாழ்த்துப் பாடி
கொடுப்புச் சிரிப்புச் செய்பவன் தலைவர்களா?
இனமும் மொழியும் இல்லாமல் செய்ய
இனவாத இடுக்கண்பலர் முயலும் போது
இயன்றவரை தடுப்பதற்கு முயற்சி செய்து
துணிந்து எதிர்த்து எம் நிலம் காப்பதற்காய்
பணிந்து பாடுபடும் மக்களுடன்
இணைந்து செயல்படுபவன் தலைவர்களா?



# தமிழ் வருந்தோம்பல்

மஞ்சள் சோறும், மாசிச் சம்பலும்
கோழித்துண்டும், முட்டையையும்
பரப்பில் வைத்து பம்மாத்துக் காட்டி
பகிர்ந்து கொடுக்க வக்கில்லாத
வசூல் பேர்வளிகள்
வரும்படிக்காய் அழைப்புக் கொடுத்து
வருத்தும் உபசரிப்புக்குப் பெயர்
ஆங்கிலத்தில் செல் சேர்விஸ்
தமிழில் வருந்தோம்பல்



# உலகம்

உலகத்தை இறைவன் படைத்த தால்தான்
உயிரினம் எல்லாம் வாழ்கிறது
உயர்ந்தவன், தாழ்ந்தவன்,போட்டி, பொறாமை
மனிதரால் தேடிய மடத்தன செயல்கள்
விஞ்ஞானம், மெய்ஞ்ஞானமெல்லாமே
விந்தையால் சந்தையில் விற்பதால்
சனங்களின் அழிவுகள் சரளமாய் தெரியும்
ஆயுதம், வெடிபொருள், ஆராட்சி செய்கிறார்
மனிதன் மனிதனைக் கொல்வதற்கே,
மாகாத்தான செலவினில் குண்டுகள் செய்கிறார்
மாயன் கலண்டரும் நாஷா விஞ்ஞானமும்
உலக அழிவினைத் தீர்மானிப்பதில்லை
ஆக்கிய இறைவனே அழிவைத் தருவான்
அதுவரைக்கும் சுதந்திர மனிதராய் புண்ணியப் பூமியில்
சாதனை படைத்து சரித்திரத்தை நிலைநாட்டு
எம்மவர் பலர் எல்லா நாடுகளிலும் வாழ்ந்தாலும்
எங்களின் நிலம் விடியவும் இல்லை
இன்றைய தேவை உலகமயமாக்கலின் போக்குடன்
நாமும் அதற்கு இசைவாக முகம் கொடுத்து
நாகரீகமுள்ள நல்லதோர் இனமாக வாழ
அனைத்துலக மனச்சாட்சிகளையும் தட்டிவிடுவோம்
உலகம் விழிக்கட்டும் உண்மை வெல்லட்டும்


# இலங்கை நாடு

சுற்றிவரக் கடலால் சூழ்ந்த பழமை நாடு
சுத்தமான இனவாதம் சத்தமாகக் கேட்கும்
மகாவலி நதியும் மன்னர்களின் குளமும்
மகாவம்ஷக் கொள்கையும் கொண்ட நாடு
மனம்மாறா இனம் உண்டு
மரம், காடு, வயல், மலை, ஆறுவாவியுண்டு
அறம் சார்ந்த கேள்விக்கு அடியோடு மதிப்பில்லை
புத்தபெருமானாரின் புனித நற்போதனைகள்
பூமியிலே உள்ள போதும் புரியாது எவருக்கும் ஆனால்
எத்திசையும் அவர்உருவம் எக்கசக்கமாகத் தெரியும்
முத்திரையிலும் அவரின் முகம் தான் தெரியும்
நித்திரையிலும் அவர் படம் நின்றாடும்
தமிழர் நிலங்களிலும் தவம் இருப்பார் அவர்
இருமொழி தேசம் என்று இடைவிடாது கூறினாலும்
ஆட்சி மொழி அசல் சிங்களமே மேலோங்கும்
மூன்று மதத்தவரும் ஒற்றுமையாய் வாழ்ந்தபோதும்
சான்று இருந்து சரித்திரத்தை மாற்றுவதற்கு
சாமி என்ற பெயரில் ஆசாமிகள் வருவார்கள்
பள்ளிவாசல், சைவக் கோயில், தேவாலயம் எல்லாம்
கொள்ளிவைப்பதற்கு கொலைவெறியர் கூடுவர்
அள்ளி உடைத்தும் ஆக்கிரமிப்பும் செய்வர்
வரலாற்றை மாற்றி வசை பாடிடுவார்
வலியான இலங்கை நாடு எம்நாடு



# வடகிழக்குத் தாயகம்

சரித்திரக் குடிகளின் தமிழரின் பொன்நிலம்
பூர்வீக மக்களின் புண்ணியப் பூமி
சாவினைக் கண்டாலும் சண்டைகள் ஓய்ந்தாலும்
வாழ்வினைத் தொலைத்துமே வலிதான் நேர்ந்தாலும்
வளங்களை இழந்துமே கலங்கம் தான் தொடர்ந்தாலும்
கிலிவந்து சூழ்ந்து பலி கொண்டு சென்றாலும்
கதைவலி கேட்டு கண்ணீர்தான் சிந்தினாலும்
வதைபல பட்டு வாழ்வைத் தொலைத்தாலும்
வாழ்க்கைக்கான வளமிகு தேசமிது
வடகிழக் கென்பது எங்களின் தாயகம்



# மட்டக்களப்பு

உலகத்தில் எங்கேயாவது மீன்கள் பாடுவதைக்
கேட்டதுண்டா

எங்கள் நாட்டிற்கு வந்து பாருங்கள்
மீன்கள் பாடும் தேன்சுவை இனிக்கும்
தெவிட்டாத காட்சிகள் காலத்தால் அழியாது
கடற்கரை மணலில் கரை சேரும் நண்டுகள்
களனி நிலமெலாம் கமத்தொழில் அழகு
ஊடறுக்கும் வாவியிலே ஊர்மீனும் இறாலும்
ஊர் கடக்க படகுகளும், பாலங்களும், பாதைகளும்
படுவான்கரைப் பெருநிலத்தை பறை சாற்றும்
பாரம்பரியம்

எழுவான்கரை எங்கணுமே எழில் கொஞ்சும் ஏற்றம்
எல்லா ஊர் மக்களும் எவரையும் உபசரிக்கும்
எங்கள் மட்டுநகர் எப்போதும் எழுந்து நிற்கும்
சொந்தக் காலில் சோம்பலின்றிய உழைப்பும்
நொந்த வேளையிலும் நிமிர்ந்து நிற்கும் பண்பும்
எந்த வலி வந்த போதும் எதையும் தாங்கும் இதயம்
வந்தோரை வரவேற்று வயிறு நிமிர உணவளிக்கும்
வளம் நிறைந்த பொன்னாடு மட்டக்களப்பே
வடமோடி தென்மோடி நாட்டுக்கூத்தும்
வளமுடன் கல்வி தரும் கல்விக் கூடங்களும்
கலைகளை முன் எடுக்கும் கலாச்சார பண்புகளும்
பல்கலையை வளர்த்தெடுக்கும் பட்டதாரி
கல்லூரியும்
ஆன்மிகம் தழைக்கும் அழகான கோயில்கள்
நெற்கதிர் சிரித்திடும் நேர்த்தியான வயல்களும்
நேரிய தழிழையும் காணலாம் இங்கேதான்
பாரிய குளங்களும் பயிர்களின் செழிப்பும்
பாறைகள் பாதைகள் பாலங்கள் எல்லாம்
ஆடிடும் மயிலுடன் ஆனந்தப் பறவைகளும்
தேடிடும் செல்வமும் தெவிட்டாத உணவையும்
தேயாத அறிவையும் தேடலாம் வாரீர்
ஓயாத உழவரின் உன்னதக் கொள்கையும்
ஒற்றுமையாகவே உழைத்திடும் ஆட்சியும்
பட்டி மாட்டுப் பால் வளம் செழிப்பும்
முட்டித் தயிருடன் மூன்று வேளை சோறும்
முடியாதது என்று ஒன்றுமே இல்லாத
முத்தமிழ் இனத்தின் சரித்திர தாயகம்
முறையுடன் பறைசாற்றும் மட்டக்களப்பு எனும்
மானத் தமிழரின் தேனாடு இதுவே



# படுவான் கரை

படுவான்கரை பெருநிலத்தின் பண்புகளை எல்லாம்
பறைசாற்ற என்னால் மட்டும் முடியாது
முன்னோர்கள் வாழ்ந்து முறைப்படியாய் ஆட்சிசெய்து
முத்தமிழால் நிரவகித்த முதன்மையான தேசம்
எத்திசையும் இல்லை குறை ஏர்பிடித்த கைகளாலே
தேர் பிடித்து ஓடும் தெவிட்டாத தேன்நாடு
கிழக்கின் உதயத்தின் கீழ்வரும் ஒளிக்கதிர்கள்
மேற்கின் நெல்வயல்களை சிரிக்கவைக்கும்
மேட்டுநிலங்களும் சேனைப்பயிர்களும்
மாட்டுப் பட்டிகளும் மலை வளமும் உண்டு
காட்டு மரங்களும் கானமயில் ஆட்டங்களும்
கூட்டு குடும்ப வாழ்வையும் பார்க்கலாம்
பாலும் தயிரும் தேனும் பழங்களும்
பாரம்பரியமுடன் சமய சம்பவங்களை
வீரமுடன் விவேகமாய் வளிகாட்டும்
காரணமான கன்னித் தமிழ்நாடே
கூத்தும் பாட்டும் கும்மாளக் கலைகளும்
சேற்று நிலத்தில் இரண்டு போக செய்கையும்
போடிமார்களின் பொது அறிவு திறனையும்
பொது வேலையில் கொண்ட பற்றுதலையும்
எப்போதும் காணும் ஏற்றமிகு படுவான் கரையே

# அம்பிளாந்துறைப்பதி

ஆண்ட தமிழ் ஊர் அமிபிளாந்துறை இது
வேண்டுதல் செய்திடும் வெற்றியான பதி
பண்டைத்தமிழ் மரபும் பாரம்பரியமும்
பண்பாடும் தவறாத பழமையான தமிழ் சாதி
ஊர் சுற்றி மதில் அமைத்த தலைவர்கள்
உறுதியான கொள்கையுடன் இருந்தார்கள்
முன்னோர் செய்த பணி முறையாக தெரிந்திடுதே
கண்ணாக காத்து ஆட்சி புரிந்தார்கள்
மண்ணைப் பாதுகாத்து மக்களையும் காத்தார்கள்
ஒற்றுமை ஒழுக்கம் உறுதியான வாழ்வு
உழைப்புடன் ஓங்கிடும் நற்கல்வி அறிவும்
எப்போதும் உதவிடும் இரக்க மனப்பாங்கும்
எவரையும் வரவேற்கும் இதயங்களும்
இல்லாமை நீங்கி எழுச்சியுடன் வாழும்
இளைஞர்களின் நல்வழிகாட்டல்களும்
சைவமும் தமிழும், கலையுடன் விளையாட்டும்

வையக அறிவும் வளர்த்திடும் தூய ஊர்
வாவியும் வணங்கிடும் முத்துமாரித்தாயும்
வளநிறை காணியும் கமத்தொழில் செய்கையும்
போடிமார் கூட்டமும் பொலிவான நெல் பட்டறைகளும்
தோரணம் கட்டிடும் உன்ன கலைகளும்
தோல்வி இல்லாத இனமும்
தோண்டிய இடங்களில் நீர் நிறை கிணறுகள்
வேண்டிய இடங்களில் மாட்டுப் பண்ணைகள்
தாண்டிய தடைகளை களைந்திடும் வீரமும்
தன்னம்பிக்கை தளராத உழைப்புடன்
எண்ணம் ஈடேறும் எங்கள் ஊரிது
எழில் கொஞ்சும் அம்பிளாந்துறையூரே



# பெண்ணால் முடியும்

ஓ.......பெண்ணே
சமையலறையில் இருந்து வெளியே வா
சாதனை படைப்போம்
சோதனை, வேதனை மலிந்த நாட்டில்
போதனை கேட்டுப் புளித்துப் போன காதுகளுக்கும்
அவலங்கள் கண்டு மருத்துப்போன கண்களுக்கும்
அடக்குமுறை பூட்டால் அடைத்துவிட்ட வாய்களுக்கும்
சுதந்திரம் கொடுப்போம் துணிந்து வா
உலகத்தில் சமத்துவம் இல்லையென
உளருவதை நிறுத்து
பெண்ணால் முடியும், உன்னால் முடியும்
பதுமைப் பெண் என்பதை உடைத்துவிடு
புதுமைப் பெண் என்பதை செய்து காட்டு
புரிகிறதா பெண்ணே

-2006-



காதலர் தின சிறப்புக் கவிதை

# காதலிப்பவர் சிந்தனைக்கு

காதல் என்பது தண்ணீர் போன்றது
அருந்தவும் முடியும்,
நீந்தவும் முடியும்,
மூழ்கவும் முடியும்,
நனையவும் முடியும்,
அருந்தினால் தாகம் தீரும்
நீந்தினால் கரை சேரும்
மூழ்கினால் மூச்சுத் திணறும்
நனைந்தால் உடல் குளிரும்
தாகம் தீரும் காதல் சந்தர்பவாதக் காதல்
கரை சேரும் காதல் புனிதக் காதல்
மூழ்கும் காதல் மரணிக்கும் காதல்
நனையும் காதல் அற்பக் காதல்

சந்தர்ப்பவாதமா?
புனிதமா?
மரணமா?
அற்பமா?
இது காதலிப்பவர் சிந்தனைக்கு

14.02.2008 சூரியன் FM



# சீதனம் கேட்கும் தமிழனுக்கு.....

சீதனம் கேட்டிடும் தமிழா
சிந்தித்துப் பாரடா
ஆதனம் இங்கே பறிபோகுதே
அதை நீ பார்த்தாயடா
சிங்கத்து வால்கள்
செந்தமிழ் மண்ணைப் பறிக்கிறான்
சீதனம் கேட்டு நீயோ
செந்தமிழ்ப் பெண்ணின்
வாழ்வைக் கெடுக்கிறாய்
மாடி மனையும், தங்க நகையும், காசும்
தந்தால் திருமணம்
மறுத்தால் வேண்டாம்
மணமகள் என்று அடம்பிடிக்கிறாய்
கொத்துக் குண்டால் அழிந்த வீட்டை
குனிந்து பாரடா
குருதி சிந்தும் அகதிமுகாமை
அயலில் பாரடா
ஆட்லறி அடியால் அழிந்த சொத்துக்கள்
ஆயிரம் ஆயிரமே
ஆண்ட தமிழனின் ஆதனம் எல்லா
அழிந்து போனதடா
அன்புத் தமிழா
சீதனம் வாங்கி திருமணம் செய்யாதே
உன்னால் முடியுமென பெண்ணை வாழ வையடா
விமானக் குண்டால்
விழுந்த சீதனம் விளிக்கவில்லையா?



# கனாவிக் காதல்


தேரோட்டவேளை வெளிவீதி வந்தேன்
சன நெருஷலுக்குள்ளே சலிக்காமல் பார்த்தாள்
சட்டென்று பின்தொடர்ந்தேன் தனியாக நின்றாள்
சங்கதியைக் கேட்டேன் தலையாட்டி சம்மதித்தாள்
காதலிதான் இவள் என்று அப்போது உணர்ந்தேன்
கனவருடம் கட்டாருக்குப் போன நான்
கண்மணி இவளை உண்மையிலே மறந்துவிட்டேன்
கடவுளே இது என்ன கொடுமையப்பா
கையை கண்ணில் வைத்து விம்மி விம்மி அழுதாள்
மெதுவாக சொல் ஏன் அழுகிறாய் என்றேன்
வெளிநாடு போறதுக்கு விற்றுத் தந்த மாலை
தொலைந்து நாஷமானாலும் பறவாயில்லை
தொலைபேசியில் கூட கதைக்க ஏன் மனம்
வரவில்லை
தொடர்பை ஏன் துண்டித்தாய் என்றாள்
மெய் சிலிர்த்தது, மேனி வியர்த்தது, கை நடுங்கியது

உறைப்பாய் அவள்கேட்ட கேள்வியாலே
விறைப்பாய் போனது எனது மனம்
பொறுப்பாய் கொஞ்சம் கதையைக் கேள்
கட்டாருக்குப் போய் கடையில வேலை செய்யக்குள
கணனி ஒன்றைத் தட்டிப் பார்த்தேன்
கனடா பெண் என்னை மசக்கிவிட்டாள்
அதனால் அவளைத் தெய்வமென்றேன்
அடியோடு உனை மறந்துவிட்டேன்
அன்பே என்னை மன்னிப்பாய் என்றேன்
சடார் என்று என் சொத்தையில்
செருப்பால் நாலு சாத்துப் போட்டாள்
சத்தம் கேட்டு ஆக்களெல்லாம் சகமாரியாய்
கூடினார்கள்
சங்கதி அனைத்தையும் அவளே சொல்வாள்
என்கதி வெட்கத்தால் சிலிர்த்தன
களைத்து ஊர்ந்து ஊர்போனேன்
கனடா காதலிக்குப் போண் செய்தேன்
கலியாணம் எமக்கு எப்போ என்றேன்
பொழுது போக்குக்கு காதலித்தேன் நான் உன்னை
போயும்போயும் உன்னையா முடிப்பேன்
போனை வையடா போக்கிரி என்றாள்
இன்ரநெட் இருக்கும் வரை எத்தனை பேரையும்
காதலிப்போம்
இனியும் என்னை நம்பாதே குட்நைட் என்று
அவளின் தொலைபேசியை நிறுத்தியது
கனடா காதல் கைமாறிப் போனது
கண்மணியின் காதல் செருப்பால் பதில் சொன்னது
கணனிக் காதல் அப்போது புரிந்தது.

# எப்போது நீ திருந்துவாய்



அன்று காகிதத்தால் காதல் மடல் வரைந்து
தபாலில் அனுப்பிவிட்டு தவம் இருப்பார்
என்ன பதில் வரும் என்ற ஏக்கம் தயக்கம்
அன்பே ஆருயிரே அழகே அமுதே
உயிரே உறவே உளமான தெய்வமே
என்று பல வரிகளைக் கவிதையாக்கி
கடிதத்தால் காதல் செய்த காலம்
இன்று தொலைபேசி கணனியுடன்
இன்ரநெற் வசதியுடன் எக்கச்சக்க காதல்
நின்று நிலைக்காத நேர்மையற்ற காதல்
கண்டவர் கதைத்தவர் கடையில் நிற்பவர்
கல்லூரிகளில் கல்வியை தொலைத்தவர்
காதல் என்ற பெயரில் கண்ணீர் வடிக்கிறார்
எஸ்.எம்.எஸ் சிலும் சிம்மாத்தி தகவல் சொல்லி
வஸ் மாறிப் போகும் பிரயாணங்கள் போல்
வழி தவறி காதலித்து கவலை காண்பார்
வார்களிலும் வீச்சுகளிலும் முசுபாத்தி பண்ணி
வழிசல்களாய் அலைவதை யார் திருத்துவார்
வாலிபத்தைத் தொலைத்தவராய் வசதியின்றி
சீவியத்தை நடத்த முடியாத சீவன்களாய்
முசுப்பாத்தி யென்று மூன்றெழுத்தை உச்சரித்து
முன்னேற வழியின்றி மூதேவி முகங்களுடன்
தற்கொலைகளுக்கும் தகாத நடத்தைக்கும் ஆளாகி
தற்புகழைத் தொலைத்துஅலைகிறான்
தமிழ் உறவே எப்போது நீ திருந்துவாய்



# உள்ளார்ந்த காதல்

காதல் வளர்த்துகண்டதுதான் என்ன
கத்தரி செடி வளர்த்தாலும் பலன் உண்டு
தூய்மையான காதலில் தான்
துளிர் விட்டுப் பிரகாசிக்கும்
பொழுபோக்கு காதல் எல்லாம்
அழுதுவிட்டு ஆசை போகும்
போக்கிரிகள் காதலெல்லாம்
போணில் சிம் மாற்றுவது போல்
கானல் நீராய் மாறிவிடும்
கண்டவுடன் காதலிக்க காதல் என்ன
கடை வடையா காட்டுத் தீயா
உணர்ந்துவிடு உண்மையிதை
உள்ளார்ந்த காதலுக்கு அழிவில்லை




# எப்போதும் உண்மை

இலங்கை மகள் ஈன்றெடுத்த
எம்மினத்தின் உடன்பிறப்பு
இயந்திரம் போல் வேலை செய்யும்
எழுர்ச்சியினை மறவோம்
இவளாலே செல்வங்கள்
எம்நாட்டில் குவியும்
இன்றல்ல நேற்றல்ல
எப்போதும் உண்மை

தினமுரசு - 09.04.1995.

# யார் கதிரை



நாடாளுமன்றத்தின்
நாற்காலியுமில்லை
பன்சாலைக்குருவின் ஆசனமும்
அல்ல,
இது . . .
செல்விழுந்த வீட்டிற்குள்
திருடிய கதிரை
சென்றிப் பொயிண்டில்
சேர் இருக்கும் கதிரை!

தினமுரசு - 28.04.1995.

# ஆண்டவனே பாரப்பா!

பங்கருக்குள் வாழ்ந்தாலும்
வாசலில் வீழ்ந்த செல்த்துண்டு
அக்காவின் தலையை
பதம்பார்த்து விட்டதே
ஐயோ நான் என்செய்வேன்
ஆண்டவனே பாரப்பா

தினமுரசு - 11.06.1995.



# இது எங்களின் சீவியம்

சண்டைக்குப் பயந்து
ஊர் விட்டு ஓடுவதும்
வேட்டுக்குப் பயந்து
காட்டுக்குள் ஒளிப்பதும்
குண்டுக்குப் பயந்து
குன்றுக்குள் வாழ்வதும்
எங்களின் சீவியம்

தினமுரசு - 27.10.1995.



# திசைமாறிப் போகின்றாள்

கொலன்னாவை எண்ணெய்க்கு - தம்
குண்டு பட்டு வெந்ததனால்
கண்டு கொண்ட இலங்கை மகள்
கலங்கி உருமாறி
தீம்பிளம்புச் சுவாலையுடன்
திசைமாறிப் போகின்றாள்

தினமுரசு - 12.11.1995.

# சமத்துவமாக வாழ்ந்திடுவோம்

அல்லும் பகலும் நாம் படிப்போம்
அறிவு நலத்தை நாம் பெறுவோம்
கல்வி ஒளியை நாம் பெறுவோம்
கடவுளை வணங்கி வாழ்ந்திடுவோம்

பாடசாலை சென்றிடுவோம்
பாடம் கற்றுவென்றிடுவோம்
குருவைத் தெய்வம் எனமதிப்போம்
குணத்தால் நாமே உயர்ந்திடுவோம்

ஒழுக்கம் எமது உயிர் என்போம்
உண்மை, நேர்மை கண்என்போம்



சாதிபேதம் அகற்றிடுவோம்
சமத்துவமாக வாழ்நிடுவோம்

தினமுரசு - 07.05.1995.



## வழி காட்டல் பாதை

முதுமையின் வழிகாட்டல் அகிம்சை
இளமையின் வழிகாட்டல் ஆயுதம்
அகிம்சை ஆட்டம் கண்டதால்
ஆயுதம் ஆட்சி புரிகின்றது
இது இன்றைய வழிகாட்டல் பாதை

தினமுரசு - 03.11.1995.

## செல்வந்த நாடே

அன்று . . .
பாலும் பழமும் பசுமைச்சோலையும்
பசிதீர்க்கும் கைக்குத்துச் சோறும்
தேனும் தயிரும் தீன்தமிழ் ஓசையும்
தெவிட்டாத முக்கனியும்
சேனைப்பயிரும் செந்நெல் வயலும்
சேர்ந்தே வளந்தரும் வாவியும்
மாடும் மனையும் மகிழ்விக்கும் கோயிலும்
மாசற்ற கல்வியல் கூடமும்

கூடிக்குலாவும் கோடிப் பறவையும்
கொஞ்சு தமிழ் குலமும்
ஏரும் தேரும் ஓடும் ஊரும்
ஏக்கமிலா உழவர்தானும்
தென்றல் வீசும் தெள்ளாத காட்சியும்
தென்னையும் தேக்குச் சோலையும்
வண்டுகள் பாட வண்ணமலர் நிறங்காட்டும்
வழமான கதிரவன் வருகையும்
ஒழுக்கமும், ஒற்றுமையும், உண்மையும்
உறுதியாய் உயர்வு காட்டி
வந்தாரை வரவேற்று வாழவைக்கும்
வறுமையில்லாப் படுவான்கரையில்
செல்வம் செல்வம் செல்வம் என
சேர்ந்தே வளம் குவிந்ததனால்
செல்வந்த நாடு ஆனது இன்று . . . ?
எங்கோ இருந்து எமது பூமியில்
வானத்தின் மீது விமானக் குண்டுகளும்
ஆங்காங்கே விழுந்திடும் 'ஆட்லறி' வெடிகளும்
பீதியைத் தந்திடும் பீரங்கிச் சத்தமும்
தூரத்தில் இருந்து துப்பாக்கி ரவைகளும்
துட்டர்கள் ஏவும் செல்க்குண்டுகளும்
தினம் தினம் எங்கள் மண்ணில்
திடீரென வந்து விழுவதால்
செங்குருதி எங்கள் நிலத்தில்
சேறாக உறைகின்றது
"சீதேவிப் படுவான்கரை" சீரழிந்து போகிறது
'செல்' குண்டு வருவதனால்
'செல்' வந்த நாடாகின்றது
அன்று 'செல்வம்' வந்ததனால் . . .
என்றும் "செல்வந்தநாடே" . . .

விடிவானம் - 15. 12. 1995.

# அங்கராணி



அரைகுறை ஆடைகட்டி
அடிவயிறு வெளியில் காட்டி
ஆங்காங்கே சாயம் தீட்டி
ஆலாத்தி நடைநடந்து
அங்கங்கள் காட்டி நின்றால்
அதற்குப் பெயர் ‘அழகுராணி’

தினரசு பரிசு பெற்ற கவிதை 29.12.1996



# காடு நோக்கி

ஒழிப்பதற்கும் இடமில்லை
ஒதுக்க இங்கு வழியில்லை
கண்டபடி சுடுகிறார்கள்
காடுதேடி ஓடுகிறோம்

- தினமுரசு - 16.03.1997



# சண்டைப்புறா

அன்று சமாதானப்புறா
இன்று சண்டைப்புறா
இது
அமெரிக்கா செல்கிறது
ஆயுதம் வாங்க!

- தினமுரசு - 25.01.1998



# இன்றைய தேவாரம்

என் செய்வேன்
ஏழையானேன்
இருக்க இடமில்லா அகதியானேன்
மனமிருந்தும், பணமில்லா
நடைப்பிணமானேன்
பார்வைக்கு நான் ஒரு
மனிதனானேன்

- ஈஸ்டன் டைம்ஸ் - 20.10.1977



# படுகொலை நாட்டிலே

பனைமரத்தின் வேலிக்குள்ளே
பழய தோட்டக் காணியை
பண்படுத்தும் பாவிகாள்
பள்ளம் என்று கிண்டாதீர்
பதுங்கியிருக்கும் குண்டுகள்
'படார்' என வெடித்திடும்
படுகொலை நாடிது!

தினமுரசு - 14.12.1997




# இன்றைய பாப்பாவுக்கு

கூடி விளையாடாதே பாப்பா !
குண்டு வெடிவிழுந்துவிடும் பாப்பா !
ஓடி ஒளித்துவிடு பாப்பா !
வெடி ஓசை வரும்முன்னே பாப்பா !
மண்தோண்டக்கூடாது பாப்பா !
மறைந்து செல் வெடித்துவிடும் பாப்பா !
பொல்லாத தேசமடி பாப்பா !
புறங்காட்டிப் படுத்துவிடு பாப்பா !

தினமுரசு - 02. 02. 1998

# சில்லறைக்காசுக்கு எலும்புக் கூடுகள்




எலும்புக்கூடுகளை
ஏற்றுமதி செய்ய
ஏற்றவர் இருந்தால்
இங்கே வாருங்கள்
சில்லறை விலைக்கே
தந்துதவுவோம்
வெலிக்கடைச்சிறையில்
வெட்டிச் சரித்த
குட்டி மணிமுதல்
களுத்துறைச் சிறையில்
கழுத்தறுபட்ட நம்மவர்களின்

நல்ல எலும்புகளும்
பள்ளிப் பிள்ளைகள்
பருவப் பெண்கள்
இனந்தெரியா நபர்கள் என்று
வகைவகையான எலும்புக்கூடுகளும்

சூரியகந்த, எலப்பிட்டி
சத்துருக்கொண்டான்
கொக்கட்டிச் சோலை
செம்மணி வயலென
நீளும் தீவின் பல பாகத்தும்
புதைகுழிகளில்
பதப்படுத்திய
பக்குவமான மனித எலும்புகள்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கொள்வனவு செய்ய
ஓடோடி வாருங்கள்
முந்தி வாங்குவோருக்கு
விலைக்கழிவுண்டு
தொடர்புகொள்ள
வேண்டிய முகவரி
சமாதனப்புறா வாசஸ்தலம்
தீர்வுப்பொதி வீதி
கொழும்பு.

- தினக்கதிர் - 26. 04. 1998



# அவலச் செய்தி

சரித்திரம் அழிந்த செய்தி
தமிழரின் அவலச்செய்தி
விரித்ததோர் ஊடகத்தின்
வீழ்ச்சியைத் தந்த செய்தி
விடியலின் ஏக்கமெல்லாம்
விபரீதம் தந்த செய்தி
உலகத்தார் சதிவலையில்
உண்மைகள் மறைந்த செய்தி
உரிமைப்போர் அறுந்த செய்தி
உள்ளங்கள் கொதித்த செய்தி
ஊர்மக்கள் உடமையெல்லாம்
ஊனமாய்ப்போன செய்தி
குருதியாய் உறைந்த செய்தி
குழந்தைகள் குடும்பமெல்லாம்
குழிகளில் குவியலாய்க் கிடந்த செய்தி
அகிலமும் கண்டும் காணாத செய்தி
ஐ.நா.வும் ஏனோதானோ என்ற செய்தி
கொடுமைகள் நடந்த செய்தி
குண்டுகள் மழை பொழிந்து
அடிமைகள் அழிந்த அவலச் செய்தி

- தினக்குரல் - 14.06.2009

# சுடுகாடும் எமக்கில்லை

அழுவதற்குக் கண்ணீ ரில்லை
அணைப்பதற்கு யாரு மில்லை !
எழுவதற்குத் தெம்பு இல்லை
எண்ணத்தில் உயிர்ப்பு இல்லை !

குண்டுகளால் குருதி தோய்ந்து
கொலைக்களம் ஆன பூமி !
மாண்டயெம் உறவை ஈண்டு
மண்மூடிப் போனதுகாண் !


கண்ணினைப் பறிக்கும் ஏவு
கணையொடு குண்டு வீச்சு !
விண்ணைக்கிழித்துச் சீறி
விளைவித்த அனர்த்தம் நூறு !

அங்கங்கள் இழந்தோர் அந்தோ
ஆவியைத் துறந்தோர் எஞ்சி
இங்கெங்கும் பிழைத்தோ ரின்று
எதிலியாய் உழலுகின்றார் !

சொந்தங்கள் இழந்து வாட்டும்
சோகத்தால் துவளும் நாங்கள்
சுதந்திரம் கேட்டதற்காய்
சுடுகாடும் எமக்கில்லை!

- சுடர் ஒளி - 14.06.2009

படுவான்கரை மக்கள் 2007
இடம் பெயர்ந்தபோது எழுதிய கவிதை




# நாமிருக்கப் பயம் ஏன்?

வந்தோரை வரவேற்று
வாய்க்கு ருசியாய் உபசரித்து
வயிறு நிறைய உணவளித்து
வாழையடி வாழையாக வாழ்ந்த
வளம் நிறை படுவான்கரை மக்கள்
இன்று . . .
வந்தேறு குடிகள் போன்று
வயிற்றுக்கும் ஒருபிடி உணவுகேட்டு
வதை முகாம்களில்
அனாதரவாய்
அகதிகளாய் வாழ்கின்றனர்
அட கடவுளே . . .
ஏர்பிடித்த கைகளெல்லாம்
இரவல் கொட்டகைக்குள்
இருண்டு போனது ஏனோ
தேரோட்டக் கடவுள்தானும்
தேற்றலில்லையே எங்களையே
தார்ரோட்டில் தத்தளிக்கும் தமிழர்களை
தாந்தாமலையானும் பார்க்கலையே
நாதியற்று ஓடியோடி
நடுத்தெருவில் அலைகின்றோம்

நாகதம்பிரான்தானும்
நன்மை செய்யலையே
போரைதீவுக் காளித்தாயும்
போகாமல் தடுக்கலையே
வேப்பிலையைக் கையேந்தி
வேதனைகள் பல தீர்க்கும்
முத்துமாரிக் கண்ணகைத்தாய்
அத்தனையும் அயர்ந்தா போனாள்
மயிலேறி போர்புரிந்த வேலன் கூட
மக்களுக்குத் துணைபுரிய வரவேயில்லை
பிள்ளையார் கோயிலெல்லாம்
பிள்ளைகளை அணைக்கவில்லை
பிட்டுக்கு மண்சுமந்த பெருமானும்
வேட்டுக்குப் பயந்து வெளியேறிவிட்டாரோ
படுவான் கரைப்பகுதித் தெய்வமெல்லாம்
பரிதவித்த மக்களுக்கு உதவவில்லை
வேதனை தமிழருக்கு
வெந்த புண்ணிலி வேல் பாய்ச்சுவது போல
நொந்த எம் உறவுகள்
நோகி நோகி அழுகின்றோம்
கந்தல் துணியுடன்தான்
கடற்கரையில் காய்கின்றோம்
அகதிகளாம் எமக்குப் பெயர்
அதிகாரிகின் இழில் சொல்ல வேறு
அரசின் பொய் ஏராளம்
அரவணைக்க யாருமின்றி
அக்கரையில் இன்னும்தான்
எத்தனை நாள் தவிப்பது
எவ்வளவோ துன்பத்தைக் கண்டுவிட்டோம்
இப்படியொரு இடம்பெயர்வு

இதுதான் முதல் தடவை
இயமனாய் எறிகணைகள்
எம்மண்ணில் வீழ்ந்ததனால்
இல்லறமும், ஊரும், நாடும்விட்டு
இயற்கை வாவிதனைக் கடந்து
எழுவான் கரையில் போய் இரவல் கூடாரத்தில்
ஏங்குகின்றோம்
உடமைகளை இழந்து உயிர்களை இழந்து
ஊர்விட்டு வெளியேறி
உறவுகளைப் பிரிந்தாலும்
உணர்வுடந்தான் இருக்கின்றோம்
உள்ளந்தான் கொதிக்கிறதே
மரந்தாவி விழுந்தவனை
மாடேறி மிதித்தது போல
மட்டக்களப்பினிலே வாடுகிறோம்
இறைவா நீயுமா
இடம் பெயர்ந்து அகதியானாய்
எந்த முகாமில் இருக்கின்றாய் ஐயா
இந்தியாவின் மண்டபம் முகாமிலா
இல்லை இலங்கையின் பன்சாலையிலா
எங்களுக்குத் தெரியவில்லை
சித்திரைப் புத்தாண்டும்
சித்திரவதைதான் எமக்கு
கொஞ்சம் பொறு கடவுளே
மீள்குடியேற்றம் நடக்கப்போகுதாமே
மீண்டும் நீயும் வந்து குடியேறு
அகதிக்குத் தந்த அரிசி, சீனி, கடலை இருக்கிறது
அப்பம் மோதகம் அனைத்தும் படைத்து
பொங்கலும் வைத்துப் பூசை செய்வோம்
நாமிருக்கப் பயமேன்.

- வீரகேசரி - 27.04.2007



# சமத்துவம்

வாகரை வயிரமுத்து வீட்டின் கதவும் ஜன்னல்களும்
வறக்காப் பொலயில
வண்டாவின் வீட்டில் திறக்கிறது
கன்னன்குடா கந்தப்போடியின் வீட்டு
பொங்கல் பானையும் குத்துவிளக்கும்
களுத்துறையில் காமினி வீட்டுக்குள் மின்னுகின்றன
கட்டைப்பறிச்சானில் கந்தசாமியின் வீட்டு
சீ. டி. எம். ஏ தொலைபேசி
கடுகஸ்தோட்டையில்
கருணதிலகாவின் வீட்டில் பேசுகின்றது
சம்பூரில் சதாசிவம் வீட்டுத் தொலைக்காட்சி
சமணபுரவில்
சமிந்தவாசின் வீட்டில் பார்க்கிறது
திக்கோடையில்
திருச்செல்வம் ஓடிய மோட்டர் சைக்கிள்
திகம்புவயில் தீலகரெட்ணா ஓடுகிறான்
கொக்கட்டிச்சோலை குமரகுரு வீட்டுத் தளவாடம்

குளியாப்பிட்டியில்
கொடித்துவக்கு வீட்டுக்குள் இருக்கின்றது
பழுகாமத்து பாலிப்போடியின் தோணியும், வலையும்
பகிலவத்தையில் பனகவண்டார மீன் பிடிக்கின்றான்
அம்பிளாந்துறை அழகுராசாவின் வீட்டு அலுமாரி
அநுராதபுரத்தில்
அத்துக்கொறளையின் வீட்டில் இருக்கின்றது
படுவான்கரையின்
பசுமை நிலத்தில் மேய்த்த மாடுகளும், கன்றுகளும்
பாமன் கடையில் வீதிஓரத்தில் ஏங்குகின்றன
இது தமிழரின் இடம்பெயர்வால்
சொத்துகளுக்குக் கிடைத்த சமத்துவம்

- சுடரொளி - 15.04.2007



# இறுதிச் சமாதானம்

சமாதானத்திற்கான போர்
சண்டியர்களின் வாக்கியம்

மண்டை ஓடுகளும்
மனித எலும்புகளும்

மௌனப்புதை குழிகளும்
அடக்குமுறையாளர்களின்
அறுவடையாகியது

வெள்ளைக் கொடிக்கும்
வெண்புறாவுக்கும்

அர்த்தம் புரியா

அநியாய தேசத்தில்

அகிலத்தின் தீர்ப்புத்தான்

இறுதிச் சமாதானமாகும்.



# ஒளியைத்தேடி

ஒளியைத் தேடி விழியைத்திறந்தேன்
உணர்வுகள் என்னைத் தட்டியது
உரிமைகள் இன்றி வாழும் மக்கள்
உடமைகள் இன்றி ஏங்கும் சந்ததி
உணர்வுகளின்றி உளரும் கூட்டம்
உள்ளநாளெல்லாம் இதனைத்தான் கண்டேன்
ஒளியைத் தேடி விழியைத்திறந்தேன்
ஊரெல்லாம் ஓநாய்கள் ஊழைச்சத்தம்
உறவுகளெல்லாம் அவலவாழ்வு
உழவர்கள் வயல்களில் களைகள்
உண்மைகள் மண்ணில் உறக்கம்
உலகம் கண்களைத் திறக்கவில்லை
ஒளியைத் தேடி விழியைத்திறந்தேன்

கல்வியிலும் இன்று கதவடைப்பு
கல்லூரிகளிலும் பல மோசடிகள்
பரீட்சைகளிலும் செல்வாக்கு
பட்டம் பெறுவதிலும் தடைகள்
திட்டம் இல்லாத சீரழிவு வாழ்வு
ஒளியைத் தேடி விழியைத்திறந்தேன்
தலைவர்களை இன்னும் காணவில்லை
தலைவிதியை இன்னும் மாற்ற முடியவில்லை
தட்டிக் கேட்கச் சென்றாலும்
எட்டி உதைக்கும் காலம்
ஒளியைத் தேடி விழியைத்திறந்தேன்
வழியை இன்னும் காணவில்லை
மொழி இருந்தும் ஊமை
வலிகள் மட்டும் குறையவில்லை
வதைகள் இன்னும் போகவில்லை
கதைகள் மட்டும் தொடர்கின்றது
ஒளியைத் தேடி விழியைத்திறந்தேன்



# சுனாமி

பலருக்குத் துன்பச் சுனாமி
சிலருக்கு இன்பச் சுனாமி
இன்னும் சிலருக்குத் தங்கச் சுனாமி - ஆம்
ஆழிப்பேரலை அனர்த்தம்
அழிந்தது நம் தேசம்
கூடிப் பழகிய உறவுகளும்
உலாவித்திரிந்த குடும்பங்கள்
ஓடிவிளையாடிய சிறார்கள்
பச்சிளம் பாலகர்கள்
பாட்டன், பாட்டி என்றும்
காவிச் சென்ற கடல் அனர்த்தம்
காலத்தால் மாறாது
அகதிகளாய், அநாதரவாய்
அல்லலுற்று அவதியுற்று
வீடிழந்து சொத்திழந்து
நாவிழந்து நாடியிழந்து
நடு வெயில் கொட்டகை
நீட்டி நிமிர்ந்து படுக்க முடியுமா

நிமிர்ந்து நின்றால் தலையில் முட்டும்
நிம்மதியற்ற வாழ்க்கை
அகதிமுகாம் என்று
அழகான பெயர்ப்பலகை
அவலம் பலருக்கும் தெரிவதில்லை
ஆனால் நிவாரணம் என்ற பெயரில்
அநியாயம் நடக்கின்றது
கொடுப்பது சில பொருட்கள்
கொள்ளையடிப்பவர்கள் ஏராளம்
கொடுமையை யாரிடம் சொல்வது
கோழி இறைச்சிப் பொதிகள்
கொழுப்பகற்றிய எண்ணெய்க்கலன்
கோதுமை, சீனி, பருப்பு
உருளைக்கிழங்கு மூடை, உடுதுணியும்
உருக்குலையாத பால்மா ரின்மீனும்
உலர் உணவுப் பொருளென்று
ஊருக்குள்ளே பதுக்கி எடுத்தவர் யார்
பாவம் சனங்களுக்கு வந்த
பலநாட்டுச் சாமான்கள்
கடல் தண்ணீர் கண்ணாலும் காணாத
கந்தோர்காரர்களின் வீடுகளிலும்
சுனாமித் தாக்கம் சும்மாவும் வராத
ஆமிக்கேம்பின் அயல் ஊர்களில்
அனர்த்தம் என்ற போர்வையில்
அனியாயம் நடக்கிறது
ஏபிசீடி இருபத்தாறு எழுத்தில்
ஏராளம் நிறுவனங்கள்
எங்கள் ஊரில் எக்கச்சக்கம்
கொடிபறக்கும் குளுகுளு வாகனம்

கோடிப்பணத்துடன் வீண்டிக்கும் விபரீதம்
முத்திரைக்காசிலும் முறைகேடு
மூன்று மாதம் கழிந்தும்
நூறு, இருநூறு மீற்றர்களும் மறையவில்லை
வீட்டுத்திட்டம் என்று
விதம் விதமான கதைகள்
பள்ளிக்கூடம் கட்ட
பாரின் இருந்து நிபுணர்களாம்
நாலுமாதம் கடந்தும்
நாளாந்தம் சேதிமட்டும்
புலிகளுடன் பேச்சு
பொதுக்கட்டமைப்பு ரெடி
சர்வதேச அழுத்தம்
சமாதானம் வந்துவிடும்
இப்படியே கதைகள்
இன்னும் தொடர்கிறது
இலங்கைத் தீவினிலே இனவாதம் தடுக்கிறது
இதனால் தமிழர் பலம்
இன்னும் உறைக்கிறது.


துண்டுப்பிரசுரம் 15.04.2006

# ஊர் வாகை மரம்




அந்த வாகை மரம் ஆதி மரம்
அம்பிளாந்துறையூரின் அழகு மரம்
அனுமக்குட்டிப் போடியார் ஆட்சி தொடக்கம்
அரியநேந்திரனின் அரசியல் பணிவரை
அவதானித்த நேர்த்தியான மரம்
ஊரவரின் மரணச் சடங்குகளுக்கெல்லாம்
உடைகள் மாற்றிடும் நிழல் மரம்
அறம் தொடக்க ஆயுதப் போர்வரை
ஊக்கமுடன் நோக்கிய உறுதிமரம்
உண்மைச் சமாதானம் வருமென
ஏக்கத்துடன் எதிர்பார்த்து ஏமாந்த மரம்
சோதனை வேதனை சாதனைகளுக்கும்
நேரடியாக முகம் கொடுத்த மரம்
சூறாவளி, துப்பாக்கிக்குண்டு, எறிகணைவீச்சும்
சுழல்காற்று மின்னல் அடைமழைக்கும்
சோகம் போகாத வீரமரம்
தளராத பற்றுதி கொண்ட மரம்
தன்மான உழவர்களுக்கு ஊக்கம் தந்த மரம்
சரித்திரத்தைப் பறைசாற்றும் பழைமை மரம்
முந்நூறு ஆண்டுகளுக்கு மேல்வாழும் மரம்
கண்ணூறு படாமல் காப்பது எம்கடமை
இது ஊர் வாகை மரம்

# எனக்கும் பெருமை




வாடியிலே போடியாரின் வார்தையிலே பண்பிருக்கும்
வாவியிலே பிடித்த மீனில் வாயார சுவையிருக்கும்
வட்டைக்குள்ளே விளைந்த நெல்லுச்சோற்றிலே
சத்திருக்கும்
வெட்டையிலே வீசும் காற்றில் வேக்காடு தணிந்திருக்கும்
பட்டப்பகலிலும் பால்தயிர் மலிந்திருக்கும்
நட்டநடுச் சாமத்திலும் நாய்கூட வாலாட்டும்
நாட்டுக்கோழிச் சமையலிலும் நாவிலே ருசியிருக்கும்
நல்ல தேனுடனே நாளாந்தம் இனிப்பிருக்கும்
தோட்டத்து மரக்கறியும் சோகம் இன்றி அங்கிருக்கும்
அள்ள அள்ளக் குறையாத அருமையான தண்ணீர் வரும்
ஆனந்தக் கூத்துக்கலை அங்கேதான் கண்டிடவாம்
அன்பு கொண்ட மக்களின் ஆதரவு அங்கிருக்கும்
அறிவார்ந்த சமூகத்தின் ஆற்றல் நிறைந்திருக்கும்
நெறிமுறை தவறாத நேரிய தமிழ் இருக்கும்
முறையாக வழிபடவே முழுமுதல் கடவுள் உண்டு
அசைக்க முடியாத ஆன்மீகப் பலமிருக்கும்
எதற்கும் தயார்ரென இளையவர்கள் வளம் இருக்கும்
எத்திசையும் உழைப்பவர்கள் எப்போதும் இங்குண்டு
ஏரோடும் பெருநிலத்தில் தேரோடும் சாமி உண்டு
ஏற்றமுடன் விருந்தோம்பல் இப்பொழுதும் அங்குண்டு
எழுர்ச்சிகொண்ட மக்களின் மகிழ்ச்சி இங்கு பாரு
எப்போதும் படுவான்கரை வளம் நிறைந்த பூமி
இங்கு பிறந்தது எனக்கும் பெருமை எனக் கூறு



# இன்றைய சமாதானம்


ஆச்சியோட வீச்சுக்குப் போனால்
அதற்குப் பெயர் சமாதானம்
கோச்சில ஏறி கொழும்புக்குப் போனால்
அதற்குப் பெயர் சமாதானம்
பகலில பாசிக்குடாவில குளிச்சா
அதற்குப் பெயர் சமாதானம்
இரவில நாய்கள் ஊளையிட்டாலும்
அதற்குப் பெயர் சமாதானம்
வடகிழக்கிலே வார்கள்(Bar) அதிகமாம்
அதற்குப் பெயர் சமாதானம்
வதைபட்ட இனத்துக்கு வலியேதுமில்லை
அதற்குப் பெயர் சமாதானம்
கட்சியைவிட்டு கட்சி மாறினால்
அதற்குப் பெயர் சமாதானம்
காட்டிக் கொடுத்தவன் தேர்தல் கேட்டா
அதற்குப் பெயர் சமாதானம்
களியாட்டம் வச்சுக் கும்மாளம் போட்டா
அதற்குப் பெயர் சமாதானம்
காணாத முகத்துடன் போனில் கதைச்சா
அதற்குப் பெயர் சமாதானம்

கலாச்சார சீர்கேடு நடக்குதே
அதற்குப் பெயர் சமாதானம்
காவிச்சாமிகள் கோவில் அமைச்சா
அதற்குப் பெயர் சமாதானம்
காக்கி உடைகள் சோதனை செய்தால்
அதற்குப் பெயர் சமாதானம்
மண்ணைத்தோண்டினால் மண்டையோடுகள்
அதற்குப் பெயர் சமாதானம்
மாற்றான் வந்து மண்ணைப் பறித்தால்
அதற்குப் பெயர் சமாதானம்
சிறைகளில் கைதிகள் விடுதலை இல்லை
அதற்குப் பெயர் சமாதானம்
சித்திரைவதைகள் இன்னும் தொடருதே
அதற்குப் பெயர் சமாதானம்
பாலமும் குளமும் பாதைகள் திறந்தால்
அதற்குப் பெயர் சமாதானம்
பாவிகள் உடல்கள் பற்றி எரியுதே
அதற்குப் பெயர் சமாதானம்
கொடுமைகள் இன்னும் குறையவே இல்லையே
அதற்குப் பெயர் சமாதானம்
அடிமைகளுக்கோ முடிவொன்றுமில்லை
அதற்குப் பெயர் சமாதானம்
அரசியல் தீர்வு எட்டாக் கனியாம்
அதற்குப் பெயர் சமாதானம்
அல்லம் பகலும் விசாரணை நடக்குதே
அதற்குப் பெயர் சமாதானம்
காப்பட் வீதியில் கார் ஓடுதே
அதற்குப் பெயர் சமாதானம்
கொங்கிறீட் றோட்டைக் காட்டினால்
அதற்குப் பெயர் சமாதானம்
அவர்களால் இப்பொழுது சொல்வது எல்லாம்
இதுதான் சமாதானம்



# அப்படியானால் எப்படி நீங்கள்

உற்ற தந்தை பெற்ற தாய்
பிறந்த மண் பிறப்பு மொழி
தனித்துவ இனம் எனும்
ஐந்திலும் பற்றுள்ளவன்
இலட்சிய வாதியாவான்
ஐந்தையும் வெறுப்பவன்
இருப்பைத் தொலைத்தவன் ஆவான்
இதில் ஏதாவது ஒன்றை எதிர்ப்பவன்
சந்தர்ப்பவாதியாவான்
ஐந்தையும் மதிப்பவன்
கொள்கை வாதியாவான்
ஐந்தையும் கணக்கில் எடுக்காதவன்
பச்சோந்தி ஆவான்
ஐந்தையும் ஒதுக்கி நடப்பவன்
சுயநலவாதியாவான்
அப்படியானால் எப்படி நீங்கள்




# பட்டமும் புகழும் பாராட்டும்

திட்டமும் செயலும் வெற்றியடைந்தால்
பட்டமும் புகழும் தானாய் வரும்
சட்டமும் அதைத் தடுக்க முடியாது
சந்தர்ப்பவாதமும் அதை அழிக்கமுடியாது
சாதனை செய்தால் பாராட்டித்தான் ஆகவேண்டும்
சரித்திரம் படைத்தவனை போற்றித்தான் ஆகவேண்டும்
முகஸ்துதிக்கும் முகவர்களின் பணத்திற்கும்
செல்வாக்கு மிக்கவர்களின் சிபாரிசுகளுக்கும்
சிறப்புப் பட்டங்கள் பல்வேறு பெயர்களில்
கலப்படங்கள் கௌரவப் பட்டங்களிலும் ஊடுருவி
விட்டது
உண்மையானவர்கள் ஓரம்கட்டப்படுகின்றார்கள்
உறுதிமிக்கவர்கள் வெறுக்கப்படுகின்றார்கள்
உழைப்பாளிகள் ஒதுக்கப்படுகின்றார்கள்
திறமையானவர்களுக்கு அரசியல் சாயம் பூசி

அருமை பெருமையெல்லாம் மறைக்கப்படுகின்றது
தரமானவர்கள் தரம்குறைக்கப்படுகின்றார்கள்
இடமாறும் ஆட்சி அதிகாரம் போன்றுதான்
தடம் பதித்த எம்மவரின் புகழாரம்
அசிங்கப்படுத்தப்படுகின்றது
புடம் போட்டு போற்றக்கூடிய கனவான்களும்
விரல் நீட்டிப் பாராட்டக்கூடிய விற்பனர்களும்
முடமாகிப்போய் நிற்கின்றார்கள்
முகம்காட்டுவதற்கும் வெட்கப்படுகின்றார்கள்
அகம் அழுக்காய்ப் போன தேசத்தின்
நியம் எப்படிநின்று பிடிக்கமுடியும்
நயம் உள்ளவன் எதனையும் பெறுவான்
பட்டமும் புகழும் பாராட்டும் அப்படித்தான்.

# இறைவன் என்ன செய்வது




தோட்டத்து மரக்கறி தேட்டத்து நெல்லு
கடல் உணவு திடல் சோளன்
கடைச்சாமான் கறிச்சரக்கு
குடிபானம், சுவைப்பண்டம்
கோழிஇறைச்சி கொழுத்த ஆடு
பால் தயிரு பழங்கள்
சத்துணவுச் சற்கரை
மச்சம் மாமிசங்கள்
அத்தனையும் மொத்தத்தில் நஞ்சுதான்
அவைகளைப் பதப்படுத்தும் நாசினிகள்தான்
கலப்படமும், கலர்ப்படமும்
மலர்ந்திட்ட உலகில்
ஆரோக்கியத்தை எதிர்பார்க்க முடியாது
ஆயுள் குறைவதைத் தவிர்க்க முடியாது
மருந்துகளும் மாத்திரைகளும் அப்படியெனில்
வைத்தியர்கள்தான் என்னசெய்வார்கள்
இறந்தால் விதியென்று சொல்லும் நாம்
விருந்தால் சதியென்று சொல்லமுடியுமா?
அருந்தாமலும் உண்ணாமலும் இருக்கமுடியுமா?
இறைவனின் பிரசாதத்திலும் இப்படியென்றால்
இறைவனால்தான் என்ன செய்ய முடியும்.



# அவர்களும் இவர்களும்

நினைவு கூரவும் முடியவில்லை அவர்களை
நினைக்காமல் இருக்கவும் முடியவில்லை
நினைந்து அழுது புலம்புவதற்கு
நிலையான இடம் கிடைக்கவில்லை
இவர்கள்தான் அதற்குக் காரணம் என்பதால்
இரங்கல் செய்யவும் முடியவில்லை
ஆண்டுத் திதியும் அஞ்சலிப் பிதிர்கடனும்
ஆலயப் பிரார்த்தனைப் பூசைக்கும் தடை
அப்பாவிகளின் பிரிவுத்துயரைப் பகிரமுடியாது
எப்பாடுபட்டுச் செய்தாலும்
இவர்களாலே தடுக்கப்படுகின்றோம்
வெற்றி விழாக்கழும் வேட்டுக்காட்சிகளும்
இவர்கள் மட்டும் செய்யலாம்
எப்படியும் செய்யலாம் என்னவும் செய்யலாம்
எழுச்சியாய் செய்யலாம் குளிர்ச்சியால் செய்யலாம்
அதற்கு யாருமே தடையில்லை
ஏன் தெரியுமா அவர்களை இவர்கள்தான்
இல்லாமல் செய்தார்கள் என்பதால்
எப்பவும் இப்பவும் என்னவும் செய்யலாம்
அவர்களுக்கும் இவர்களுக்கும் இதுதான் நீதி
அவர்கள் அவர்கள்தான் இவர்கள் இவர்கள்தான்



# காதல் யோக்கியம்

காதலுக்குக் கவி எழுத கவிஞர்கள் பலருண்டு
காதலுக்காய் எழுதியே காலத்தைக் கடத்தியவர்
எண்ணில் அடங்காது ஏராளம் பேருண்டு
கற்கண்டே சர்க்கரையே கனிவான தேனமுதே
மானே மரகதமே குயிலே மயிலழகே
கண்டபடி அழகூட்டி கருத்துக்களை மாலையாக்கி
மிகைப்படுத்தி புகழ்ந்து மின்சாரம் பாய்ச்சினார்கள்
கண்டது என்ன பயன் காதல் காதில் பூவைத்தது
ஆயிரத்தில் சில காதல் அன்பாய் நிலைக்கிறது
ஆயினும் பல காதல் பாதியிலே முறிகின்றது
சீதனத்தால் பிரிந்த காதல் ஆதனத்தால் அழிந்த காதல்
சோதிடம் பார்த்த காதல் சோதனை நிறைந்த காதல்
வேதனை தந்த காதல் வெம்பி உடல் தேய்ந்த காதல்
வெளிநாடு போன காதல் வேலைவெட்டி இல்லாகாதல்
சாதிகுலம் பார்த்த காதல் சண்டையிலே முடிந்த காதல்
தற்கொலை செய்தகாதல் தாலிகட்ட மறந்த காதல்

தாடி வளர்த்த காதல் தடுமாறிப் போனகாதல்
ஏமாற்றிப் பிழைத்த காதல் ஏமாளியான காதல்
பொழுதுபோக்குக் காதல் போற வஸ்சில் ஏறும் காதல்
எஸ்எம்எஸ் காதல் இன்டநெற் பார்த்த காதல்
கணனி முகக் காதல் கல்லூரி முகப்புக் காதல்
படிப்பைத் தொலைத்த காதல் பாதை மாறும் காதல்
தொலைபேசி சொன்ன காதல் தொலைந்து போன காதல்
பெற்றோரை வெறுத்த காதல் பேரம்பேசும் காதல்
உற்றாரை மறந்த காதல் உடன்பிறப்பை உதைத்த காதல்
கண்ணீரைத் தந்த காதல் கடலிலே மிதந்த காதல்
மண்ணிலே புதைந்த காதல் மண்டை உடைந்த காதல்
எண்ணிலா காதல் வகை ஏராளம் பூமியிலே
இந்தக் காதலுக்குத்தான் காதலர் தினம் தேவை
உண்மைக்காதலுக்கு ஒரு தினமும் தேவையில்லை
போக்கிரிகள் காதலித்தால் புனிதமாகா காதல்
காதலுக்கும் யோக்கியம் உண்டு புரிந்திடுவீர்.



# தமிழரின் சாதி

மனிதனின் சாதிகள் தெரியாது
தமிழனின் சாதிகள் நான்காகும்
ஆண் பெண் என்பது இருசாதி
கொள்கை உள்ளவன் உயர்சாதி
கொள்கை அற்றவன் கீழ்சாதி
வேறு சாதிகள் இல்லை
வேண்டாம் வேற்றுமை எம்மிடம்
பெரியவன் சிறியன் எனச்சொல்லி
பேதங்கள் வாதங்கள் காட்டாதே
பிரதேச வாதங்கள் பேசிப்பேசி
குரோதத்தை மனங்களில் விதைக்காதே
உறவுக்கு ஆண் பெண் சாதியைச் சொல்
உரிமைக்கு கொள்கையின் சாதியில் நில்
அதனால் கொள்கை உயர்சாதி
அதனை மறப்பவன் கீழ் சாதி
அதைவிட வேண்டாம் வேறுசாதி
தமிழனின் சாதி தமிழ் சாதி

# தமிழனில் ஒற்றுமை வருமா?



அறத்திலும் ஒற்றுமை இல்லை
அகத்திலும் ஒற்றுமை இல்லை
அறிவிலும் ஒற்றுமை இல்லை
அரசியல் ஒற்றுமை வருமா?

கட்சியில் ஒற்றுமை இல்லை
களத்தினில் ஒற்றுமை இல்லை
கருத்தினில் ஒற்றுமை இல்லை
கனவினில் ஒற்றுமை வருமா?

புலத்தினில் ஒற்றுமை இல்லை
புறத்திலும் ஒற்றுமை இல்லை
புலனிலும் ஒற்றுமை இல்லை
புவிதனில் ஒற்றுமை வருமா?

நிலத்தினில் ஒற்றுமை இல்லை
நினைவினில் ஒற்றுமை இல்லை
நியாயத்தில் ஒற்றுமை இல்லை
நிதானத்தில் ஒற்றுமை வருமா?


குணத்தினில் ஒற்றுமை இல்லை
குடிதனில் ஒற்றுமை இல்லை
குருவிலும் ஒற்றுமை இல்லை
குடை தனில் ஒற்றுமை வருமா?

தலைமையில் ஒற்றுமை இல்லை
தர்மத்தில் ஒற்றுமை இல்லை
தரணியில் ஒற்றுமை இல்லை
தமிழனில் ஒற்றுமை வருமா?



# நன்றி

நன்றி எனும் மூன்றெழுத்தை
நாவாலே மட்டும் உச்சரித்து
நாமதை மறந்து விடுகின்றோம்
நம்மவரில் எத்தனை பேர்
நன்றியுடையவர்களாய் இருக்கின்றோம்,
நாளாந்தம் அதை மதித்து
நன்மை செய்து வாழ்கின்றோம்
உதட்டால் புகழ்ந்து பாடி
உள்ளத்தால் திட்டித் தீர்த்து
உதவி செய்த மனிதர்களை
உதவாக்கரை என்று ஒதுக்குவதும்
போகவிட்டுப் புறம் பேசி
போலி நடிப்புக்களை மாலையாக்கி
கேலி செய்து சிரிப்பதும்
ஊருக்குள் சர்வசாதாரணம்
பொய் முகங்கள் மலிந்த நாட்டில்
நன்றி செய்ய யார் இருக்கார்
ஒருவரைக் காட்டுங்கள்
உனக்கு நன்றியாய் இருப்பேன்.



# கிரகணம்

சூரியகிரகணம், சந்திரகிரகணம்
வருடத்தில் ஓரிரு தடவை வரும்
சிலவேளை வராமலும் விடும்
வாழ்நாள் முழுவதும் எமக்கோ
பூரண கிரகணம்தான்
தோஷம் நீங்கவும் இல்லை
தொந்தரவு குறையவும் இல்லை
தோத்திரம் செய்து பார்த்தோம்
தோப்பிக்கர்ணம் போட்டோம்
அறுபத்தேழு வருடங்களாக
அரப்பு தேய்த்தும் முழுகினோம்
அர்ச்சனை செய்து எள் எரித்தோம்
அலகு போட்டு பிரதட்சனை செய்தோம்
அரோகரா என்று காவடி ஆடினோம்
ஆலயம் எல்லாம் தேங்காய் உடைத்தோம்
சோதிடர்களைத் தேடி பரிகாரம் செய்தோம்
உலகமெல்லாம் யாகமும் செய்தோம்
உபவாசத்துடன் விரதமும் இருந்தோம்
பூரணை சிரார்த்தம் புண்ணிய தர்மம் என
தீ மிதித்து யாத்திரை செய்தோம்
எண்ணிய கருமமும் ஈடேறவில்லை
எம் மண்ணில் கிரகணம் மாறவே இல்லை
இனி மாறும் என்ற நம்பிக்கையுடன்
இன்னும் பிராத்தனையை தொடர்வோம்
வேறு எ ன்னதான் செய்வது.



# சாந்தியும் சமாதானமும்

தை பிறந்தால் வழிபி பிறக்கும்
இப்படிச் சொல்லிச் சொல்லியே
அறுபது "தை"களைக் கடந்தோம்
ஆனது ஒன்றுமே இல்லை
வழி பிறக்கவில்லை வலிதான் பிறந்தது
இந்தத் தையும் இப்படித்தான்
இடம்பெயர்வு, இன்னல், இடர்கள்
அகதி, அழிவு, அல்லல், அச்சம்
துன்பம், சோகம், வேதனை, சோதனை
கண்ணீர், செந்நீர், கொடுமை, அடிமையென
தமிழர் கதை தொடர்கிறது .............
தமிழினத்தின் சுவாதீனம் கிடைக்கும் போதுதான்

உண்மையான தமிழர் திருநாள்
அது வரைக்கும்
பானையிலே பால் மட்டுமே பொங்கும்
மனம் பொங்காது மகிழ்ச்சி பொங்காது
உழவனின் உள்ளம் பொங்காது
உதிக்கும் சூரியனுக்கும் உவகை பொங்காது
தைப்பொங்கல் இனிக்காது
தாயகமும் சிரிக்காது
அந்த ..............
ஏக்கமும், எதிர்பார்ப்பும் !
நிம்மதியும், சுதந்திரமும் !
சாந்தியும் சமாதானமும் !

....................

நிறைவு பெற
இறைவனை வேண்டுகின்றேன்.

14.01.2008

# உறுதியுடன் வாழ்த்து



யுத்தம் ஓய்ந்து
ஐந்து வருடங்கள்
சத்தம்தான் இல்லை
சமாதானம் வந்ததில்லை
இரத்தக்கதை கேட்டு
நித்தமும் ஏக்கங்கள்
சொந்த நாட்டினிலே
சோதனையும் வேதனையும்
சொல்லொண்ணா பெரும் அழிவும்
சோகத்தின் அழுகுரலும்
தோள்மீது சுமந்துகொண்டு
மறுபடியும் வாழ்வுக்காய்
மக்களின் எதிர்பார்ப்புக்கள்
எங்குமே ஆக்கிரமிப்பு
எல்லாமே அபகரிப்பு
எப்போதும் துயரங்கள்
இந்த இலட்சணத்தில்
எப்படிப் பால்பொங்கும்
என்னென்று தை இனிக்கும்
உண்மைச் சமாதானம் வர
உளமாற பிராத்திப்போம்
உறுதியுடன் நாமே

14. 01. 2014



# தமிழ் பொங்க

அவலங்கள் தீரவும் அபிலாசைகள் வெல்லவும்
அநீதிகள் மறையும் ஆண்டாக வருவாய்
வரலாற்றை மாற்றும் வஞ்சகர் சூழ்ச்சி
வையத்துள் பொசுக்கவே தாயே நீ அருள்வாய்
பம்மாத்துப் பேச்சும் பலன் இல்லா செயலும்
எம்மாத்தும் இனி இங்கு வேண்டாம்
பறிபோகும் நிலமும் பரம்பரை இனமும்
பாதுகாக்கவே பால்பொங்க வருவாய்
குறைவின்றி எல்லோர்க்கும் எல்லாம் கிடைத்து
நிறைவான நிம்மதி சமாதானம் தருவாய்
தடையின்றித் தமிழர் நாம் தலைநிமிரவே
தை நாளே "தமிழ் பொங்க" வருவாய்
விடிவின்றித் தவிக்கும் பூர்வீகக் குடிகள்
முடிவொன்றை தரும் ஆண்டாய் மிளிர்வாய்

14.01.2012



# தமிழ் தமிழனாக

அறிவினில் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
உணர்வினில் தமிழனாக வேண்டும்

குருதியில் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
உறுதியில் தமிழனாக வேண்டும்

குணத்தினில் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
கொள்கையில் தமிழனாக வேண்டும்

இனத்தினில் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
இலட்சியத் தமிழனாக வேண்டும்

பெயரினில் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
செயலினில் தமிழனாக வேண்டும்

பதவிக்குத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
உதவிக்கு தமிழனாக வேண்டும்

பிறப்பினால் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
இருப்பினால் தமிழனாக வேண்டும்

பார்வைக்குத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
பற்றுள்ள தமிழனாக வேண்டும்

பரம்பரைத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
நிரந்தரத் தமிழனாக வேண்டும்

நேர்மைத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
நேரிய தமிழனாக வேண்டும்

ரோசத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
சோரம் போகாத் தமிழனாக வேண்டும்

வீட்டினில் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
நாட்டினில் தமிழனாக வேண்டும்

வீரியத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
தேசியத் தமிழனாக வேண்டும்

நாணத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
மானத் தமிழனாக வேண்டும்

காரத் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
வீரத் தமிழனாக வேண்டும்

எங்கும் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
பொங்கும் தமிழனாக வேண்டும்

தரணியில் தமிழனாய் வாழ்ந்தால் போதுமா
தமிழன் தமிழனாக வேண்டும்


14. 01. 2013



# தீபாவளி எங்கே இனிக்கும்

| | | |
|---|---|---|
| தீனம் | நிறை | நாடு |
| தீம்பு | கொண்ட | தேசம் |
| தீனி | இல்லா | மக்கள் |
| தீர்வு | இன்றித் | தமிழர் |
| தீர்ப்பு | சொல்லா | உலகம் |
| தீங்கு | பழக்க | தோசம் |
| தீர்மானம் | யாரிடம் | கூற |
| தீவாணம் | எல்லாம் | இனவாதம் |
| தீவட்டி | பட்டுக் | கருகிறது |
| தீபகம் | எப்படி | எரியும் |
| தீபனம் | எப்போ | தீரும் |
| தீபாவளி | எங்கே | இனிக்கும் |
| தீபம் | ஒன்றாய் | ஏற்ற |
| தீர்க்கம் | எடு | தமிழே |

தினமணி - 2007



# சித்திரையும் - வைகாசியும்

★ சித்திரை

தமிழ் மக்களும் சிங்கள மக்களும்
கொண்டாடும் ஒரேயொரு நாள்
தமிழ் சிங்கள சித்திரை வருடப்பிறப்பு
இரு சமூகமும் ஒரே நாட்டுக்குள்
இன்புற்று மகிழும் நாள்
இது ஒற்றுமையைப் பிரதிபலிக்கும்


★ வைகாசி

சிங்கள மக்களுக்கு வெற்றி விழா
தமிழ் மக்களுக்கு துக்கதினம்
அந்த ஒரே நாள் மே - 18
போரில் வென்றதனால்
அவர்கள் வெற்றிவிழா எடுக்கிறார்கள்
எம்மவர் இறந்ததனால்
நாங்கள் துக்கத்தை அனுஷ்டிக்கின்றோம்
இரு சமூகமும் ஒரே நாட்டுக்குள்
எதிர்மறையான நிகழ்வுகள்
இது வேற்றுமையைப் பிரதிபலிக்கும்
சித்திரையில் கைகோர்த்தவர்கள்
வைகாசியில் கைவிட்டனர்.



# யுத்த பெருமான்

அந்த பெருமானாரின் போதனைகள்
இந்த உலகத்தில் எப்போதுமே
நன்மையைத்தான் போதித்தன
நம்மையுந்தான் சோதித்தன
அவர் கடவுள் என்பதால் நாம்
கைகூப்பி வணங்குகிறோம்
கடவுளையும் கற்சிலையாய் மாற்றி
கண்ட இடமெல்லாம் எம் மண்ணில்
கண்மூடிய பொம்மைகள் போல்
சந்திகளிலும் சாலை ஓரங்களிலும்
காட்சிப்படுத்தி அசிங்கப்படுத்துகிறார்கள்
அதனால் அவரைப் பார்க்க மனம் வெறுக்கிறது
கைகூப்பி வணங்க வாய் கூசுகிறத
பாவம் அந்தப் புண்ணிய தர்மர்
கோபம் இவர்கள் மேல் கொண்டு
குத்துக்கரணம் ஏன் சாமி
யுத்த பெருமான் நான் சாமி
என்று இப்போது போதிக்கிறார்.



# முகவரி

மனிதனின் முகவரிகள் மண்ணில் மேல் உண்டு
மனிதத்தின் முகவரிகள் மண்ணுக்குள் ஏன் உண்டு
இனவாத முகவரிகள் இறக்குமதி செய்வதனால்
எம்மினத்தின் முகவரிகள் தாயகத்தில் அழிகிறது
சமாதான முகவரிகள் போர்உடை அணிந்ததினால்
சண்டாளர் வந்திங்கே சரித்திரத்தை மாற்றுகிறார்
சனங்களுக்கு நீதியில்லை நிம்மதியும் இல்லை
சாவுகளைச் சந்தித்து சாதனைகள் புரிந்தவர்க்கு
சவக்குழியில் கூட முகவரியில்லை
சோதனைகள் கண்ட நாம் தோல்வி அடையவில்லை
வேதனைகள் கண்டு விம்மி அழுதாலும்
விழுந்த நாம் எழுவோம் ஒருநாள்
வீண்போகா நம்பிக்கைதான்
விடிவுக்கு உரித்துடையோர் நாம்
முடிவு கிடைக்கும் வரை பயணிப்போம்
வேலிக்கு ஓணான் சாட்சிபோல
கூலிக்கு தலையாட்டும் கும்பல்களின்

கூக்குரல்கள் ஒழியும் கொட்டங்கள் அடங்கும்
எலும்புக்கு விலைபோகா எம்மவரின் கொள்கை
எழுர்ச்சியுடன் எழுவோம் திண்ணம்
எல்லோரும் சிரிப்போம் ஏற்றம் அடைவோம்
எங்களுக்கும் சொந்த மண்ணில் நிம்மதி உண்டு
என்பதை உலகிற்கு எடுத்துரைப்போம்
கொடுங்கோல் உடைந்து கொடுமை அழியும்
கோத்திரம் ஒருநாள் ஆட்சி செய்யும்
பொய்களும் போலி முகவரிகளும்
மெய்களால் சாம்பலாகும்
தாய்நிலத்தில் முகவரியில் தமிழ்வாழும்
தளராத உறுதியில் உண்மை வாழும்
தமிழன் என்ற முகவரிகள் என்றும் வாழும்
தமிழா நீயும் தமிழனாய் இருந்தால்

முகவரி சஞ்சிகை: 2011

(பட்டிப்பளை பிரதேச இலக்கிய ஆண்டு மலர்)

# சம்பூர் மக்களின் நிலை

உடைமையுடன் உயிர் இழந்து
கடமையுடன் காரியத்தையும் தொலைத்து
ஊர்விட்டு ஓடி திசை மாறி
வெடிபட்டு வேதனைகளால்
ஒப்பாரி சத்தமுடன் ஏழுவருடமதாய்
வதைபட்டு வாழ இடமின்றி
உதைபட்டு உதவிகளும் இன்றி
கதை பல கேட்டு காது நோகி
கனத்த ஊர் முகாமெலாம்
அலுத்துப் போய் சோர்ந்து
அடைபட்டு அகதி வாழ்வாய்
தடைபட்டுக் கிடக்கின்றோம்.
விடை ஏதும் இன்றி
வினாக்களை சுமந்து கொண்டு
படை கண்டு பரிதவித்து
உடை உணவு இன்றி
சொந்த ஊரில் வசிப்பதற்காய்
நொந்து அலைகிறோம்
வெம்பு மணல் தரையில்
வேலை வட்டி ஏதுமின்றி
கம்பும் தகரமும் மேய்ந்த
வெக்கைக் கூடாரத்தில்

அனல் காற்றை சுவாசித்து
அல்லல் உறுகின்றோம்
அனல் மின் நிலையத்திற்காய்
வளம் நிறைந்த பூமியதை
தளம் அமைக்கும் சதியாலே
தொப்புள் கொடி நாடும்
தொந்தரவு தருவதனால்
எங்கு போவோம் இனியும் தான்
வெந்தபுண்ணில் வேல்பாயும்
சம்பூர் மக்களின் நிலை

# இது....

# பாடல் வரிகள்

அம்பிளாந்துறையூர் அரியம்

# இலங்கை மாதாவும் எம்மூர் தம்பியும்



தம்பி - இலங்கைத் தாயே மாதாவே உன்
நெஞ்சில் கைவைத்து நீயே சொல்
வந்தேறு குடிகளா நாங்கள்
பூர்வீகக் குடிகளா நாங்கள்

மாதா - கொஞ்சம் பொறு மகனே உன்
கொதிப்பு எனக்குப் புரிகிறது
கொடுமை கொண்டு வாழுவதைக்
கண்டு கொண்டேன் அழ வேண்டாம்

தம்பி - உண்மை சொல்ல ஏன் அச்சம்
உனக்கும் தண்டனை கிடைத்திடுமா
உள்ளம் எமக்கோ ஏங்கியதால்
உன்னை நீதிக்காய் அழைத்திட்டேன்

மாதா - எங்கே மகனே நீதி இருக்கு
எனக்கும் சொல்ல வெட்கமானேன்
அங்கே வந்து அதைச் சொன்னால்
அடுத்த நிமிடம் நானும் தான்

தம்பி - தாயே உனக்கு அச்சமெனில்
தம்பியாரை நம்புவது
நீதிகேட்டு வந்தாலே
நீயும் கொஞ்சம் அஞ்சுவதேன்

மாதா -நானும் இங்கு வாழும் வரை
நடித்துத்தானே ஆகவேண்டும்
அதையும் மீறி நடத்திட்டால்
அடுத்த கதையும் தெரியும் தானே

தம்பி - அகதி வாழ்வு எம்மவர்க்கு
அதனால் உன்னைக் கெஞ்சுகிறேன்
ஆறதல் வாழ்வைப் பெற்றிடவே
கூறுதாயே ஒரு தீர்வு

மாதா - இந்த நாட்டில் இருப்பதனாலும்
இனவாதத்தில் மூழ்கிவிட்டேன்
அதனால் தீர்வும் மறைகிறது
அன்பு மகனே மன்னிப்பாய்

தம்பி - தாயே உனது நேர்மையினை
நாமோ இப்போ உணர்ந்திட்டோம்
பேயே உள்ள தேசத்தில்
நாயாய் வாழ்வது சரிதானா

மாதா - ஐயோ மகனே அழ வேண்டாம்
ஆண்டவன் இருக்கான் கலங்காதே
காலம் மாறும் ஒரு நாளில்
கலக்கம் இன்றி வாழ்வாயே

தம்பி - அம்மா நீயும் உணர்ந்துவிட்டாய்
ஆனாலும் வாய் மூடுகிறாய்
சும்மா அங்கே இருக்காதே
சுறுக்கா ஒரு தீர்வைச் சொல்

மாதா - தீர்வைத் தருவேன் என் மகனே
திடமாய் நீயும் நம்பி இரு
தீரும் உனக்குப் பசியெல்லாம்
நானும் உன்னை வாழ்த்திடுவேன்

தம்பி - பசிக்காகத்தான் பலியானோம்
பலனுக்காக உழைக்கின்றோம்
பார்த்து நீயும் உதவி செய்தால்
பரிதாபங்கள் அகன்றுவிடும்

மாதா - நேரம் போகுது என் மகனே
நேராய் கண்டால் விடமாட்டான்
வாறன் போய்த்து அடுத்த தரம்
பேசாமல் கதைத்திருப்போம்

தம்பி - இன்றும் பயந்து இங்கிருந்து
எதைத்தான் நீயும் செய்வாய்
அடுத்த நிமிஷம் வீஷா எடுத்து
அவுஸ்திரேலியா போய் வாழ்தாயே

மாதா - விஷாவும் எனக்குக் கிடையாது
விசராய்ப் போனேன் நான் மகனே
கடலால் தப்பி ஓடிடவும்
காசும் எனக்கு இல்லையடா

தம்பி - அயல் நாட்டில் நீ போகும் முன்னே
அடிச்சு கூறு உண்மையினை
ஆண்ட தமிழர் நாம் என்று
அம்மா ஒருமுறை சொல்லிவிடு

மாதா - இப்போ சொல்லமாட்டேன் நான்
எப்போ உண்மை வெளியாகும்
அப்போ அதனை சொல்லிவிட்டு
தாயாய் உன்னைத் தரிசிப்பேன்



# கிராமிய பாடல்

பெ – கண்ணக்குடா வட்டைக்குள தண்ணிர் பாச்ச போன மச்சான்
தண்ணீர் சோறு கொண்டு வாறேன் தாகம் தீர தின்னு மச்சான்

ஆ – தண்ணீர் சோறெடுத்து கடுகடென வாற புள்ள
சறுக்கி விழுந்திடாதே களிக்கட்டு வரம்பினிலே

பெ – சறுக்கி விழுந்தாலும் சாகமாட்டேன் பயப்படாதே
சுறுக்கா நான் வந்து சோறுதரப் போறன் மச்சான்

ஆ – சுறுக்காக வரவேணாம் சுணங்கி நான் இருப்பன்
வடிச்சலில புடிச்ச மீனு வயலோரம் வச்சிருக்கேன்

பெ – வடிச்சலில புடிச்ச மீனு வரம்பால பாஞ்சி விடும்
பகலைக்கு நான் சமைப்பேன் பதறாதே ஆச மச்சான்

ஆ – பகலைக்கு சமைக்க பனையான் மீன் காணாது
புளி மாங்கா போட்டு பால ஆணம் வைச்சுவிடு

பெ – புளிமாங்க சொதி வைக்கப் போதாது பனையான் மீன்
கறுத்தார் வட்டைக்குள கெழுத்தி மீனு வடிச்சு வாகா

ஆ – கறுத்தார் வட்டைக்க மீன் வடிக்க நானும் போன
முளைக்கட்டி நெல்விதைக்க முடியாது என்னால

பெ – முளைக்கட்டி நெல்விதைக்க மூன்று நாளெடுக்கும்
முடிஞ்சா சாயங்காலம் துரை வைக்க நெல்லு வைப்போம்

ஆ – முடிஞ்சா மாட்டால முறையாக வயல் மிதிப்பேன்
வில்லுத்தண்ணி பாச்சி விதைக்கவும் செய்வேன்

பெ – வில்லுத்தண்ணி வர வில்லங்கமாக இருக்க
வாய்கால வெளியாக்க வட்டான சொல்லுறாரு

ஆ – வாய்கால் வெளியாக்க வாறன் நானும் உன்னுடனே
வயல் செய்த போடிமாரும் வருவாங்க இப்போதே

பெ – வயல் செய்ய வேணும் என்றா பிரயாச வேணும் மச்சான்
சோம்பேறியாய் இருந்தா சோக்காக விளையாது

ஆ – சோம்பேறி ஆக்களுக்கு தொழில் ஒன்றும் சரிவராது
சேற்றிலே மிதித்தாத்தான் சோத்திலே கைவைக்கலாம்

பெ – சேற்றிலே கால்வைத்து சிறுபோகம் செய்தாத்தான்
வானம் பார்த்த பூமிக்கும் விதை நெல்லு வந்து சேரும்

ஆ – வானம் பார்த்த பூமியாலும் நம்ம ஊரில் பஞ்சமில்லே
மானம் உள்ள மனிதர் நாம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திடவாம்

பெ – மானம் உள்ள ஊரினிலே மாரித்தாய் துணையிருக்கு
வீரமுள்ள எம்மாலே வெற்றியுடன் உழைத்திடலாம்

ஆ – வீரமுள்ள ஆதியுரு அம்பிளாந்துறையினிலே
விவேகமுள்ள கல்வியையும் விளையாட்டும் உயர்த்திடுமே

பெ – விவேகமுடன் மக்களெல்லாம் வீணாகப் போகாமல்
ஒன்றுபட்டு ஒற்றுமையாய் ஒழுக்கமுடன் வாழ்ந்திடுவோம்

ஆ – ஒன்று பட்டு உழைத்து உண்மை மனிதராவோம்
வென்றுவிடும் தேசத்தின் பங்காளி நாமாவோம்

பெ – வென்றுவிடும் நாளை வெற்றியும் கிடைத்துவிடும்
வேதனைகள் தீர்ந்து சாதனைகள் பெற்றிடுவோம்

# மௌனம் கடவுளின் விடையா

சாத்வீகம் புரியாத சாதி

சரித்திரம் மறைக்கின்ற பூமி
இனத்திற்கு எங்குதான் நீதி
உலகிற்கு புரியுமா சேதி
(சாத்வீகம்)

சாந்தி சமாதானம் இவைகளா
சந்தியின் மதுபானக் கடைகளா
சனங்களோ இன்னுமேன் தடைகளா
சண்டைகள் ஓய்ந்ததால் தீர்ந்ததா
(சாத்வீகம்)

சீர் கெட்டு கலாச்சாரம் போகுது
சிதைந்திட்ட வாழ்வாய் ஆகுது
கலங்கிட்ட உறவினை தூக்கிட
விலங்கிட்ட கைகளால் முடியுமா
(சாத்வீகம்)

சுதந்திரம் சூழல்பந்து விளையாட்டா
சுணை கெட்ட மனிதனின் களியாட்டா
தர்மம் வர இன்னும் தடையா
மௌனம் கடவுளின் விடையா
(சாத்வீகம்)

# உண்மை தெரிந்து கொள்

வம்புக்கிழுக்காதே மச்சான் வம்புக்கிழுக்காதே
அன்புக்கான ஊர்இதுவே வம்புக்கிழுக்காதே
உணவளிக்கும் சனங்களைப் பார்
உறுதியுள்ள இனங்களைப்பார்
-வம்பு-

அள்ளி அள்ளிக் கொடுக்கும் ஊர் இது
அம்பிளாந்துறைப்பதி அம்பிளாந்துறைப்பதி
அரவணைக்கும் மண்தான் இது
அம்பிளாந்துறைப்பதி அம்பிளாந்துறைப்பதி
-வம்பு-

கன்னன்குடா வயலுக்குள்ளே கானான் கோழி
பறக்குது
கல்லு மதில் ஓரத்திலே கன்றுக்குட்டி மேயுது
கன்னாப்பற்றை வாவியிலே கரைக்கு மீன் வருகிது
கதிரவன் ஒளியாலே கதிர்கள் நெல்லு குவிக்குது
-வம்பு-

விளையாட்டின் திறமையைப்பார் வெற்றிபெற்ற
வீரனைப்பார்
கலைமகளின் உயர்வாலே கல்வியின் உயர்வைப்பார்
தடைகள் வந்த போதிலும் தளராத உழைப்பைப்பார்
படைகள் வந்த திசையினிலும் பண்பான
உணர்வைப்பார்
-வம்பு-

உப்புக்கரைச்சையிலே ஊர் மாட்டுப்பண்ணை உண்டு
அப்பு வாடியிலே எப்போதும் தயிர் இருக்கும்
சேனைப்பயிர் செஞ்செழிப்பை பார்த்தாயா
சேதி இது உண்மை தெரிந்துகொள் எங்கள் ஊரை
-வம்பு-

# ஊர்ப் பாடல்


பாலும் தயிரும் சோறும்
பருகப் பருக இனிக்கும்
பழமை கூறும் ஊரு - இது
பைந்தமிழ் இனத்தின் கூறு

ஆதியூர் அம்பிளாந்துறையினிலே
ஆண்ட தமிழரின் இராச்சியமாம்
அரணி மதிலும் சாட்சியமாம்
அதனால் கொடுமை பூச்சியமாம்

பூமியில் பூர்வீகம் சொல்கிறது
வாவியில் வரலாறு தெரிகிறது
வயல்களில் சூரியன் உதிக்கிறது
வானத்துச் சந்திரன் சிரிக்கிறது

நெல்மணி சிரிக்கும் அழகினிலே
நேரிய தமிழ் இசை இனிக்கிறதே
முத்தமிழ் வளரும் ஊரினிலே
முக்கலை எங்கும் வளர்கிறதே

சித்தி விநாயகர் அருளுண்டு
முத்துமாரியின் துணையுண்டு
நித்தமும் விளையாட்டில் உயர்வுண்டு
உத்தமக் கல்வியின் பலன் உண்டு



# ஆண்ட தமிழ் ஊர்

ஆண்ட தமிழ் ஊரே அம்பிளாந்துறைபதியே
வேண்டினேன் உனையே வெற்றியைத் தருவாயே

ஊர் சுற்றி மதிலமைத்து உண்மையுடன் வாழ்ந்தவர்கள்
முன்னோர்கள் செய்த பணிமுறையாகத் தெரியுதுபார்
மூதாதைகல்லறைகள் கண்முன்னே தெரியவில்லை
முழுநாடும் அறிகிறது அவர் செய்த நற்பலனை
கண்ணாகக் காத்திங்கே கடமையாட்சி புரிந்தவர்கள்
மண்ணோடு மறைந்தாலும் மறையாது உன் பெருமை
- ஆண்ட -

பண்டைத் தமிழ் மரபும் பாரம்பரியமுடன்
பண்பாடு தவறாத பழமையான தமிழ்குலமே
வந்தோரை வரவேற்று வளமாக உபசரித்து
வயிறார உணவளிக்கும் நிறைவான தேசமம்மா
சைவமும் தமிழும் கலையுடன் விளையாட்டு
வையக அறிவும் வளர்ந்திடும் தாய் ஊரம்மா
- ஆண்ட -

ஒற்றுமை ஒழுக்கம் உறுதி நல்வாழ்வும்
உழைப்புடன் ஓங்கிடும் கல்வி அறிவும்
எப்போதும் உதவிடும் கல்வி மனப்பாங்கும்
இருள் அகற்றப்பாடுபடும் நல் இதயங்களும்
இல்லாமை நீங்கி எழுர்ச்சியுடன் வாழும்
இளைஞர்கள் நல்வழி காட்டும் ஊரே
- ஆண்ட -




# அன்னையர் தினப்பாடல்

அன்னையே உலகில் முதல் தெய்வம்
அவளே எமக்கு ஒளிவிம்பம்
அன்னையே . . . . .
கண்முன்னே நின்று காத்திடுவாய்
கருணை கொண்டு தேற்றிடுவாய் . . . .
அன்னையே . . . . .
எமக்கோ வலித்தாய் நீ உறங்காய்
மகளே மகனே என்றழுவாய்
மருந்தும் நீதான் ஊட்டிடுவாய்
வருந்தும் நோயை மாற்றிடுவாய் . . .
அன்னையே . . . . .
பத்துமாதம் சுமந்தாயே
பத்தியம் இருந்து காத்தாயே
உதிரத்தைப் பாலாய் தந்தாயே
உள்ளம் மகிழ அணைத்தாயே
அன்னையே . . . .

# புலம் பெயர் மகனின் குரல்

கவலையாய் இருக்கிறேன் அம்மா...
கனவுடன் தவிக்கிறேன் அம்மா...
வீடு வாசல் விற்று வெளிநாடு சென்றேன்
வீணாய்ப் போச்சு விடிவுக்கு என் செய்வேன்
நாடு எத்திசை நானும் ஓடிப்போறேன்
நாலு பணம் சேர்க்க நாளாந்தம் அலைந்தேன்
கவலையாய் இருக்கின்றேன் அம்மா
கனவுடன் தவிக்கின்றேன் சும்மா
பனியில் குளித்தே பகலெல்லாம் அலைந்தேன்
பண்ணை வயல் விற்று பதறி இங்கு வந்தேன்
ஊரை மறந்து வந்து ஊதாரியாயிருக்கின்றேன்
உறவு ஏதுமின்றி உள்ளத்தால் அழுகின்றேன்
கவலையாய் இருக்கின்றேன் சும்மா
கனவுடன் தவிக்கின்றேன் அம்மா
சொத்து சுகமின்றி சோதனையால் வாடுகின்றேன்
கடலைக்கடந்து சென்று கண்ணீரால்
நனைக்கின்றேன்
உடல்தான் குளித்தாலும் உற்சாகம் வியர்க்கிறது
உணர்வு தமிழராய்த்தான் இங்கு வாழ்கின்றேன்
கவலையாய் இருக்கின்றேன் அம்மா
கனவுடன் தவிக்கின்றேன் சும்மா
புலம் பெயர்த்து வாழ்ந்தாலும் புலனற்றுப்
போகவில்லை
பலன் ஒன்று கிடைக்கும்வரை பாரினிலே
உழைக்கிறேன்
தளம் அங்கு வந்து சமாதானம் கிடைக்குமெனில்
தமிழனாய் வந்து தாயே உனைத் தரிசிப்பேன்
கவலையாய் இருக்கின்றேன் அம்மா
கனவுடன் தவிக்கின்றேன் சும்மா



# மாசு இல்லா மட்டக்களப்பு

கதிரவன் உதிக்கும் கிழக்கினிலே
காதினில் மீனிசை கேட்கிறதே
நெல்மணி சிரிக்கும் நிலத்தினிலே
நேரிய தமிழ் இங்கு இனிக்கிறதே
- கதிரவன் -

வாவியிலே மீன்கள் துள்ளியெழும்
வயல்களில் தானியம் அள்ள எழும்
வாடியில் தேன்தமிழ் உணர்வு வரும்
வரம்பினில் போடியார் பிணைப்பு வரும்
- கதிரவன் -

பழந்தமிழ் சுவைகள் பண்பாடும்
பால்பழம் அறுசுவை உணர்வோடு
பாசமாய்ப் படிக்கும் உறவுகளும்
படுவான்கரை மண் அணைத்திடுமே
- கதிரவன் -

கூத்து கும்பி குரவைச் சத்தம்
பார்த்துச் சுவைக்கும் பாரம்பரியம்
வேற்றுமைகளை வெறுக்கும் மக்கள்
சோத்துக்கில்லை இங்கு பஞ்சம்
- கதிரவன் -

வீரம் விளையும் களனி நிலமும்
பாறை மீதும் ஆடும் மயிலும்
வீசும் தென்றல் ஓடும் நதியும்
மாசு இல்லா மட்டக்களப்பே . . .
- கதிரவன் -



# உன்னிச்சைக் குடிநீர்

சோறு தந்த நாங்க சும்மா விடுவோமா
தண்ணீரையும் தாறோம் தாகம் தீரக்குடியுங்கோ
(சோறு)

உன்னிச்சைக் குளத்து நீரு விரைந்து ஓடிப்போகுது
ஊரெல்லாம் குடிநீரால் உள்ளம் தாகம் தீருது
பாருக்குள் படுவான்கரை பெரியமனது படைத்தது
யாருக்கும் அடிமையில்லை அனைத்தும் இங்குள்ளது
(சோறு)

எழுவான்கரை மக்களுக்கு இனியும் தண்ணீர்
பஞ்சமில்லை
படுவான்கரை தண்ணீர் இது பருகக் குளிக்க
கொஞ்சமில்லே
ஏரோடு பெருநிலத்தின் ஏற்றமுள்ள குடிநீரு
தேரோடும் பூமியிலே ஊற்றெடுக்கும் தண்ணீரு
(சோறு)

கண்ணமுத்து கலந்தர்லெப்பை கௌரிஅக்கா
பாத்திமாவும்
எண்ணமெலாம் ஈடேறும் எங்க மண்ணு தண்ணியாலே
வண்ணமுள்ள மலர்களும் வளர்ந்திருக்கும் பயிர்களும்
முன்னம் எப்போதில்லாமல் முகங்கள் மலர்ந்திடுதே
(சோறு)

வயல்கள் நீரின்றி வாடிவதங்கினாலும்
அயல்கள் குடிநீரின்றி அழநாம் விடமாட்டோம்
கடல் நீர் எப்பவுமே எதற்குமே உதவாது
படுவான்கரை நீர்தானே எழுவான்கரை பசிபோக்கும்
(சோறு)




# ஒருநாள் ஜெயிக்கும்

வடக்கு என்றால் வசந்தம்தான்
கிழக்கு என்றால் உதயம்தான்
வடக்கும் கிழக்கும் தாயகம்தான்
வதைகள் பட்ட காயங்கள் தான்
(வட)

வாழ்க்கை என்பது நிட்சயம்தான்
வழியில் செல்லவும் அச்சம்தான்
வலிகள் சுமந்த உடல்கள்தான்
வளிகளைச் செய்ததும் உலகம்தான்
(வட)

உணர்வு ஒன்றே மிச்சம்தான்
உண்மை சொல்லவும் கூச்சம்தான்
உறுதி என்பது இலட்சியம்தான்
உரிமை மட்டும் பூச்சியம்தான்
(வட)

விடைகளைக் காண்பது புத்திதான்
வினைகளை அறுப்பது கத்திதான்
தடைகளைக் களைவது சக்திதான்
தர்மம் மீண்டும் ஜெயிக்கும்தான்
(வட)



# மௌனம் கடவுளின் விடையா

சாத்வீகம் புரியாத சாதி
சரித்திரம் மறைக்கின்ற பூமி
இனத்திற்கு எங்குதான் நீதி
உலகிற்குப் புரியுமா சேதி
(சாத்வீகம்)

சாந்தி சமாதானம் இவைகளா
சந்தியின் மதுபானக் கடைகளா
சனங்களோ இன்னுமேன் தடைகளா
சண்டைகள் ஓய்ததால் தீர்ந்ததா
(சாத்வீகம்)

சீர்கெட்டு கலாசாரம் போகுது
சிதைந்திட்ட வாழ்வாய் ஆகுது
கலங்கிட்ட உறவினைத் தூக்கிட
விலங்கிட்ட கைகளால் முடியுமா
(சாத்வீகம்)

சுதந்திரம் சுழல்பந்து விளையாட்டா
சுனைகெட்ட மனிதனின் களியாட்டா
தர்மம் வர இன்னும் தடையா
மௌனம் கடவுளின் விடையா
(சாத்வீகம்)



# வழிப்பிள்ளையாரே

வழிப்பிள்ளையாரே சுழிப்பிள்ளையாரே
வணங்கிடும் பெருமானே
வலிகொண்ட எங்கள் வதைகளைத் தீர்க்க
வரம் ஒன்று தருவாயே
(வழி)

கருணை மனதுடன் வேண்டினேன் உனையே
கண்ணீரைத் துடைப்பாயே
கலங்கிடும் மக்கள் கடமைகள் செய்ய
கரிசனை செய்வாயே
(வழி)

தும்பிக்கை மீது நம்பிக்கை வைத்தோம்
துன்பத்தைத் தீரய்யா
துணிகர வாழ்வும் இன்பமும் கிடைத்து
துலங்க வை ஐயா
(வழி)

சந்திக்கள் மீது குந்தி இருந்தாய்
சனத்திற்கு அருளானாய்
சமூகம் மதிக்கும் கணபதி நீயே
சன்மார்க்கம் காப்பாயே
(வழி)

# நெற்கதிர் சிரிக்குது



நெற்கதிர் சிரிக்குது நேரிய தமிழ் இனிக்கிது
வந்துபாரு எங்கள் ஊரு - இது
வழம் செழிக்கும் பழமை ஊரு
அம்பிளாந்துறையூரு ஆதியூரு
(நெற்கதிர்)

வந்தோரை வரவேற்கும் பக்குவம்
வயிறுநிறைய உணவளிக்கும் நற்குணம்
வதைகள் கண்டு விழமாட்டோம் எப்பவும்
வழக்கத்தைக் கடைப்பிடிப்போம் இப்பவும்
(நெற்கதிர்)

கலைமகள் கல்லூரி கண்திறந்திடும்
கல்வியுடன் கலைகளும் சிறந்திடும்
களனி வயல்களும் விளைந்திடும்
கதிரவன் விளையாட்டும் உயர்ந்திடும்
(நெற்கதிர்)

பண்டை மன்னர் வாழ்ந்த பூமி
பரம்பரையே தமிழர் சாதி
பண்பாடு மாறாத பலருக்கு ஒரேநீதி
பறைசாற்றும் புனித பூமி
(நெற்கதிர்)

முட்டித் தயிருடனே தேனும் இனித்திடும்
முத்தமிழ் கலைகளால் முகங்கள் சிரித்திடும்
முப்பழம் எப்பவும் இங்கே ருசித்திடும்
முரண்பாடு இல்லாத ஓர்மம் விழித்திடும்
(நெற்கதிர்)

# கடவுள்தான் தரவேண்டும் பன்னீர்



தலைவிதி இதுதானோ தமிழா - நாம்
தமிழராய்ப் பிறந்தது தவறா
தனித்துவம் கொண்ட இனமோ
தடைகளால் சாவது சரியோ
(தலைவிதி)

பகைகளால் பலரினால் தயக்கம் - இங்கு
பசியினால் வதையினால் துன்பம்
பணிவிடை செய்வதே இன்பம்
பற்றுடன் வாழ்ந்தால்தான் சொர்க்கம்
(தலைவிதி)

உலகம் உண்மையாய் இல்லை - அங்கு
உறுதிமுடிக்கும் தொல்லை
உள்ளமோ எப்போதும் வெள்ளை
உணர்வுதான் இனி இங்கு எல்லை
(தலைவிதி)

கதைகளைச் சொன்னாலே கண்ணீர் - எங்கள்
கனவிலும் எப்போதும் வென்னீர்
களனி வயலிலும் செந்நீர்
கடவுள்தான் தரவேண்டும் பன்னீர்
(தலைவிதி)



# பண்டாரவெளியில் கண்கண்ட தெய்வம்

பழமைத் தமிழ் இனிக்கும் பண்பாடு நிறைந்த பதி
பண்டாரியாவெளியில் கண்கண்ட தெய்வம்
நாகதம்பிரானே நாம் வணங்கும் சோதியே
நாடி வந்தோமே கோடி அருள்தருவாயே
(பழமை)

தேசத்தால் பொங்கல் செய்து தெவிட்டாமல்
படைத்தோம்
பாசத்தால் உனையே பரிவுடன் வணங்குகிறோம்
நேசத்தால் எமக்கு நேர்வழியைத் தந்திடுவாய்
மோசத்தைத் தராவண்ணம் மோட்சத்தைத்
தருவாயே
(பழமை)

ஊர் ஊராய்த் திருவிழாவும் உளமாறச்
செய்கின்றோம்
பேர்போற்றும் ஆலயமாய் உனை வழிபடுகின்றோம்
பார்போற்ற எங்களுக்குப் பரவசம் செய்வாயே
ஏர் ஓடும் பூமியிலே குடிகொண்ட பெருமானே
(பழமை)

நாள்தோறும் வணங்கிடும் நல்லதம்பிரானே
பால் ஊற்றி பூசை செய்யும் பாம்புத் தெய்வமே
கால் ஊன்றி இருக்கும் கண்கண்ட சோதியே
காலன் அணுகாமல் காப்பாற்று ஐயாவே
(பழமை)

வயலுக்கு நடுவினிலே வரம்தரும் பெருமானே
அயல்களில் வாழ்வோரை ஆசீர்வதிப்பவனே
செயலுக்கு வழிகாட்டும் சேவகனும் நீதானே
புயலுக்கு அஞ்சாத நடமாடும் குருநீயே
(பழமை)



# தாந்தாமலை முருகனுக்கு ஒருவேண்டுதல்

கதிர்காமக் கந்தன் போலே ஆகிவிடாதே
களனி விளைநிலத்தைப் பறிகொடுக்காதே
தாய்மண்ணை அபகரிக்க அனுமதிக்காதே
தாந்தாமலை முருகா தமிழை மறவாதே
(கதிர்)

மண்ணில் அவலம் வந்த போதும்
மயிலேறி நீ ஓடவில்லை
மரணம் வந்து தடுத்த போதும்
மறந்தும் சோரம் போகவில்லை
மன்னன் போலே ஆட்சி செய்யும்
மறத்தமிழ் கடவுள் நீயல்லவா
மறுபடியும் நாங்கள் ஆழ
மனம் திறந்து அருள்வாயே
(கதிர்)

இடுக்கண் வந்து சூழ்ந்தாலும்
இருப்பைக் காப்பாய் வடிவேலா
இரும்புப் பாதம் தடுத்தாலும்
இடத்தை விட்டுக் கொடுக்காதே
இனவாதத்தின் கொடுமைகளை
இங்கே இருந்து துரத்தியடி
இன்னோர் தெய்வம் தேவையில்லை
இறைவா முருகன் நீபோதும்
(கதிர்)

கடம்பனுக்கு பூசைவைக்க
கப்புவனார் இங்குவேண்டாம்
கச்சிதமாய்க் தொண்டு செய்ய
கருணை மனம் நாமிருக்கோம்
கன்னித்தமிழ் இசையுடனே
கந்தனையே வழிபடுவோம்
கலப்படங்கள் தேவையில்லை
கச்சாமியை அழைத்திடாதே
(கதிர்)



# வேலவனை எங்கே தேடுவது

அரோகரா என்று சொல்லி இருகரம் கூப்பி நின்றேன்
பெரேகரா வந்ததனால் பெருமூச்சு விட்டுநின்றேன்

முருகனுக்குப் புத்தி சொல்ல நானென்ன சிவனா
இறைவனுக்குத் தொண்டு செய்ய நானும் ஒரு மகனா
இனவாதம் தடுத்தது எமக்கு மட்டுமா
இந்துக் கடவுளுக்கும் இது என்ன சோகமா
(அரோகரா)

கதிர்காமக் கந்தனையே கண்ணால் பார்ப்பதற்கு
கடைசிவரையுமே தெரியல்ல....
அருணகிரிநாதர் தந்த அருமையான திருப்புகழை
அங்கே பாடவும் முடியல்ல....
பஞ்சபுராணம்பாடி பஞ்சதீபம் காட்டி
பக்தியுடன் வணங்க வழியில்லை....
(அரோகரா)

கதிரமலை ஏறிப்பார்த்தேன் கந்தன் வேலைக் காணல்ல....
உச்சிமலையினிலே ஓம் முருகா தெரியல்ல
கச்சாமி கலாச்சாரம் கண்கண்ட இடமெல்லாம்
கட்டச்சம்பல் பால்சோறுதான் கதிர்காமத்தின் பிரசாதம்
வேதனையை யாரிடத்தில் சொல்லுவது
வேலவனை எவ்விடத்தில் தேடுவது
(அரோகரா)

# வாழ்கவே தமிழ் மொழி

தமிழூரில் பிறந்த தமிழே
தரணியில் உயர்ந்த மொழியே
தன்மானம் கொண்ட அழகே
தலைவணங்குவோம் உமையே
- தமிழூரில் -

கண்ணியம் மிக்க உயிரே
கடமையை வென்ற நிலவே
கலப்படம் அற்ற அறிவே
கலைமகள் தந்த இசையே
- தமிழூரில் -

திகட்டாத தேனின் ஊற்று
தித்திப்பு தந்திடும் நாக்கு
திவ்வியம் மிளிரும் போக்கு
திசையெல்லாம் ஒளியாய் நோக்கு
- தமிழூரில் -

வாளுக்கு இல்லாத கூர்மை
வானமாய் எழுந்திடும் நேர்மை
வாழ்க்கையை உயர்த்திடும் தூய்மை
வாழ்கவே தமிழ்மொழி வாய்மை
- தமிழூரில் -



# வணக்கம்

வணக்கம் சொல்லி வாழ்த்து - இது
இனிக்கும் இன்ப ஊற்று
மணக்கம் தமிழின் கூற்று - இது
இணக்கம் காணும் தீர்ப்பு

வணக்கம்

பிணக்குள்ள மனங்களும் சிரிக்கும் - இங்கு
பிரிந்தவர் வாழ்வும் செழிக்கும்
பெரியவர் சிறியவர் விழிக்கும் - இங்கு
உரியவர் உள்ளங்கள் உறைக்கும்

வணக்கம்


வந்தோரை வரவேற்கும் அன்பு - என்று
மனதாலே வாழ்ந்திடும் பண்பு
தேயாத தமிழரின் தெம்பு - என்றும்
ஓயாது ஒருநாளும் நம்பு

வணக்கம்

பிறமொழிக்கில்லாத சிறப்பு - தமிழ்
பெருமைதான் எங்களின் இருப்பு
மதங்களில் இல்லையே வெறுப்பு - தமிழ்
இனங்களை அணைப்பதே பொறுப்பு

வணக்கம்

# சிவன் கோயில்



கல்நந்தி புல்லுண்ட காட்சியில்
வில்லங்கம் எல்லாமே நகர்ந்தது
போர்த்துக்கேயரின் போர்வெறி
காத்தல் கடவுளால் அழிந்தது
கல்நந்தி

கொக்கட்டி மரத்தின் சிவன்ஒளி
திக்கெட்டும் மக்களின் அருள்நெறி
தான்தோன்றி அப்பனின் தவத்தாலே
தடைகளும் உடைந்ததே நிலத்திலே
கல்நந்தி

தேரோடும் புனித திருத்தலம்
ஏரோடும் வயல்களின் அருள்வளம்
பாரெல்லாம் போற்றிடும் பரம்பெருள்
ஊரெல்லாம் வழங்கிடும் உமாபதி
கல்நந்தி

சரித்திரம் பறைசாற்றும் தெய்வீகம்
தரித்திரம் போக்கிடும் அவதாரம்
பூர்வீகத் தமிழரின் வரலாறு
பூமியில் சொல்லிடும் சிவன் கோயில்
கல்நந்தி

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய காவடிச்சிந்து

அ) அப்பாவி எங்களையும் பாருமையா
அல்லலுறும் எமதினத்தைக் காருமையா
அகதிகளாய் வாழ்வதற்காய் எமைப்படைத்தாய்
அடிமையுற்றுச் சாவதற்கா ஆணையிட்டாய்
தயங்காமல் உன்னிடத்தில் சொல்லுகின்றோம்
தயவுடனே எங்களை நீ பார்த்திடுவாய்
தமிழ்கமழும் கொக்கட்டியூரில் வாழும்
தான்தோன்றீஸ்வரனே அருள்செய்வாயே

ஆ) ஆண்டவனே எமை நீ பார்க்காவிட்டால்
யாரிடத்தில் இதை நாங்கள் சொல்வோம்
அல்லும் பகலும் வேதனையால் அழுகின்றோமே
அடாவடியாய் நாம் இங்கு சாகின்றோமே
சொல்லியழ யாரிடமும் உதவியில்லை
சோதனைதான் எந்நாளும் எங்களுக்கு
சோதியே சிவ சிவ சிவனே
நீதியே எங்களுக்கும் தருவாய் நீயே

இ) இயன்றவரை நாம் இங்கு வாழ்கின்றோம்
எள்ளளவும் எமதினமோ அமைதியில்லை
முயன்றவரை உங்களையே நம்பிவிட்டோம்
முடிவுக்கு அருள் ஒன்று தருவாய் நீயே
விடிவுக்குக் காலம்தான் இன்னும் ஏனோ
வீண்தானே எங்கள் விதியும் தானோ
வித்தகர்கள் வாழும் படுவான்கரையிலமைந்த
நெற்றிக்கண் கடவுளாரே அருள்செய்வாயே

ஈ) ஈய்க்களும் இந்நாட்டில் இன்பம் காணும்
எலிகளும் பூனைகளும் மகிழ்ச்சி கொள்ளும்
எறும்புகளும் பறவைகளும் சுகங்கள் காணும்
குறும்பு செய்யும் குரங்குகளும் கூடிவாழும்
அன்பு கொண்ட நாங்கள் மட்டும் அடிமைதானா
அகிலத்தில் எமைத்தேற்ற ஏனோ அச்சம்
அரவணைக்கும் தமிழ் ஊரில் அமைந்த சிவனே
அநாதைகளை ஒருதடவை அரவணைப்பாயே

உ) உண்மைதான் உன்னிடத்தில் கூறுகின்றோம்
ஒரு பொழுதும் எங்களுக்கோ விடிவுயில்லை
உடமைகளும் இழந்து தவிக்கின்றோம்
ஊக்கமுடன் எந்நாளும் இருக்கின்றோமே
ஊரெல்லாம் ஒளியின்றி வாடுகின்றோம்
உள்ளத்தையும் பலிகொடுத்து அழுகின்றோம்
உழவர் ஊர் படுவான்கரை மண்ணில் உறைந்த
உமையம்மை பரமசிவனே பார்ப்பாய் நீயே

ஊ) ஊமையாய் இருப்பதற்கா எமைப்படைத்தாய்
ஊதாரி வாழ்வை ஏனளித்தாய்
உள்ளங்கள் வெறிச்சோடி வேகுதே
உதவாத கொடுமையால் நாடும் வாடுதே
கள்ளமில்லா மனதாலே சொல்கின்றோம்
கைகூப்பி உன்னையே நாளும்
வணங்குகின்றோம்
கதிரவன் ஒளிவீசும் கொக்கட்டிப் பதியமைந்த
கல்நந்தி முன் அமர்ந்த கடவுளாரே

எ) எங்களின் தலைவிதி இப்படித்தானோ
எம்மவர் கொடுமையில் அழிவுதானா
இகழ்வுக்குத்தானோ நாங்கள் பிறந்தோம்
இரவு பகல் பாராமல் வதைகளால் மடிந்தோம்
இன்பமே ஒருநாளும் கண்டதுமில்லை
துன்பமே சூழ்ந்து சோகமாய் மடிந்தோம்
துணிந்தவூர் கொக்கட்டி மரத்திலே உதித்த
துயர் தீரும் லிங்கேசா அருள்செய்வாயே

ஏ) ஏமாந்தோம் இழந்திட்டோம் எல்லாம் நாமே
ஏராளம் மக்களையும் பலிகொடுத்தோமே
தாராள வார்த்தைகளால் கெஞ்சிக் கேட்டோமே
தயங்காமல் கூடியும் வாழ்ந்து பார்த்தோமே
தரணியிலே தலைநிமிர காலமில்லை
தரம் குறைவாய் தமிழர் நாம் இங்கு ஆனோம்
தமிழ்ப் பதியாம் கொக்கட்டிச்சோலை ஆழும்
தான்தோன்றீஸ்வரனே அருள்செய்வாயே

ஐ) ஐயனே எம்மினத்தைப் பார்ப்பாய் நீயே
ஆதரித்து ஒற்றுமையாய் வாழ வைப்பாய்
கண்ணீரை மாற்றியே வழிகள் சொல்வாய்
கலக்கமுறும் மக்களுக்கு கண்துடைப்பாய்
ஒழுக்கமுறை எம்மையே உதவி செய்வாய்
அடக்குமுறை ஒழிப்பதற்கு வேல்எடுப்பாய்
ஆடி அருள்புரியும் நடராசப் பெருமானாரே
கோடிவரம் தருவாய் கொடுமை தெறிக்கவே

ஒ) ஒழுக்கமுடன் உன்னையே வணங்குகின்றோம்
ஒருபொழுதும் உன்நினைவை விடவேமாட்டோம்
ஒற்றுமையாய் இருப்பதைத்தான்
விரும்புகின்றோம்
உலகத்தின் அமைதிக்காய் உழைக்கின்றோம்
உறுதியை ஒருபோதும் அழிக்கமாட்டோம்
உரிமையைப் பெறும் மட்டும் சலிக்கமாட்டோம்
ஏர் ஓடும் பெருநிலத்தில் உறையும் தேவே
தேர் ஓடி எமை என்றும் தேற்றுவாயே

ஓ) ஓடியே ஒளிக்க இனி இடமுமில்லை
நாடியே ஆதரிக்க எவரும் இல்லை
நடுவழியில் நாமிங்கு தவிக்கின்றோமே
நாங்கள்தான் கண்ணீரும் சொரிகின்றோமே
கொடுமைகளை ஏனையா இன்றும் தாராய்
அடிமைகளை ஆதரிக்க தயக்கம் ஏனோ
கடமைகளைச் செய்கின்ற கார்த்திகேயா
திடமான தீர்வுக்கு அருள்செய்வாயே

ஔ) ஔவைக்கு அருள் உபதேசம் செய்த
அருமையாம் உம் புதல்வர் முருகனுமே
அழைத்திட்டு ஒருதடவை வாருமையா
ஆண்ட எம்மினத்தையே பாருமையா
வேண்டுதலை மனதார ஏற்றும் நீயோ
வேதனைகள் இல்லாமல் காத்திடுவாய்
சோதனைகள் பல துடைத்த சோதிநாதா
சாதனைகள் செய்வதற்கு அருள்வாயே

(இக்காவடிச் சிந்து 23.08.1990ல் இயற்றப்பட்டு தேரோட்டம் மலரில் வெளியிடப்பட்டது)

# இது....

# அரியம் சிந்தனை...

அம்பிளாந்துறையூர் அரியம்

# அரியம் சிந்தனைகள்

01. தமிழினத்தின் தலையெழுத்துக்கள், ஐந்து(5)

    அ. அகிம்சை

    ஆ. ஆயுதம்

    இ. இராஜதந்திரம்

    ஈ. ஈழம் (.)

    உ. உலகம்

02. தாய் நிலத்தின் பற்றில்லாதவன் தாயிலும் பற்றில்லாத வன், மண்ணின் பற்றில்லாதவன் மனைவியிலும் பற்றில்லாதவன்.

03. பொறியியலாளரிடம் நோய்க்கு மருந்து எடுக்க முடியாது
    வைத்தியரிடம் வீடுகட்ட மதிப்பீடு பெறமுடியாது.

04. நாயிடம் நன்றியைக் கற்றுக் கொண்டதால்தான் மனிதன் நன்றியில்லாமல் வாழ்கிறான்
    நாய் நாய்க்கு நன்றி செலுத்துவதில்லை,

05. காகத்திடம் ஒற்றுமையைக் கற்றுக்கொள்ளாமல் விட்டதால்தான்
    மனிதன் ஒற்றுமையின்றி வாழ்கிறான்
    காகம் காகத்திற்கு மட்டுமே ஒற்றுமை செலுத்தும்

06. கொள்கையில் உறுதியாய் இரு
    கொள்ளையில் எதிரியாய் இரு

07. அரசியல் என்பது அபிவிருத்திக்கு தலையாட்டுவது மட்டுமல்ல
    அபிலாஷைகளை வென்றெடுப்பதும் தான்

08. புலிக்கு சிரிக்கத் தெரியாது பிடிக்கத் தெரியும்

09. பற்று இல்லாதவன் வெற்றி இல்லாதவன்.

10. பிராமணனுக்கு கோழிபுரியாணி சமையலைக் கற்றுக்கொடுப்பது வீண்
இஸ்லாமியனுக்கு பன்றி சமையலைக் கற்றுக் கொடுப்பது வீண்
பொருத்தமானவருக்கு பொருத்தமானவைகளை கற்றுக்கொடு

11. சிவன் கோயிலுக்குள் யேசுநாதரைக் காணமுடியாது
பள்ளிவாசலுக்குள் புத்தரைக் காணமுடியாது
பான்சாலைக்குள் அல்லாவைக்காணமுடியாது
மாதாவின் ஆலயத்தில் மாரியம்மனைக் காணமுடியாது ஆனால்
எல்லாத் தலங்களிலும் இறைவனைக் காணலாம்

12. மானத்தைக் காப்பது உடை
தன்மானத்தை விப்பது நடை

13. எல்லா மலர்களும் பூசைக்கு எடுப்பதில்லை
எல்லா மனிதர்களும் சொர்க்கத்திற்குச் செல்வதில்லை

14. கடவுச் சீட்டு எடுப்பவர்கள் எல்லாம் வெளிநாடு போவதுமில்லை
வெளிநாடு போனவர் எல்லாம் கடவுச் சீட்டு எடுத்தவருமில்லை

15. சந்ததியை விற்றுப் பிழைக்காதே
சலுகைக்காக விலை போகாதே

16. வாழை இலையில் உணவை வைத்து உண்ண முடியுமே தவிர
வாழை இலையை உண்ண முடியாது
குறிஞ்சா இலையை உண்ணமுடியுமே தவிர
குறிஞ்சா இலையில் உணவை வைத்து உண்ணமுடியாது

17. நெல்லை விதைத்த வயலில் சோழனை அறுவடை செய்ய முடியாது

18. பயணங்களில் முள்ளும் வரும், கல்லும் வரும், முள்ளிவாய்காலும் வரும்,
மாவிலை ஆறும் வரும், நந்திக்கடலும் வரும்,
தடைகளைக் கடந்துதான் விடைகளைத் தேடவேண்டும்
இது விடுதலைப் பயணத்திற்கும் பொருந்தும்.

19. உன்னால் உழைக்க முடியாவிட்டால்
பெண்ணால் பிழைப்பு நடத்தாதே
உழைக்கும் சக்தி வரும் வரை
உன் திருமணத்தை ஒத்தி போடு.

20. உணவுக்காக உரிமையை விற்றுவிடாதே
பிழைப்புக்காக உணர்வை விட்டு விடாதே

21. தியாகிகள் சாகலாம் தியாகம் சாகாது.

22. திருமணங்கள் சீதனங்களால் நிச்சயிக்கப்படும் வரை
வாழ்க்கை சீரழிவுக்கு உந்தப்படுகிறது.

23. எட்டி நின்றால் வெற்றியில்லை தொட்டு நின்றால் வெற்றியுண்டு.

24. பொதுநலன் வெற்றிபெற சுயநலத்தை அடவு வைக்கலாம் ஆனால்
சுயநலன் வெற்றிபெற பொதுநலனை அடவு வைக்கக்கூடாது.

25. உன்னை எனக்குப் பிடிக்கவில்லைதான் ஆனால்
உனது கருத்து எனக்குப் பிடிக்கிறது அதனால்
உன் கருத்தை ஏற்றுக்கொள்கிறேனே தவிர
உன்னை ஏற்கத் தயாரில்லை

26. தவறை தவறாக ஏற்றுக் கொள்ளாதவரை
தவறுகள் தவறாகவே தொடரும்

27. காதலித்துப்பார் பெண்ணை மட்டுமல்ல
சொந்த மண்ணையும் தான்

28. ஒரு இனத்தின் அடையாளங்கள் காப்பாற்றப்படவேண்டுமானால்
அந்த இனத்தின் தனித்துவமான அரசியல் பலம் காப்பாற்றப்பட வேண்டும்

29. உனது உயர்ச்சிக்காக சமூகத்தை விலை பேசாதே
சமூகத்தின் உயர்ச்சிக்காக உன்னையும் இழக்கத்துணி,

30. பதவி உயர்வுக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும்
அநியாயங்களுக்கெல்லாம் நியாயப்படுத்தி ஆதரவு தேடாதே

31. உதடுகளால் ஆயிரம் தடவை புகழ்ந்து பேசுவதை விட
உள்ளத்தால் ஒரு தடவை உதவி செய்யப்பழகு.

32. நான் உனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக
நான் சார்ந்த கட்சி பிடிக்கவில்லை எனக் கூறாதே
எனது கொள்கை தான் கட்சியின் கொள்கை என எண்ணதாதே

33. 'அவர்கள் செய்வார்கள்' என்ற வார்த்தையை 'நாங்கள் செய்வோம்' என மாற்றும் போதான் எதிலும் வெல்லமுடியும்.

34. நிலத்தின் விடுதலை கிடைக்க வேண்டுமானால் இனத்தின் ஒற்றுமை அத்தியாவசியமாகும்

35. போரில் வெற்றியீட்டலாம் சமாதானத்தில் வெற்றியீட்டுவது கடினம் சமாதானம் வெற்றிபெற போரின் காரணம் பூர்த்திசெய்யப்பட வேண்டும்

36. எல்லோரையும் திருப்திப்படுத்தி எதையுமே செய்யமுடியாது

37. எல்லா நாடுகளிலும் சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை எல்லா மனிதர்களும் ஒரே திசையால் பயணிப்பதுமில்லை

38. உணவை மறந்தாலும்
உணர்வை மறக்காதே

39. தேடல் இல்லாத வாழ்க்கை
கூடல் இல்லாத திருமணம் போன்றது.

40. வாள்பிடிப்பவன் எல்லாம் வீரனும் அல்ல
வால் பிடிப்பவன் எல்லாம் கோளையும் அல்ல

41. வறுமையிலிருந்து விடுபட வேண்டுமானால்
மதுபான சாலைகள் பூட்டப்படவேண்டும்

42. மது அருந்துதல் புகைப்பிடித்தல் இரண்டும்
பகைத்தல் வாழ்வைத் தோற்றுவிக்கும்

43. அனர்த்தங்களுக்கான நிவாரணம் உதவி செய்வது மட்டுமல்ல
அது ஏற்படா வண்ணம் தடுப்பதும் தான்

44. மனிதம் மனிதருக்குள் இல்லாதவரை
மனிதன் மனிதனாக வாழமுடியாது.

45. இலங்கையின் வரைபடத்தில்
முள்ளிவாய்கால் மட்டுமல்ல நந்திக்கடல் மட்டுமல்ல
மாவிலை ஆறு மட்டுமல்ல, உன்னிச்சைக் குளம் மட்டுமல்ல, இன்றும்
வாய்க்கால்களும், கடலும், ஆறுகளும், குளங்களும் உண்டு.

46. உலகம் சொல்லட்டும் உண்மை வெல்லட்டும்
உறுதி நிலைக்கட்டும் உரிமை கிடைக்கட்டும்

47. செல்வாக்கு உயர வேண்டுமானால்
சொல்வாக்கு உண்மையாக வேண்டும்.

48. இரண்டு இனம் சார்ந்த விடுதலைப் போரின் போது
வெற்றியீட்டிய இனம் அதில் போராடியவர்களை வரலாற்று
நாயகர்களாக சித்தரிப்பதில் தவறில்லை;
அதே போல் மறு முனையில் மாண்டவர்களை அந்த இனம் சார்ந்தவர்கள்
நினைவு கூருவதில் தவறு இல்லை.

49. மடிந்த உறவுகளுக்காக மனதுக்குள் தீபம் ஏற்றுவோம்
மறுபடியும் விடை தேடுவோம்.

50. தீர்வு வரும் வரை சமாதானம் இல்லை
சமாதானம் வரும் வரை நிம்மதி இல்லை
நிம்மதி வரும் வரை பயணங்கள் ஓய்வதில்லை

51. இலக்கு அடையும் வரை இலட்சியத்தைக் கைவிடாதே

52. முட்டையில் வெண்கருவும், மஞ்சள் கருவும் உள்ளது போன்றுதான்
இங்கு இனவாதமும் ஆணவமும்உள்ளது
குஞ்சு பொரிக்க அது இரண்டும் தேவை
ஆட்சி புரிய இது இரண்டும் தேவை

53. விடுதலை என்ற பாடத்தில் சித்தியடைய
அகிம்சையென்ற பேனாவால் 30 வருடமாக பரீட்சை எழுதினோம்
ஆயுதம் என்ற பேனாவால் 30 வருடமாக பரீட்சை எழுதினோம்
சித்தியடையவில்லை தற்போது
இராஜதந்திரம் என்ற பேனாவால் எழுதுகின்றோம்
பேனாக்கள் மாறியுள்ளதே தவிர பாடமும் பரீட்சையும் மாறவில்லை.

54. தமிழ் தேசியம் தொடர்பான சில சொற்பதங்கள் எம்மால் இன்று உச்சரிக்கமுடியாத
தூஷணமாக இருப்பதை அனுமதிக்க முடியாது.

56. பூக்கும் மலரெல்லாம் பூசைக்கு எடுப்பதில்லை
காய்க்கும் காயெல்லாம் கறிக்கு உதவுவதுமில்லை
விதைத்த நெல் எல்லாம் விதையாவதுமில்லை
நினைத்த கொள்ளை ஒரு போதும் அழிவதுமில்லை

57. நீதி மன்றத்தில் பொய்சாட்சிகள் வாதிட முடியுமே தவிர
மனச் சாட்சிகள் வாதிட முடியாது

58. எல்லா நாடுகளிலும் சூரியன் உதிப்பதுமில்லை
எல்லா ஊர்களிலும் சுனாமி வருவதுமில்லை

59. சட்டங்களால் மட்டும் எதிர்பாராத தீர்வை பெறமுடியாது
திட்டங்களால் மட்டும் எல்லாவற்றையும் அடையவும் முடியாது.

60. சட்டம் சில வேளை குற்றவாளியையும் நிரபராதியாக்கிவிடும்
நிரபராதிகளையும் குற்றவாளியாக்கிவிடும்.

61.
சட்டம் எல்லோருக்கும் சமனன் என்பது பொய்
ஒரு சிலருக்கு மட்டும் என்பதுதான் மெய்

62. சம்பவங்களை செய்திகளாக மாற்றவும் முடியும்
செய்திகளை சம்பவங்களாக மாற்றவும் முடியும்
ஊடகங்கள் உண்மையாகவும் செயல்படும்
உண்மைகளை ஊடகங்கள் மறைக்கவும் முடியும்

63. 'நடுநிலை' ஊடகங்களின் பொதுவான வாக்கியம் அதை
எல்லா ஊடகங்களும் செயலில் தக்கவைப்பதுமில்லை

64. ஊடக சுதந்திரம் உதட்டளவில் உள்ள நாட்டில்
உண்மைச் சுதந்திரம் உள்ளத்தால் விழுங்கப்படும்.

65. காதலிப்பவர் எல்லாம் திருமணம் செய்வதுமில்லை
திருமணம் செய்தவர் எல்லாம் காதலித்தவருமில்லை

66. இனவாதம் இரண்டறக் கலந்த நாட்டில்
சமத்துவம் தனியாக உலாவ முடியாது

67. நமது நாட்டு அகராதியில் 'நல்லிணக்கம்' என்ற சொல்லுக்கு
அர்த்தம் இல்லை

68. அபிலாஷை மறுக்கப்பட்ட சமூகத்திற்கு
அபிவிருத்தி தீர்வாக முடியாது

69. ஆண் பெண்ணை அடிமையாய்க் கருதாததனால்தான்
பெண் விடுதலைக்கான தேவை ஏற்பட்டது
பெண் ஆணை அடிமையாய் கருதுவதால்தான்
ஆண் விடுதலைக்கான தேவை இல்லாமல் போனது.

70. எல்லா ஆசிரியர்களும் எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொடுக்க முடியாது
எல்லா மாணவர்களும் எல்லாப் பாடங்களிலும் சித்தி பெறவும் முடியாது.

71. பரீட்சையில் சித்தி பெற வைப்பது மட்டும் கல்வி இல்லை
வாழ்க்கையில் சித்தி பெற வைப்பதும் கல்விதான்

72. ஒரு இனத்தின் எதிர்காலம் நிலத்தில்தான் தங்கியுள்ளது
நிலம் இல்லையாயின் இனம் நிலைத்திருக்கமுடியாது.

73. எல்லா விடயங்களிலும் வெளிப்படைத் தன்மை இருந்தால்
எதுவுமே முடிவெடுக்க முடியாது

74. எல்லோரையும் திருப்திப்படுத்தி எதுவுமே செய்யமுடியாது அதைப்போல்
எல்லோரையும் அதிருப்தியடையவைத்தும் எதுவுமே செய்ய முடியாது.

75. தமிழினத்தின் பிறப்பு வீதத்தை கூட்ட வேண்டியது காலத்தின் தேவை
அவர்களின் பொருளாதாரத்தைக் கூட்டவேண்டியது அனைவரின் கடமை

76. அன்பான குடும்பத்திற்கு ஐந்து பிள்ளைகளாவது வேண்டும் – இது
வம்பான வார்த்தையல்ல வருங்கால தேவைக்கே

77. நிலத்தைக் காக்க குலத்தைப் பெருக்கு
வளத்தைக் காக்க பலத்தைப் பெருக்கு

78. சீதனத்தை எதிர்பார்த்து திருமணத்தை நிறுத்திக் கொள்பவன்
சீரான வாழ்வின்றி சிலகாலம் திண்டாடுவான்

79. பிறப்பும், இறப்பும் இறைவனால்தான் தீர்மானிக்கப்படும்
விருப்பும் வெறுப்பும் மனிதர்களால் தீர்மானிக்கப்படும்

80. மதுபானம் அருந்துதல், புகைபிடித்தல் அவமான வாழ்வுக்கு வித்திடும்
மதிகெட்டு நொந்து சதிகாரச் செயலுக்கு தூபமிடும்

81. இந்துமதம் பெண்களுக்கான சமத்துவத்தை வழங்கியுள்ளது இதற்கு சாட்சியாக பல பெண் தெய்வங்களை காணலாம். ஆனால், ஆலயங்களில் பூசை செய்யவிடாமல் மட்டும் பெண்களை ஒதுக்கியுமுள்ளது.

82. உலகமெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதால் பெருமை அடைகிறோம்
உலகில் தமிழர்களுக்கான நாடு இல்லையென்பதால் வேதனை அடைகிறோம்.

83. நேற்றுக் கொள்கைவாதி
இன்று கொள்ளைவாதி
நாளை கொல்லைவாதி

84. பாடசாலைகளில் கல்வியைக் காணலாம்
பல்கலைக்கழகத்தில் அறிவைக் காணலாம்
பாராளுமன்றத்தில் இனவாதத்தைக் காணலாம்

85. நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது என்றால்
நாட்டின் தலைவர்களுக்கு இன்றும் பாதுகாப்பு ஏன்

86. சாதிகள் இல்லையென பாரதியார் கூறினாலும்
'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என ஔவையார் கூறும் போது சாதிகள் உள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளார்

87. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' எனக்கூறிய அதே ஔவையார் தான் 'கிட்டாதாயின் வெட்டென மற' எனவும் நேர் எதிரான கருத்தைத் தந்துள்ளார் என்பதையும் நாம் புரிய வேண்டும்.

88. தொலைபேசிகள் தொடர்புகளையும், தகவல் பரிமாற்றத்தையும் இலகுபடுத்தியுள்ளது
என்பது உண்மைதான் ஆனால் அதே தொலைபேசிகள் தான் கலாசார சீர்கேட்டிற்கும் வித்திடுகிறது.

89. இலத்திரனியல் ஊடகங்களால் உலகத்தின் சம்பவங்களை உடனே அறிந்து கொள்ள முடிகிறது.
அதே இலத்திரனியல் ஊடகங்கள்தான் கலாசார சீர்கேடுகளையும் விதைக்கிறது.

90.
புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இருக்குமானால்
முரண்பாடுகள் தோன்ற வாய்ப்பிருக்காது.

91.
உடைகளால் உணர்வு தீர்மானிக்கப்படுவதில்லை
கோமணத்துடன் வாழ்ந்தாலும் கொள்கை மாறாத மனம் வேண்டும்.

92.
தமிழினத்தின் தனித்துவமான அரசியல் பலம் இல்லாமல் போகுமானால்
தமிழர்களின் அடையாளங்களும் இல்லாமல் போய்விடும்.

93.
வரலாறுகளையும் சரித்திரங்களையும் பறைசாற்றுவதால் மட்டும்
தமிழர்களின் பூர்வீகத்தை தக்கவைக்கமுடியாது
வரலாற்றையும் சரித்திரத்தையும் தக்கவைக்கக் கூடிய
அரசியல் பலத்தை உறுதி செய்வதால் தான் அது சாத்தியமாகும்.

94.
'இறுதித் தீர்வு எட்டும் வரை உறுதியான அரசியல் பலம் எமக்குத் தேவை
உறுதியான அரசியல் பலம் இல்லையெனின் அறுதியான தீர்வு எட்டாக் கனியாகிவிடும்'

95.
ஒற்றுமை என்ற பெயரில் ஊதாரிகளை உள்வாங்குவதால்
உறுதியான கொள்கையில் உடைவு ஏற்பட வாய்ப்பாகும்

96.
எல்லா மதங்களும் நன்மையைத்தான் போதிக்கின்றன ஆனால்
எல்லா மனிதர்களும் மதங்கள் சொல்வதைப் பின்பற்றுவதில்லை
மதம் சொன்னதை மறந்து மதம் கொண்டவர்களாக மாறுகின்றனர்

97.
தமிழர்களிடம் இன்று எஞ்சியிருப்பது உணர்வுகள் மட்டுமே
உணர்வுகள் தான் உரிமையின் தேவையை தக்கவைக்கிறது

98.
பத்துப் பச்சோந்திகளுடன் பழகுவதை விட
ஒரு உறுதி மிக்கவன் நண்பனாக இருப்பது மேல்
அது உனக்கும் நல்லது ஊருக்கும் நல்லது

99.
சலுகை அரசியலும், வியாபார அரசியலும், உரிமை அரசியலுக்கு முட்டுக்கட்டை போடலாம்
ஆனால் உறுதிமிக்க கொள்கையிருந்தால் முட்டுக்கட்டைகளை படிகற்களாக மாற்றமுடியும்.

100. தமிழன் தமிழனாக மாறாத வரை தமிழர்க்கு எதிர்காலம் இல்லை.

101. கொள்கை உணர்வு மிக்கவன் செத்தபின்பும் வாழ்வான்
கொள்கை உணர்வு அற்றவன் வாழும் போதே செத்தவன் ஆவான்'

102. தலைமேல் சுமை கூடினால் தனித்திருந்து சிந்தியாதே
தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள் தற்கொலை செய்ய எண்ணம் வராது

103. 'எஞ்சிய உணர்வுகளும் கொஞ்சமாவது குறையுமானால்
கெஞ்சிப் பல் இழித்து அஞ்சி வாழ நேரும்'

104. பொன்னாடை அணிவித்து பெருமை தெரிவிப்பதை விட
போகவிட்டு புறம் பேசாமல் இருப்பதுதான் மிகப்பெரிய பெருமை

105. காதல் தோல்வி என்பது சுத்தப் பொய் ஏனென்றால்
காதல் எப்போதுமே யுத்தம் செய்வதில்லை

106. சமாதானத்திற்காக போர் செய்த நாட்டில்
'சுதந்திரத்திற்காக வார் (Bar) திறப்பதில் ஆச்சரியம் இல்லை'

107. ஊக்கம் இருப்பவன் உழைத்து முன்னேறுவான்.
ஏக்கம் இருப்பவன் இளைத்துப் பின் செல்வான்.

108. கோவணம் கட்டி குடிசையில் வாழ்ந்தாலும் கொள்கை மாறாதவனாய் இரு
கோடீஸ்வரனாய் மாடியில் இருந்தாலும் கொடுங்கோலை எதிர்பவனாய் இரு

MSW

“உணர்ச்சிப் பெருக்கோடு
உவந்துளான் படிமின்
உழைத்துண்ணும் சமூகத்தை
காணத்துடிக்குமிவன்
குழைந்து சொல்வரிகள்
பாராட்டுக்குரியன.”

– த. சாம்பசிவ சிவாச்சாரியார் (B.Com)
காயத்திரி கலாசார பீடம்.

“காலத்தின் தேவை கருதியும்,
சமூகத்தின் நல்வழியினை
நோக்காகக் கொண்டும் வடித்திருக்கும்
இப்புத்தகமானது பொருத்தமான
செயல்பாடாகும்.”

– இரா. சம்பந்தன் (பா.உ)
தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்.

“சமகால அரசியல் பின்புலத்தில்
சமுகத்தின் மன உணர்வுகளையும்
குமுறல்களையும் கேள்விகளையும்
துணிவோடு வெளிப்படுத்துகின்றன.”

– பேராசிரியர் செ. யோகராசா.

“உண்மை, உணர்வு, உரிமை, உறுதி,
உறுத்தல், உயர்வு அனைத்தும் கவர்ந்த
அம்பிளாங்துரையூர் அரியத்தின் நூல்
காலத்தின் கண்ணாடி.”

– வி.ஜி. ஸ்ரீநேசன்,
பிரதி கல்விப்பணிப்பாளர்



“நெஞ்சில் உதித்தவைகளை
நேரிய தமிழால் செதுக்கி
நூதனங்கள் கோர்த்து
நூலாக்கம் செய்துள்ளேன்
சுவைப்போர்க்கு தேனாகும்
சிலருக்கு வேப்பங்காயாகும்
எதுவானாலும் பரவாயில்லை
என் தமிழ் இதுவாகும்.
படித்துப் பயன்பெறுவீர்
பற்றுள்ள உறவுகளே.”

– அம்பிளாந்துறையூர் அரியம் –

ISBN 9789554447509

1 SW